உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | விபவ | மலர் |
|---|---|---|
| ச. | தை, மாசி, பங்குனி. | கம. கக, கஉ. |

## நமது பொழில்.

தமிழ்த்தாயின் தண்ணருளால் நமது பொழிலின் நான்காம் துணர் முற்றி இன்று வெளிவருகின்றது. நமது பொழில் தொடங்கி நான்காண்டுகள் ஆயின; இந்த நான்காண்டுகளிலும், திங்கடோறும் மலரத்தகும் மலரும், ஆண்டுதோறும் முற்றத் தகும் துணரும், சிறிதும் பெரிதும் தாழ்த்தி வெளிவந்திருந்தும், நமது பொழில் உறுப்பினர்களும், நமது பொழிற்கு மாற்றிதழ்கள் அனுப்பிவரும் இதழாசிரியர்களும் அத்தாழ்வுகளையெல்லாம் பொறுத்தருளி அன்பொடு பொழிலைப் புரந்துவந்ததற்காக அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

சில திங்களாக நமது பொழில் மிக விரைவாக வெளிவந்து கொண்டிருந்ததற்கும், இன்று, பங்குனி இறுதியில் வெளிவாற் பாலதாகிய பங்குனி மலரையும் கொண்டு வெளிவந்ததற்கும் உறுமுதலாவார், நமது பொழிற்குப்பல அரிய கட்டுரைகளை இடையறாது எழுதியுதவிவந்த தமிழ்ப்புலவர்களாம் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள், திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் முதலாய தமிழன்பர்களென நமது பொழிலன்பர்கள் அறிவர். இங்ஙனம் பேருதவி செய்து பொழிலைப்புரந்துவரும் கட்டுரையாளர்களாம் பேரறிஞர்கட்கெல்லாம், எமது நன்றியறிவு, வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

இன்னும், தமிழ்ப்பொழிலின் அச்சுவேலைபற்றி மெய்யும் உள்ளமும் அலைந்து வருந்தாமல், இவ்வேலையில் உரிமை பாராட்டிச் செவ்விதின் முடித்துத் தந்துவரும் தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தாரின் கூட்டுறவின்றேல், நமது பொழில் குறித்தகாலத்து வெளிவருவது அருமையாகுமாதலின், அன்னார்க்கும் எமது மனமார்ந்த நன்றியறிவினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

நமது பொழில், ஒரு பெரும் சங்கத்தின் சார்பாக நிகழ்ந்து வருதலின், இது என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நிலையினது என அவ்வப்போது நாம் கூறிவந்திருப்பதைப் பொழில் அன்பர் அறிவர். பொழிற்கு ஆசிரியர் கழகம் ஒன்று அமைந்திருப்பதும், பொழில் வேலைகள் சங்க அன்பர்கள் சார்பினதாகிய கூட்டுறவுப் பதிப்பகத்தில் நடைபெறுவதும் பொருட்டாக, இனி, பொழில்மலர்கள் உரிய காலங் கடவாது வெளிவரும் எனவும், பொழிலின் கட்டுரை வளங்களும் ஏனைச் சிறப்புக்களும் நாளுக்குநாள் வளர்ந்தோங்குமெனவும் உறுதி எய்தியுளேம்.

நமது பொழில் தமிழ்த்தொண்டொன்றே கருதி வெளிவருவதொன்றெனவும், ஊதியமே கருதி வெளிவருவதன்றெனவும் அவ்வப்போது நாம் கூறிவந்ததை அன்பர் அறிவர். கடந்த நான்காண்டுகளாக நம் பொழில்நிகழ்ச்சிபற்றி எய்திய பொருட்குறைகளைப் பொருள் செய்யாது, மேலும் மேலும் பொழிலை வளம்பெற நடாத்த எண்ணிவரும் சங்க முயற்சியைச் சங்க உறுப்பினர்களும் பிறருமாய தமிழன்பர்கள் மனங்கொண்டு பொழிலைப்புரக்க முன்வருவார்களாக. தமிழ்ப் பொழிலைத் தொடங்கி நடத்துமாறு பன்முறையுங் கூடித் துணிந்த சங்க உறுப்பினர்தாமும் பொழிலின் உறுப்பினராகாமல் வாளாவிருத்தல் முறையாகுமா? சங்க உறுப்பினர்காள்! சங்க அன்பர்காள்! தமிழன்பர்காள்! நமது தமிழ்த்தாயின் திருவிற்றிருக்கையாகும் நமது பொழிலை அணிபெறுத்தப் பல்லாற்றானும் முயலும் சங்கத்திற்கு உதவி செய்ய மனமுவந்தெழுமின்! அன்பர்களுடன் இதனைப் புரந்திடுமின்!

ஐந்தாம் துணரின் முதன்மலர் சுக்கில ஆண்டு சித்திரை முதலில் வெளிவரும். அதனை, இதுகாறும் பொழிலைப் புரந்துவரும் ஆண்டுறுப்பினர்கட்கும் ஏனைச் சங்க உறுப்பினர், சங்க அன்பர், தமிழன்பர்களாய திருவாளர்கட்கும் விலைகொளும் (வி. பி. பி.) அஞ்சலில் உரிய தொகைக்கு அனுப்ப எண்ணியுளேம். யாவரும் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்வார்களென நம்பியுளேம்; அங்ஙனம் ஏற்றுக்கொள்ளும் ஒப்பத்தினை, நம் அன்பர்கள் இதனுடன் வரும் அஞ்சற்றுளில் (கார்டு) எழுதியனுப்புவார்களென நாளும் எதிர்நோக்கியுளேம்.

வே.

## கட்டுரை எழுதும் அறிஞர்கட்கு வேண்டுகோள்.

தமிழ்ப் பொழிலில் வெளிவரும் கட்டுரைகளிற் பல, அவ்வப்போது முடிவுறாது நீளத்தொடர்ந்து செல்கின்றமையின், முற்றொடர்ச்சிகளை ஒவ்வொருகாலும் தேடிப்படித்தறிவதும் பிற்றொடர்ச்சி அறியப்படாமையும் படிப்பார் ஊக்கத்தினைக் குறைக்கின்றன என்றும்; ஒருசில, படிக்கும் பெரும்பான்மையர்க்குப் பயன்படாதவாறு மிக்க நுண்பொருளனவாயும் திண்ணிய நடையினவாயும் இருத்தலின், பெரிதும் பயனில்வாகின்றன வென்றும்; சிற்சில, சிலரைக் குறைகூறலே பொருளாகக்கொண்டு எழுகின்றன என்றும் நமது பொழிலன்பர் சிலர் எழுதியுள்ளார். (இங்ஙனம் கட்டுரைகளின் ஆக்கங்குறித்து எழுதிய நம் அன்பர்கட்கு எம் வந்தனம் தெரிவிக்கின்றேம்.)

ஒவ்வொரு கட்டுரையும் அந்தந்த மலரிலே முற்றிவிடலே நலம் என்பதுதான் நமது எண்ணமுமாகும். இதுபற்றிக் கட்டுரை எழுதும் அன்பர்களை முன்னரும் வேண்டியுளேம்; இதுபோழ்தும் வேண்டுகின்றேம். நம் அன்பர்கள் தங்கள் தங்கள்

கட்டுரைகளை முழுவதும் எழுதி முடித்து அனுப்பிவிடுவார்களாயின், ஒருங்கே வெளியிட்டோ, மிக நீளுவதாயின் தனித் தனித் தலைப்புக்கள் தந்து வெளியிட்டோ 'தொடரும்' எனும் குறை தொடராதவாறு பார்த்துக்கொள்வேம்.

இனி, நமது பொழில், நாள் இதழ்களின் (Daily) கட்டுரைகள் பலவற்றைப்போல, தலைப்பினைப் பார்த்தோ, முதலிறுதி பார்த்தோ நெகிழ்த்துவிடத்தகும் எளிய பொருள்களைக்கொண்டு தெளிந்த நடையென்று கூறப்பெறும் பிழை மலிந்த நடையில், வெளிவரல் வேண்டுமென எவரும் விரும்பார் என எண்ணுகின்றேம். படிப்பார்க்குப் பயன் அளிக்கவல்ல அரிய பொருள்களையே நமது பொழில் அவாவி நிற்பதை எவரும் ஒப்புவர் என எண்ணுகின்றேம். ஆயினும், பொருள்களின் அருமைக்கேற்ப, நடையும் திண்ணிதாக இருக்கவேண்டுமெனும் முறையொன்றுமின்றாகலின், நமது கட்டுரையாளர்கள் தங்கள் தங்கள் கட்டுரைகளை எத்துணைத் தெள்ளிய நடையிலும் தெளிவான முறையிலும் எழுத இயலுமோ அத்துணையும் தெளிவாக எழுதிவர அன்னாரை மிக வேண்டுகின்றேம். நமது பொழில், கூடியவரையில் வேற்று மொழிச் சொற்கள் விரவாத தனித்தமிழ் நடையினையே விரும்பி நிற்பதையும் நினைவூட்டுகின்றேம்.

இனி, நமது பொழில் எம்மதத்தினையும் எம்மொழியினையும் எவ்வெக் கொள்கையினையும் எவ்வெவரையும் இழித்துக் குறை கூறும் கொள்கையுடையதன்றென்பதை நமது கட்டுரையாளர்கட்கு வற்புறுத்திக் கூறுகின்றேம். தத்தம் கொள்கைகளை எடுத்துரைக்கும் ஆற்றில், இன்றியமையாமை யுளதேல், பிறரை இகழாமல் அவர்தம் கொள்கைகளை நேர் வழியில் மறுத்துரைக்கும் அளவில் அமைந்தெழுத அன்னாரை மிக மிக வேண்டுகின்றேம்.

ஒவ்வொரு திங்கள் முதலிலும் அவ்வத்திங்கள் மலரை வெளியிடவிருக்கும் எமது உறுதி நிலை, நம் கட்டுரையாளர் கையிலே இருப்பதால், அவர்தம் அருளை நாடிநிற்கின்றேம்.

வே.

# குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 331-ஆம் பக்கம்.)

## தாலப்பருவம்.

குருகு லோத்தமர் தூதா மீபூ தாதாரா
கோல வேய்க்குழ லாலே மால்சூழ் கோபாலா
வருகு பாத்திப ரானர்.கோலூ டாடாமே
யவனி காக்கு மமோகா தாலோ தாலேலோ
சுருதி நூற்றொடை மாலா காரா மேனுள்கார்
தொடரின் வீக்கிய வீரா சேரா சோழாவே
ழெருது கோட்பட மூள்போர் மார்பா தாலேலோ
வெதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. (க)

முரியு நீர்த்துகிர் காரா கீழ் கா..டே
முழுது கோட்டெழு பாரா வாரா தாலேலோ
வுரிய நாற்பெரு வேதா சாரா கோல்கோடா
வுலக மாக்கல மூர்மீ காமா தாலேலோ
வரிய சூர்ப்பிண வோடே நீர்நாய் மீன்மேய்போ
தலரு நாற்றிதழ் மீதார் தாதூ தாதேதே
னிரியல் போய்ப்பொழில் சூழ்சோ ணாடா தாலேலோ
வெதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. (உ)

முருகு வாய்த்தது ழாயே சூழ்தோ ளாவாயா
முளரி மேற்குடி வாழ்வாள் கேள்வா தாலேலோ
வரிவ ராற்பக டாண்மே லேபாய் சோணாடா
மருது சாய்த்தொரு மாவாய் கீள்வாய் தாலேலோ

வரிய மாத்தனின் மேலா மோரோர் தோராளோ
டரசர் நூற்றுவர் நேர்போர் மீள்வார் போர்போதா
திரிய வேற்றெதிர் தேரூர் பாகா தாலேலோ
வெதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. (௯)

பரவு காட்டிய நாவோ டேகூர் நோவேடே
பனிசெய் பொற்கிரி கோண்மா மீன்வாய் வீழாமே
வரவு காட்டு முராரி மேவார் நேரேதூண்
வயிறு வாய்த்த பிரானே தாலோ தாலேலோ
யரவு காட்டிய தேரோ னேழ்பா ராளாமே
யருண னோட்டிய தேர்போய் மேல்பால் வீழாமே
யிரவு காட்டிய மாலே தாலோ தாலேலோ
வெதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. (௪)

.................................................................
.................................................................
.................................................................

பேணும் புவியாள் பூணுங்கடவுட் பெருமங் கலநாணின்
றிருவாய் ரவியாய் மதியாய் நதியாய் மறையாய் மனுநூலின்
செயலா யமுதப் புயலா யியலா யிசையா யொருதெய்வத்
தருவா யுதவுஞ் செங்கோ லுடையாய் தாலோ தாலேலோ
சயவா ளரியே வயவா ளபயா தாலோ தாலேலோ. (௰)

தால் முற்றும்.

---

## சப்பாணிப் பருவம்.

கடலென மலையென மழையென வருவது பற்றிய வித்தானை
கசரத துரகத நடுவிடை யறவிடை யொப்பன வப்பாதி
யுடன்மலை படவொரு திகிரியை விடுதலின் விக்கிரம முக்கூடல்
ஒருதனி முதுகிட வருமவன் வழிமுதல் கொட்டுக சப்பாணி
வடமதுரையிலொரு புடையிடை வனிதையர் மெய்க்கவின் மைக்காவின்
வயிறற மணியுகு வரிவளை யுடனணி பொற்றொடி சிற்றுடைக்
கொடிமற கனடயவு மொளிபெற வருமுகில் கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (௧)

இடையிடை சுனைகுடை வரையர மகளிர்கள் கச்சரி பச்சோலை
யெறிதிரை நிரைதரு விறுவரை யிசையென புத்தகின் முத்தார
மடையவு மடையரி யடைவன கதிர்முதிர் நெற்பனை கற்பூர
மளிமுர லிசைவர மிசைவரு வனசில பச்சிலை கச்சோல
முடைமது நதிதர வொழுகெழு தலைவன முக்கனி தக்கோல
முடுதிரை பிறைவளை நெடுவரை தழுவிய பித்திகை கத்தூரி
குடதிசை தரவிவை குணர்தரு நதியிறை கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (௨)

இடிமுர செழுதிய கொடியுடை யொருதிரு மைத்துனன் மெய்த்தூதா
வெழுகட லெழுகிரி யெழுபொழி லெனவிவை சுற்றிய பற்றுளா
வடியினி லிருமுரு டொருபொரு களிறடு மற்புத மற்போரா
வழகிய பொதுவிய ரகில்கமழ் துகில்பல பற்றிய சிற்றாயா
பொடிவிடு புரவியி னெதிர்பொரு மதிரதருட்கிய முட்கோலா
பொருமிரு சிறகரி லிணையெழு புவனமு முட்படு புட்பாகா
கொடிவிடு மீனவன் றொடியொளிர் தளிர்கொடு கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (௩)

உடைபுர வழுதியர் வனசரர் கடைதொறு முய்ப்பன கைப்பாலை
யுழைமுழு வரிகொ டருநடர் குலபதி தைப்பன குப்பாய
மடையவு முதுகையி லவனிபர் குடபுலி யொப்பன வுப்பாத
மருமரை யவர்பதி ம க டொறமுகில் முட்டிய பட்டாலை
பிடைதரு சனகரு மகதரு மிடருற விட்டனர் கட்டாண்மை
யிகலிட மிவனது பாமில மனமக மிக்கன திக்கானை
குடைநர பதியிவன் மாபென வருமுகில் கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (௪)

பாவரு மதலைகள் மதகரி சொரிவன வெத்துறை யெத்திரம்
பணிலமு மலைகளு மொளிர்திரி வனவன மெக்கழி யெக்கானை
விருபொழு தினிமெழ வி நந்தி தருவன வெப்படை யெப்பாகை
யிருகனி களுமிள நறவமு முமிழ்வன வெப்பனை யெப்பானை

பரதவர் வனிதையர் மதர்விழி நிகர்வன வெக்கய லெக்காவி
படுகொலை மதனனு மகளிரு மகிழ்வன வெச்சுழ லெச்சோலை
குரைகட லெனவொலி மிகுமுதகையர்பதி கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (ரு)

துடிநற வறவிறல் மறலிதன் விடுகவர் நெட்டிலை விட்டேற
தலையற யமனொடு தனிபல திசைசுழல் கொட்பெரி கட்பூணி
மடிதர வுலகினி லுயிர்தொறு முயிர்தொறு மெய்ப்புடை கைப்பாசம்
வருபிணி துணிபட வரைபுரை கருநடர் நெட்டையர் கெட்டோட
வடிநிப வனிதையர் பெறவொரு குடிநிழல் வைப்பன வொப்பாரு
மணிபெற வெழுதிய வழகிய சுவைகவி னுட்செறி மட்சாடிக்
குடிபுக முடிபுனை சுரகுரு வழிமுதல் கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (சா)

அறைபடு துகிரியி னலைகட லிருள்கெட விட்டெறி வட்டான
மலம்வரு பொழுதினி லரசொடு முரசொடு முட்டிய நெட்டூரி
லிறைபட வவனெயி லெழவிடு முனைமதில் குத்திய புத்தூரை
யெரியிட முனிவொழி யிரவிதன் வழிமுதல் கொட்டுக சப்பாணி
யுறைபடு தடமுலை மணியிதழ் புகவொரு கைத்தரு மெய்த்தாதி
யுயிரொடு பொதுவிய ரொழுகொழு குனிமிசை வைப்பன நெய்ப்பானை
குறைபட வொருவிசை யமுதுசெய் திருமுகில் கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர கொட்டுக சப்பாணி. (எ)

வேறு.

அன்று கவிக்கு வியந்து நயந்து தரும்பரிசிற் கொருபோ
ராழியில் வந்து தராதல நின்று புகாரி லனைத்துலகுஞ்
சென்று கவிக்கு மகத்தது தூண்வயி ரத்தினு முத்தினுமெய்
செய்ததொர் பொற்றிரு மண்டப நல்கிய சேய்குல நாயகமே
நின்று கவித்த தனிக்குடை வானவர் ஞால நிரந்தரனேர்
நிற்ப நிறுத்திய கற்பெரு மாரி மறித்தவ னெஞ்சுபுகக்
குன்று கவித்த திருக்குல நாயக கொட்டுக சப்பாணி
குஞ்சர வல்லப வல்லபை வல்லவ கொட்டுக சப்பாணி. (அ

# சுவாமிநாதம்.

திருவாளர், இ. மு. கோவிந்தசாமிப் பிள்ளையர்கள்,
தமிழ்ப்பண்டிதர், திருவையாறு.

(முற்றொடர்ச்சி 360.)

## எழுத்ததிகாரம்.

### உ-வது பதமரபு.

எழுத்தொன்றுந் தொடர்ந்துமயற் பொருடரினே பதமா
மிதுபகாப் பதங்கள்பகு பதங்களென விரண்டாம்
மொழிப்பகுப்பாற் பயனில்பெயர் வினையொடிடை யுரியா
முற்பகாப் பதம்பகாப் பதந்தொடர்ச்சொ லலவாய்
விழைத்தபெயர் முற்றெச்சம் பிறவுமாய்ப் பகுதி
விகுதியிடை நிலையேசா ரியைசந்தி விகாரம்
பழுத்தகரு விகளினேற் பனகொண்டு முடியும்
பகுபதமூன் மூன்றினைப்பன் மூன்றிசைக்கப் புலுமே. (1)

புல்லுநட வாமடிசீ விடுகூவே வைநொ
போவெளவஃ கொடுரிஞண் பொருந்திருந்தின் றேய்பார்
செல்லேவவாழ் கேளெனும்பாட் டிருபான்மூன் றீற்றிற்
சேர்க்குமுத னிலையீண்டும் தெரிநிலையின் வினைக்கோ
சொல்பகுதி யவற்றின்விப்பி வேறுறுத லிணைதல்
சொற்றிரிதல் சிலவேவல் வினைபகுதி பொருளே
வெல்லிடங்கா லஞ்சினையே குணந்தொழிலென் றுலும்
வேறுபல வும்பெயரின் பகுதியெனக் கொளலே. (2)

கொளும்அன்று னள்ளாளா ரர்பம்மார் அஆக்
குடுதுறுவெ னேனல்லோ டம்மாமெம் மேமோங்
களவிலும்மூர் கடதறவை யிய்யாமி னிர்ரீர்
கயரவொற்று லேல்காணும் பிறவும்வினை விகுதி

விழுமிவற்றிற் சிலபலசொல் லெழுத்தீற்றாய்ப் பெயரின்
விகுதிதவ்வொற் றின்னிறப்புங் கிறுகின்று நின்று
தளர்நிகழ்வும் பவவெதிர்வு மைம்பான்மூ விடத்துந்
தரும்வினையி னிடைநிலைவே றுளசிலிடை நிலையே. (3)

இடைநிலையின் றிரிந்தியாய் தத்திரிந்து டறவா
யிறப்புதவும் பகுதிவிகு திகள்சிலபோழ் துதவும்
கடறவுவ்வீ றாய்க்குறிற்கீழ் வரும்பகுதி விகுதி
கலந்துகா மறினிறப்பைத் தருந்துறுமற் றவற்று
மடர்பவ்வீ றிறப்பெதிர்வும் டவ்வுகா மதனு
மந்தமிறப் பைபுங்குகுமீ றேவன்மறை மின்மார்
கடையியங்கோ ளெதிர்வுமிய்யுஞ் செய்புநிகழ் வெதிர்வாங்
காலமும்வெஞ் சிறுதிபல வியைபொழுதுந் தருமே (4)

தருங்காலம் பதமுதலீற் றிடையினெவை யவையே
சாற்றுமிடை நிலையதனற் பெய்முதலீற் றிடையே
வருஞ்சொல்லெழுத் தனைத்துமே யோரொருசாரி யையாம்
வாலன்னு னிச்சினத்து நந்தநுமற் றலியு
மிருங்குதநா யடனணவக் கிற்றம்வையோ வேயி
வெனுமுப்பத் தொன்றும்பிற வுஞ்சாரி யையாந்
திரிந்துகெடுஞ் சிலபதமுன் விகுதிபத முருபு
சேரினென்று பலவரும்போம் விகற்புறுஞ்சா ரியையே (5)

சாருமையால் குவினதுகண் விரிந்துதொக்கேற் புடைச்சொற்
றழூஉந்தொடர்வேற் றுமைவிளிபேர் வினைகளிடை யுரியே
சேர்தொடரல் வழிச்சந்தி தொகையைவிரித் தமைக்க
சிலபொதுவுஞ் சிலதழாத்தொ டருமுற்றோர்ந்தமைக்க
கிரிடன்மூன் றினுமெழுத்து மொழிதோன்ற றிரிதல்
கெடலெனவிகா ரமூன் றவைவலித்தன் மெலித்தல்
வார்குறுக்க னீட்டல்விரித் திடலொகுத்தன் மொழிமூ
வழிகுறையா மொன்றுபல வோர்புணர்ப்பி னுயிர்ப்பே (6)

(இச்செய்யுள் ஆயற்பாற்று)

இரண்டாவது பதமாபு முற்றும்.

# உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 324.)

## உணவாயிருப்பினும் நீக்கத்தகுந்த பொருள்கள்.

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்"

என்றார் யாவர்க்கும் பொதுமறை யியற்றிய திருவள்ளுவர். இன்னார் இவ்வாறு கூறியது அருள், உயிர்நிலையை நோக்கியே யிருப்பினும், அறிபொருள் ஆராய்ச்சிக்கும் இக்கொள்கை ஒத்த தாகவே இருக்கிறது. மக்களின் இயற்கை யமைப்பை உற்று நோக்கின், இவர் உடல் புலாலுண்டு பிழைப்பதற்காக ஏற்பட வில்லை யென்பது வெளிப்படை. ஆடுமாடுகளைப் போன்ற மரக் கறி யுண்ணும் உயிர்கள், அசைபோட்டு மென்றுண்பதற்கான தட்டைப் பற்களையும், உண்ணுந் தொழிற்குதவாத பெரிய தட்டை நகங்களையும், சமிப்பதரிதாகிய மரப்பொருள்களைச் சமிக் கத்தகுந்த நீண்ட சமிக்குமுறுப்புகளையு முடையன. ஆனால் சிங்கம், புலி, பூனை, ஓநாய், நாய் முதலிய புலாலுண்ணும் உயிர் கள், தசைகளைக் கிழிப்பதற்குதவுங் கூரிய பற்களையும் உகிர் (நகம்) களையும், என்பையுஞ் சுரண்டித் தின்னத்தகுந்த சொரசொரப் பான நாவையும், எளிதிற் சமிக்கும் புலாலைச் சமிக்கத்தகுந்த குறைந்த நீளமுடைய சமிக்குமுறுப்புகளையு முடையன. இனி மக்களை உற்று நோக்குவாம். அவர்கள் பற்களோ தட்டை; நகங்களும் அத்தகையனவே; நாக்கோ வழவழப்பானது; சமிக்கும் உறுப்புக்களோ நீளமுடையன. ஆதலின் மக்களைப் புலாலுண் ணாதவைகளுடன் சேர்க்கவேண்டியதுதான். இவ்வாராய்ச்சிக் கொத்தே விலங்குகளில் மக்களைப் பெரும்பாலும் ஒத்த குரங்கு

களும் புலாலுண்ணுதனவா யிருக்கின்றன. இவ்வியற்கை யமைப்பையன்றிப் புலாலுண்பதா லுண்டாகும் நன்மை தீமைகளையும் ஆராய்வாம்.

(1) நமது உணவுக்குழாயில் பன்னூறாயிரங் கூடுகள் உண்டாகி மாய்கின்றன. இவற்றுள் எருவுடன் நாள்தோறும் வெளித்தள்ளப்படுங் கூடுகளின் தொகையே 128,000,000,000,000 எனின் மற்றவைகளைப்பற்றிக் கூறவேண்டியதின்று. இக்கூடுகள் இருவகை. ஒன்று ஊன் பொருளின் மிகையை உண்பது. இவற்றின் எச்சம் (Toxins) நம்மைக் கொல்லும் இயல்புடைய கொடிய நச்சாகும். இரண்டாவதுவகை கொழுப்பு, கரிநீர்ப் பொருளின் மிகையை உண்பது. இவற்றின் எச்சம் மிகச் சிறு தீங்கே உறுவிப்பது. இவை யிரண்டும் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டு ஒன்றையொன்று கொல்லும் இயல்புடையன. ஆதலின் நாம் உடல் நலத்துடன் வாழவேண்டுமாயின் இவ்விரண்டாம் வகைக் கூடுகளை வெற்றிபெறும்படிக்கும், மிகுதியாய்ப் பல்கும்படிக்கும் செய்யவேண்டுமன்றோ? இதற்குப் பாலுணவே மிகநன்று என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. எனெனில் இதில் அக்காரம் மிகுந்திருக்கிறதால் இரண்டாம்வகை நச்சுக் கூடுகளுக்கு இது தக்க உணவாகிறது. இன்னும் பாலிலிருந்துண்டாம் மோர், தயிர் ஆடையிலுள்ள புளிப்பு முதலிய பொருள்கள் முதல்வகை நச்சுக்கூடுகளைக் கொன்று விடுகிறதால் இவை என்ன அருமையான உணவு! இதுவன்றி ஊன்முதல் மிகுத்துள்ள புலால்வகையிலுள்ள ஊன்முதல்மிகை எளிதில் அழுகி முதல் வகை நச்சுக்கூடுகளையே மிகுதியாய் உண்டுபண்ணுவதால் இவை உடலுக்குண்டாக்கி வைக்கும் கேட்டிற்கு அளவுமுண்டோ? நினைத்துப்பாருங்கள்!

(2) புலால் வகைகளிலுள்ள ஊன்முதல் எளிதாயும், மிகுதியாயுஞ் சேரக்கூடியதாதலின் மிகுதியாக ஊனுண்பழக்கம் எளிதில் உண்டாய்விடும். இதனால் ஊளைச்சதை விழும். பின் நாட் செல்லச் செல்ல நீரிழிவுண்டாகும். இஃதில்லாவிடினும் கட்டாயம் சிறுநீரில் அக்காரம் மிகுந்திருக்கும்.

(3) புலால்வகைகளில் உடற்குக் கேடுவிளைக்கும் சிறு நீருப்பு மிகுத்திருக்கிறது. இதனால் இவற்றை உண்பது உடலை நச்சுப்படுத்திக்கொள்வதை ஒக்கும். ஆனால் முதிரைவகைகளிலும் இவ்வுப்பிருக்கிறது. என்றாலும் இவைகளை எட்டு முதல் 24 மணிவரையில் ஊறவைப்பதால் நீக்கிவிடலாம். இவ்வாறு புலால் வகைகளிலுள்ள நச்சுப்பை நீக்கமுடியாது.

(4) நோயுடைய ஆடுமாடுகளின் புலால் மிகுந்த நோயை விளைவிக்கும். இவைகளிலுள்ள நச்சுக்கூடுகள் சமைத்தலால் மாண்டு போயினும் புலால் கெட்டது கெட்டதே. இதிலுள்ள நச்சுப்பொருள்களை நீக்கக் கல்லீரல், குண்டிக்காய் முதலிய உறுப்புகள் மிகப் பாடுபட்டும் முடியாது போவதால் நோயுண்டாகிறது. நோயுற்ற ஆடுமாடுகளைக் கொன்றுவிற்க, ஊன்விலைஞர் பின் வாங்கமாட்டார்கள். இந்தத்தடுப்பது மருத்துவர்களுக்கும் எளிதன்று.

(5) கடையாகப் புலாலுண்பதால் வெகுளி, பெண்வெறி முதலிய தீக்குணங்கள் மிகுகின்றன. ஆதலின் இதை எவ்வாறாயினும் நீக்கலே நன்று.

சில தீய கோள்கைகள் :—சிலர் குளிர்நாட்டிலும், குளிர் மிகும் பொழுதுகளிலும் புலாலுண்ணல் இன்றியமையாததென்று கருதுகின்றனர். ஆனால் எந்நாட்டிலும் எப்பொழுதும் முழு உடல்நலப் பெருக்குடன் எல்லாவகையான புலாலுணவையும் விட்டிருக்கலாமென்பது தக்க ஆராய்ச்சியாளரால் ஒருவகை ஐயமுமின்றி நிறுவப்பெற்றிருக்கிறது. சிலர் முட்டைகளைப் புலால் அன்றெென நினைக்கின்றனர். இது முழுத்தவறு. முட்டையுங் குஞ்சும் வெவ்வேறு நிலையிலிருப்பனவே யன்றி ஒரேவகைப் பொருள்களாம். சிலர் புலாலுண்ணலை இடையே விட்டால் நோயுறவும் வலிவிழக்கவும் வேண்டுமென நினைந்திருப்பர். இது தவறுமெனவும் புலாலை நீத்து வலிவும் நலனுமெய்தலாமென்றும் ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்றனர்.

குறிப்பு:—ஆனால் புலாலுண்ணுர் மிகுதியாகக் கவலைப்பட வேண்டியதொன்றுண்டு. மாக்கறிகளிலுள்ள ஊன்முதல் மாப் பொருளுக்கிடையே பொதிந்து கிடப்பதால் 42 நூற்றுவிழுக்காடு வீணுகக் கழிபடுகிறது. இதை நீக்க இப்பொருள்களை நன்ருய்ச் சமைக்கவும், மென்றுண்ணவும் வேண்டும்.

## IV. உடலின் பொறுக்குந்திறமை.

சிலர் உடற்கு எளிதில் சமிக்கக்கூடிய பொருள்களையே கொடுத்து அதன் விருப்பின்படி நடந்துகொள்ளுகின்றனர். சிலர் இதற்குமாருக உடற்குப் பிடிக்காததையே சிறிது சிறிதாக மிகுதிப்படுத்திக்கொடுத்து யாவற்றையும்சமிக்கும் பழக்கப்படுத்திக் கொள்கின்றனர். சிலர் புலாலுண்ணுமையை உறுதியாகக் கடைப் பிடித்து நடக்கின்றனர்; சிலர் ஊனுக்கு ஊனிடல்வேண்டு மென்னும் பழமொழியையே பற்றி நிற்கின்றனர். சிலர் எல்லா உணவையும் சமைக்காதுண்கின்றனர்; சிலர் சமைக்கப்படாத வெல்லாம் வீண் பொருளென்று கருதி சமைக்காததை உண்பதே யில்லை. சிலர் எவ்வகையான கிளர்ச்சிதரும் பொருளும் உதவா தென்று காப்பி, தேயிலை, மிளகு, குடிவகை முதலியவற்றை அறவே ஒழிக்கின்றனர்; சிலர் இவற்றை மிகைபடாதுண்ணின் நன்றென்று கருதிச் சீராக உண்டுவருகின்றனர். சிலர் விரைவா யுண்டு இடையிடையே தாராளமாய் நீரருந்துகின்றனர்; சிலர் மெதுவாயுண்பதன்றி உண்ணும்பொழுதும் சிலவேளை உண்டு 1, 1½ மணியாகும் வரைக்கும் நீர்பருகுவதே யில்லை. சிலர் நாள் ஒன்றிற்கு ஐம்முறையுண்பதன்றி இடையிடையே துண்மை நுகர்கின்றனர்; சிலர் இரண்டு அல்லது மூன்றுமுறை உண்பதன்றி இடையில் ஒன்றும் உண்பதில்லை; சிலர் காலையுண வுண்பதில்லை; சிலர் இரவுணவுண்பதில்லை. சிலர் நெய்யில் பொரித் ததையே உண்கின்றனர்; சிலர் நெய்யைப் பயன்படுத்துவதே யில்லை. உடல் வருந்த உழைப்போரிற்சிலர் மாப்பொருள் மிகுத் திருக்குங் கீரை, காய்கறிகளை மிகுதியா யுண்பதன்றிப் பழங்களை உண்ணும்பொழுது தோல், விதை, சக்கைகளையும் விடாதுண்

கின்றனர்; உழைப்புடையோரிற் சிலர் இவற்றை அறவே ஒழிக்கின்றனர். சிலர் மிகுதியாயுண்டு சிறிதே சுவறச்செய்கின்றனர்; சிலர் சிறிதே யுண்டு யாவற்றையும் உடலிற் சுவறச்செய்கின்றனர். இவ்வாறு மாறுப்பாடான கொள்கையுடையோர் யாவரும் இனிதே வாழ்கின்றனராதலின் உணவுக்குழாய் யாவற்றிற்கும் ஒத்துவரும் அரிய இயல்புடையதாதலைக் குறிக்கிறது. மேற்கண்டபழக்கங்களுள் யாவும் நற்பழக்கங்களெனக் கருதமுடியாது; பல தீய பழக்கங்களுள. இவற்றால் என் நோய் உண்டாகவில்லை யெனின் உடலின் பொறுக்குந்திறமை அத்துணை வலியுடையதாயிருக்கிறது. ஆனால் இத்திறமை நாளடைவிற் குன்றிவிடுமாதலின் நீண்டபொழுது வாழ விரும்புவோர் இத்தீயபழக்கங்களை அறவே ஒழிக்கவேண்டும். யாவருக்கும் நன்மையைத் தருமென்று கூற முடியாத சிலபழக்கங்களுள. எடுத்துக்காட்டாக உள்ள உழைப்புடையோர்க்கும் உடலுழைப்புடையோர்க்கும் ஒரேவகை உணவு ஒரே அளவில் பயன் கொடுக்கக்கூடுமென்று கருதமுடியாது. ஆதலின் இப்பழக்கங்களை எற்படுத்த அவ்வவர் உடல் நிலையையும் பொருட்படுத்திக்கொள்ளவேண்டும். வேலை மிகுத்துள்ளோர் பல்வேலைகளுக்கிடையே பகலுணவைஉண்ணக்கூடாது. வேலை முடிந்ததும் உண்பதே நன்று. யாவருக்கும் காலையுணவும், இரவுணவும்சிறிது குறைவானவாகவே இருக்கவேண்டும். இவ்வாறான நற்பழக்கங்களைக் கடைப்பிடித் தொழுகுவோர் பல்லாண்டுகள் உடல் நலத்துடனும் வலிவுடனும் வாழ்வரென்பதற் கையமில்லை.

வீண் மருந்துகள்:—ஐரோப்பாக்கண்டத்திலே பான்டஸ் என்னும் ஊரிலே மித்ரடேட்டீஸ் என்னும் ஓர் வேந்தன் தன்னைத் தன் பகைவர் நச்சூட்டிக் கொன்றுவிடுவரோ வென்றுவெருவி நாள்தோறும் சிறிதுசிறிதாக மிகைப்படுத்தி நஞ்சை யுட்கொண்டு வந்தான். இதனால் அவனை ஒருவரும் நஞ்சூட்டிக் கொல்ல முடியவில்லை. இதனால் நம்முடல் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் இயல்புடையதென்று தெரிகிறது. எவ்வாறெனின் அது குருதியிலுள்ள வெண்கூடுகளின் உதவியாலும், கல்லீரல், குண்டிக்காய் முதலிய உறுப்புகள் செய்யும் வேலையாலும் நச்சுப் பொருள்களை நீக்கிக் கொள்ளுகிறது. அல்லது குருதி சிலமாற்று

களை உண்டாக்கிக் கொடுப்பதால் உடல் அவைகளைப்பொறுத்துக் கொள்ளுகிறது. ஆனால் இம்மாற்று முற்கூறியதுபோல் மிகுதியாக உண்டாக்கப்பெறுவதால் அந்நச்சுப்பொருள்களை விரும்பும் வெறியுண்டாகிறது. இதை அறியாது நம்முடல் எப்பொழுதுங் கெட்டுப்போகும் இயல்புடையதென்று கருதி அதற்கு நன்றாயிருக்கையிலே வீண் மருந்துகளைப் புகட்டிக் கொண்டேயிருக்கின்றனர். இதனால் கல்லீரலுங் குண்டிக்காயும் இவைகளை நீக்கு வதிலேயே கண்ணுங் கருத்துமாய் உழைத்துழைத்துச் சிலநாளிற் சலித்துப்போகின்றன. பின்னும் மருந்தை உட்கொண்டால் இவ்வுறுப்புகள் அவைகளை எரிக்காது விட்டுவிடுவதால் உடல் நலிகிறது. இவ்வாறு உடலைக் கெடுத்துக்கொள்ளும் பழக்கத்தை வலிவுடையோரிடத்தன்றி மிகத்தளர்ந்த நிலையிலிருக்கும் பிள்ளை பெற்ற மகளிரிடத்தும், பச்சிளங்குழவியிடத்தும் உண்டுபண்ணுகின்றனர். பிள்ளை பெற்றவளை விளாங்காய், தேங்காய் அளவு மருந்துகளை அரைத்துக்கொடுத்து விழுங்கச் சொல்வதன்றிச் சாராயச்சத்து மிகுத்துள்ள குடிகளையும் மிகக் காரமுள்ள சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் முதலிய காரப்பொருள்களையும் உண்ணச்செய்கின்றனர். இவ்வாறே இளங்குழவியின் பசுங் குடர் நோவக், காரமான உரைமருந்தை நாள்தோறுங்கொடுப்பர். அதனாற் குழவியின் உரம் மிகும் என்று நினைப்பது எவ்வளவு தவறு! நம்முடலின் கூடுகளே நம்முடலை வளர்க்கின்றன, காப்பாற்றுகின்றன, காயங்களை மூடுகின்றன, நோயை நீக்குகின்றன வென்பதை உணர்ந்திருந்தால் இவ்வாறு ஒருகாலும் செய்ய மாட்டார்களன்றோ? இவ்வாறுணர்ந்த புதுமருத்துவர் யாவரும் நோயாளிகளுக்கு மிகுதியாய் மருந்தைக்கொடுக்காது மிகக் குறைவாய்க் கொடுப்பதன்றித் தூயகாற்று, எளிதில் சமிக்கக் கூடிய தூயஉணவு, தூயஉடை, களைப்பாறல், உடம்பு பிடித்தல், தேய்த்தல், தக்கவாறு குளித்தல், பட்டினியுறல், உடல்நலந் தரும் எளிய வேலைகள் அல்லது பயிற்சிகளைச் செய்தல் முதலியவற்றால் நோய்களை நீக்கமுயல்கின்றனர். இவ்வழிகளால் உடல் தன் நோயைத் தானே நீக்கிக்கொள்ளும் முயற்சிக்கு உதவி ஏற்படுகிறது. நாம் நலவழிப்படி வாழாததால் உண்டாகும்

நச்சுப்பொருள்களை நீக்க நம்முடல் முயலுவதாற்றான் சளி, வெப்பு, வேக்காடு முதலிய நோய்களுண்டாகின்றன. நச்சுப் பொருள்கள் நீங்கியதுந் தாமே இந்நோய்கள் நின்றுவிடுமாதலின் வீண்மருந்துகளைக் கொடுத்து நீக்கவேண்டியதில்லை. நோய் முதலாகிய தீயபழக்கங்களை நீக்காது இந்நோய்களை மருந்து கொடுத்து நீக்கமுயன்றால் மருந்தின்வேகம் உள்ளவரை நீங்கிப் பின் கிளைத்து உடம்போடொட்டியவாகும் (chronic). ஆதலின் உடல்நலவழிக்கொத்த பழக்கங்களில் எது விடப்பட்டு நோயுற்றேம் என்று ஆராய்ந்து அப்பழக்கங்களை உண்டுபண்ணிக் கொள்ளல் நோய் நீக்கற்குச் சிறந்தவழியாகுமேயன்றிக் காரமுள்ள வீண் மருந்துகளாகா.

பட்டினி :—உடல் நலத்தைப்பற்றிக் கூற முன்வந்த திருவள்ளுவர்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

என்று மீதூண் விரும்பாமையைப்பற்றி ஐம்முறை வலியுறுத்துகின்றார். உணவாராய்ச்சியாளர் யாவருங் குறைவாயுண்ணலையே பெரிதும் பாராட்டுகின்றனர். "நாளொன்றிற்கு நாலணா உணவிற்கு மேலுண்ணாதே; அதையும் உடலால் உழைத்து அ[illegible]"†

† Live on four pence a day & earn it.

என்று ஓர் ஆங்கிலப்பழமொழி கூறுகிறது. உலகில் மக்களுக்குண்டாகும் நோய்களில் மூன்றிலிருபங்கு மீதூண் விரும்புவதாலுண்டாகின்றதெனின் இதை நீக்க யாவரும் முன்வரவேண்டுமென்று கூறுவது மிகையாகாது. சுவைகருதி மீதூண்உணல் சிறிதுபொழுதே (தின்னும்வரை) இன்பங் கொடுத்துப் பெரும்பொழுது (சமிக்கும்வரை) துன்பங் கொடுக்குமென்பதை யாவரும் நன்குயுணரவேண்டும். இதைச் சிறப்பாய் விருந்துண்போர் கவலையுடன் பார்க்கவேண்டும். விருந்துண்போர் ஒவ்வொருவரும் ஆங்குப் படைக்கப்பெறும் பல்வகைப் பொருள்களையுஞ் சிறிது சிறிது சுவைத்து நீக்கினல் மிகைபட உண்ணது பிழைக்கலாமேயன்றி, நன்குயிருக்கிறதென்று உண்ணப்புகின் அறிவிழந்து சுவை வலைப்பட்டோராவர். இதற்கடுத்த நற்பழக்கம் துவாப் பசித்த பின் உண்டல் ஆகும். காலை உணவு தீனிப்பைபிற் கடைபட்டு வெளிவாக் குறைந்தது நான்கு மணிப்பொழுதும், கடும்பகல் உணவு வெளிவர ஐந்து மணிப்பொழுதும் ஆகின்றனவென்பதை உள்ளத்துட் பதிப்பித்துக்கொண்டு இக்குறித்தபொழுது நீங்கியதுமே அடுத்தவேளை உணவைப்பற்றி நினைக்கவேண்டும். ஆதலின் உணவால் தக்கபயனும் இன்பமும் அடையவிரும்புவோர் தக்க உணவை நன்குயப் பசித்தபின் வேண்டிய அளவிற்குச் சிறிது குறைவாக உண்ணப்பழகுதல் இன்றியமையாததாகும்.

பட்டினியுறும்வழி:—இதற்கு மாருக மீதூண் விரும்புவதன்றி இடைபிடையே நுண்மை நுகர்வோரும், சிற்சில நோயுற்றோரும், உடல், உள்ளத்தின் பொறுக்குந்திறலை மிகைப்படுத்த விரும்புவோரும், உடல், உள்ளத்தைத் தூய்மைப்படுத்த விரும்புவோரும் அடிக்கடி பட்டினியுறல் நன்று. இதனல் நம்மையறியாமலே நாம் உண்ணும் மீதூணினல் உண்டாகும் எல்லாக் கேடுகளும், சிற்சில நோய்களும் நீங்குகின்றன; உடலுக்கும் உள்ளத்திற்கும் பொறுமை உண்டாகிறது; உடலிலுள்ள வீண் பொருள்களும் நச்சுப்பொருள்களும் நீக்கப்பெறுகின்றன. உள்ளம் பெண்வெறி, வெகுளி, செருக்கு முதலியவற்றை விட்டிருக்கிறது. இருவேளை நல்ல சிற்றுண்டிகளையும், ஒருவேளை வடை

பாயசத்துடன் கூடிய முழு உணவையும் உண்டு, அதை 'விரதம்' என்று சொல்லிக்கொள்ளும் பட்டினியால் தீமையுண்டாகுமே யன்றி நன்மையில்லை. இவைகளையே குறைவாக உண்ணின் சிற்றுண்டிகளாலும், பழ உணவுகளாலும் உணவிற் சிறிது மாறுதல் உண்டாவதாற் சிறிது நன்மையுண்டு. ஆனால் உண்மையாகப் பட்டினிகிடப்போர் ஒரு நாள் முழுவதும் வேண்டியநீர் அல்லது சிறிதுபால், இரண்டொரு பழங்களைத் தவிர வேறுணவ் மிகையாம். இவ்வாறு வாரம் அல்லது இருவாரம் அல்லது திங்களொரு முறையாவது பயிலல் நன்று. இதுவன்றிப் பெருநோயுற்றோர் பன்னாட்களாகப் பட்டினியுற்று நோயைத் தீர்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறுறுவோர் சிறிது சிறிதாக உணவைக் குறைத்துவந்து கடைசியில் இரண்டு மூன்று நார்த்தம்பழச்சாறும் கொஞ்சம் நீரும் உண்டுவந்தால் சின்னாட்களில் உடல் தன் கண்ணுள்ள நச்சுப்பொருள்களையெல்லாம் எரித்துவிட்டு, நோயைத் தீர்த்துப் பசியுண்டாக்கும். அப்பொழுது சிறிதுசிறிதாக, நாளுக்குநாள் உணவை மிகைப்படுத்திப் பழைய நிலைமைக்குக் கொண்டுவந்து விடலாம். உணவைக் குறைத்துவரும்பொழுது, அற்றிருக்கும் பொழுது, கூட்டி முன்போலாக்கும் பொழுது யாவுஞ்சேர்ந்து மூன்று திங்களுக்கு மேலாகா. இவ்வாறு பயிலும்பொழுது தக்க மருத்துவனின் மேற்பார்வையி லிருத்தல் நன்று. இத்தகைய பட்டினியால் குறையும் உடல்நிறை கூடிய விரைவில் நிரம்பிக் கொள்வதால் உடல்நிறை எப்பொழுதுங் குறைந்த நிலையிலிருந்துவிடாது. நோற்கும் பொழுது உடல் விரும்புகிற அளவு நீரை உட்கொண்டால் உடல் முழுவதுங் கழுவப்பெற்றுத் தூய்மை யடையும். பட்டினியுறும்பொழுது உடல், உள்ள உழைப்பைக் குறைத்திருத்தல் நன்று.

## V. சமித்தலின் சுருக்கம்.

இவ்வாறு பலவழிகளிலும் ஆய்ந்தறிந்தெடுத்துண்ணப்பட்ட உணவுப்பொருள்கள் என்னென்ன மாறுதல்களடைகின்றன வென்று பார்ப்போம். ஒரு உருண்டை சோற்றைக் கையிலெடுக்கிறோம். இது நமக்குச் சொந்தமாயினும் நம்முடலுட் சேர்ந்து

பயன்பட்டு விட்டதா? இல்லை! பின்னர் வாயிற்போட்டு மெல்லுகிறோம்; எச்சில் ஊறுகிறது. இரண்டுங்கலக்கச் சோற்றி லுள்ள மாப்பொருளில் ஒருபங்கு அக்காரமாக்கப் பெறுகிறது. பின் விழுங்குகிறோம். இவ்வாறே பல உருண்டைகள் விழுங்கப் பெறுகின்றன. விழுங்கினதும் சுமார் ஒன்பதங்குலம் நீளமுடைய உணவுக்குழாய் (Gullet) வழியே உணவு தீனிப்பைக்குட் (Stomach) செல்லுகிறது. இப்பொழுதாவது உணவுபயன்பட்டு விட்டதா? இல்லை, இங்குப் பலமணிநேரங் கடையப்பட்டுப் பைக்கரைநீருடன் (Gastric Juice) கலக்கிறது. இந்நீர் உணவி லுள்ள ஊன் பொருளில் ஒருபங்கைக் கரைத்துவிடுகிறது. இப் பொழுதாவது உணவு பயன்பட்டுவிட்டதா? இல்லை! பின்னர் இது 20 அடிக்குமேல் நீளமுள்ள சிறு குடலுக்குட் செல்கிறது. ஈண்டு உணவு குடற்கரைநீருடனும் (Indestinal Juice) கணைய நீருடனும் (Pancreatic Juice) பித்தநீருடனும் (Bile) கலக்கிறது. சுமார் பத்துமணிப்பொழுதில் உணவுப் பொருள்கள் யாவுங் கரைபட்டு (Digest) உடலுட் சேர்வதற்குத் தக்க பதப்பட்டி ருக்கின்றன. இச்சிறு குடலிலுள்ள ஆயிரக்கணக்கான பிசிறுகள் (Villi) வழியே உணவுப்பொருள் இழுத்துக் கொள்ளப்பட்டுப் பலகுழாய்களின் வழியே கல்லீரலுக்குச் செல்கிறது. இப்பொழு தாவது உணவுபயன்பட்டுவிட்டதா? இல்லை! இக்கல்லீரலிலிருந்து உணவு சிறிதுசிறிதாய்க் குருதியுடன் கலந்து உடல்முழுதும் பரவு கிறது. இன்னும் இது பயன்படவில்லை! பரவி மயிர்க்குழாய்களின் சுவரினூடே ஒழுகி ஒவ்வொரு தசைநாரைச் சுற்றியும் ஊடேயுஞ் சென்று ஆங்குள்ள மிகப்பல கூடுகளை முழுகச்செய்கிறது. ஒவ் வொரு கூடும் தனக்கு வேண்டிய பங்கை எடுத்துக்கொண்டு மீதியை விட்டுவிடுகிறது. இப்பொழுதுதான் உணவு பயன் பட்டதாகும். பயன்பட்டபின்னராவது நெடும்பொழுது அக் கூடுகளிடத்திலிருக்கிறதா? இல்லை. கூடியசீக்கிரம் கூடுகள் அவைகளைக் கழிபொருள்களாக்கித் தள்ளிவிடுகின்றன. பின்னர் அவை ஊனீரோட்டத்துடன் கலந்து நுரையீரல், குண்டிக்காய்,

றோல் இவைகளால் உடலைவிட்டு நீக்கப் பெறுகின்றன. இதுவே நாம் உண்ணும் உணவின் முதலீற்றின் சுருக்கமாம். இனி இவற்றை விரிப்பாம். இதனுள் ஐந்து வேலைகள் அடங்கி யிருக்கின்றன. முதலாவது உணவைக் குருதியுடன் கலக்கும்படி பதன் படுத்தக் கரைத்தல் (Digestion) ஆகும். இரண்டாவது கரைக்கப்பட்ட உணவை உறிஞ்சல் (Absorption) ஆகும். இவ்வாறு உறிஞ்சப்பட்ட பொருளைப் பலகூடுகளும் உண்டு தம்மையொத்த பொருளாய் ஆக்கிக்கொள்ளல் ஆகிய சேர்தல் அல்லது தம்போலாக்கலே (Assimilation) மூன்றாவதாகும். இக்கூடுகள் அவ்வாறான பொருளை எரித்துக் கரிக்காற்று, தண்ணீர், சிறுநீருப்பு ஆக்கலே உயிர் முதற்கலப்பு (Oxidation) என்னும் நான்காவது வேலை ஆகும். இக்கழிபொருள்களை நீக்கலே கழித்தல் (Excretion) என்னுங் கடைவேலையாகும். இவை யாவுஞ் சேர்ந்ததையே சமித்தல் (Nutrition) என்கிறோம்.

[தொடரும்.]

# தத்துவ விளக்கம்.

---

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

---

## பதிவிகாரம்.

சித்தத் துவந்தெமக் கின்பம் படச்சென்னி மேலிருந்து
மெத்தத் துவங்கட்கு மேலா வனவிக லார்பசு நூற்
கொத்தத் துவந்து குறுகா தன்கொச்சை மன்னவன்றா
வித்தத் துவவிளக் கம்பகர் வான்பணிந் தேத்துவமே. (க)

மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க வெழுந்துவிண்ணைக்
கூடும் பொழிற்கொச்சை வேந்தன் குரைகழற் கன்பர்குன் றுங்
காடுங் கடுஞ்சுர முங்கட லேழுங் கடந்தரிதிற்
றேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற் றாரினுஞ் சீரியரே.. (உ)

சீரார் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கற்
றாராய் வதுவட சொற்பயின் றார்க்கெளி தம்மொழியைச்
சாரா தவரருந் தத்துவ ஞானந் தலைப்படுதற்
கோரார் தமிழ்ச்செய்பு ளான்மைய நீர வெழுதுவனே. (ங)

எழுமென தாசை முடித்தற் குளவெழு தாமறையும்
வழுதிதன் கூனு நிமிரவந் தாண்டன வையமுய்யக்
கழுமல வாணருந் தேவியுங் கண்டுதங் கண்களிப்பச்
செழுமலர் வாவிக் கரையினின் றாடிய சிற்றடியே. (ச)

சிற்கனன் றன்னிக ரின்றிப் பாங்கேதான் சிதைவறியா
வொற்கமில் தோற்றத் துயர்ந்தோ னுறுதுக ளொன்று மில்லோன்
சொற்கலை ஞாலத்து வித்தாயவன் றுற வெங்குமில்லோ
னற்கரு ணையன் வாழிதென் காழி நயந்தவனே. (ரு)

நயந்த பிறப்பொடு நாசமில் லாதது நாடினர்தாம்
வியந்தரு வீடெய்த வீடொன் றிலாதது மிக்கறிவா

லுயர்ந்த துலகங்க ளாகுந்தொழில துயர்தாங்கக்
கயந்திகழ் காழிப் பிரானொளி யாகிய காரணமே. (௬)

காரண மாகிய காழிப் பிரானுக் கனுதியிந்தப்
பாரள வாகப் பரக்கும் புவன திகள்படைப்பப்
பேரள வாகுந் தொழிற்பிற ழாத கருவியதாய்ச்
சீரள வாமனின் றருள்செய்ய தாளென் சிரத்தனவே. (௭)

தனதுயர் தத்துவந் தான்பரஞ் சத்தி கருவியிப்பால்
வினைதரு ஸ்வயம் பிறந்தும் விரிந்து மொடுங்குமிந்தச்
சினமலி தத்துவந் தன்னிற் சிரபுர நாதனுமக்
கனமலி பூண்முலை யுங்கருத் தாவுங் கருவியுமே. (௮)

கருமல பாச மசேதனங் கட்டுண்பர் சேதனரென்
றிருமையில் வைய மடங்குமென் றெண்ணுக வித்துணையே
திருமலி யாகமஞ் செப்பிய வான்பொருள் முற்சிறந்த
விருவரு மேகட்டு வார்விடு வாருமென் றெய்துமினே. (௯)

எய்தும் பொருளொரு மூன்று பதிபசுபாச மென்றே
மெய்தந்த வாகமங் கூறு மிவற்றினுள் வெங்குருவாழ்
மைதங்கு கண்டன் பதிபசு வென்ப தணுக்கள் மற்றை
கைதந்த பாசங்க ளாணவ மாயையுங் கன்மமுமே. (௧௦)

கன்மனந் தன்னைக் கனிவிக்குங் காழிப்பிரான் கருணைப்
பன்மைப்படுந்தொழி லைந்து படைப்பு நிலைதொகுத்த
லின்மை நிகழ்ந்த வொளிப்புத்துயர்கின் றெடுத்தலென்ப
வன்மைப் படாநிலை மைப்பெரி யோனுக் கமைந்தனவே. (௧௧)

பதிவிகாரமுற்றும்.

---

## பசுவிகாரம்.

அமையா நிலைமை யணுக்களொர் மூன்று வகையவைதாங்
கமைவா னிறைந்தவிஞ் ஞானகலர்பிரளயகலர்மற்
றிமையா ரிமைப்பவ ராகுஞ் சகல ரிவரின்முன்னோர்
தமையா ரெனின்மல மேயவை சேடித்த தன்மையரே. (௧௨)

தன்மை யொழிக்குமப் பாசமுங் கன்மமுஞ் சார்ந்துமற்றைப்
பின்னொரு பாசமில் லார்பிர ளயாகலர் பேசியவக்
கன்மமு மாயையு மாணவ முங்கலந் தார்சகல
ரென்னு மிவரின்முன் னோரிரு பான்மைய ரென்றறியே. (கங)

அறிந்தவர் தீர்ந்த துகளினர் தீராத் துகளர்முன்னர்ச்
செறிந்தவர் விஞ்ஞ சக்கு நாயக ரெண்ம ரெனச்சிறந்தோர்
பிறிந்தவர் மந்திர ராமெழு கோடியர் பேரருளான்
மறிந்த திரைப்புனல் வெங்குரு வாணன் வகுத்தவரே. (கச)

வகுத்த வரிற்புவ னாதிப ரேனையர் மற்றவர்பின்
றொகுத்த வரிற்பந்த முற்றினர் தூநெறிச் செல்வர்பின்பால்
மிகுத்தவர் தாம்புரி யட்டகத் தோடும் வினைவழியிற்
பகுத்த பிறப்பிற் சகலர்முப் பாசமும் பற்றினரே. (கரு)

பற்றிய சத்தப் பரிச முருப மிரத கந்தம்
மற்றை மனம்புத்தி யாங்கார மென்றிவை வல்வினையாற்
சுற்றி யமைந்த புரியட் டகமென்று சொல்லுவர்வான்
பெற்றி யமைந்த பிரமாபுரந்தொழப் பெற்றவரே. (கசு)

பெற்ற தவப்பய னாற்பிர ளயாகல ரிற்சிலரைக்
குற்றமில் மந்திர நாயக ராக்குமெங் கொச்சையர்கோன்
மற்றவர் மண்டலர்....தாதிகள் வீரர் சிகண்டர்சீ
ரூற்றவு ருத்திர ரெட்டோடொன் றென்றநூ றெண்ணிவர்க்கே.

எண்ணும் வினைப்பய னாற்புவ னந்தொறும் போகமென்று
நண்ணி வருஞ்சக லர்க்கொரு கால நயந்திங்ஙனே
பண்ணிய கன்மந் தொலையொத் துழிச்சத்தி பாதமுறக்
கண்ணிய னுங்குரு வாய்க்காழி வேந்தன் கதிதருமே. (கஅ)

---

பசுவிகாரமுற்றும்

தொடரும்.

# தன்னலப்பாட்டு.

திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப்புலவர்,
சலகண்டபுரம்.

(182-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## நொண்டிச்சிந்து.

அருள்மிகும் பெரியோரே-கல்விக்கடல்
அத்தனையும் நீந்திக்கரை கண்டவர்களே
தெரிவரும் நீதிநெறிகள்-தேர்ந்தொழுகும்
சீரியர்க ளேயறிவு கூரியர்களே
கடவுள் உயிர்களெனும்-வழக்கொடு
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்திலே
உடலில் முதல்முதலாய்-உயிர்கள்புக
ஒட்டிப் புகுந்துகொண்ட பழையவன்யான்
தன்னல மென்பதென்பேர்-கடவுள்போலத்
தனிப்பெரும் புகழுட னெங்கும்நிறைவேன்
முன்பின் நடுவொடுமேல்-கீழ்பக்கம்
முற்றும் அண்டங்கடோறும் சுற்றிவருவேன்
மன்னும் பெருங்கருணைக்-கடவுளை
மனத்தொடு நினைப்பவர் மிகச்சிலரே
என்னை ஒருகணமும்-மறக்குநர்
இல்லைஇல்லை எங்கும்அறி யாருமில்லை
எந்தெந்தக் காரியமும்-என்னைமனத்
தெண்ணிமுடிப் பாரெவரும் உண்மையிதுவே
ஐந்து புலனடக்கித்-தவஞ்செயும்
அவர்களும் எனைமதித் தடிமைசெய்வார்
வீடுபெறும் யோகிகளும்-உள்ளுக்குள்ளே

விருப்புடன் பேணியென்னை ஒருப்படுவார்
நீடுமுடி மன்னவர்க்குள்ளும்-நானிருந்திந்
நீணிலங்காத் துவருவேன் வேறுபேச்சென்ன
செப்பொணுப் பெருமைபெற்ற-என்னைமிகத்
தீயனென்றும் பொல்லாத மாயனென்றும்
துப்பற்ற ஏழையென்றும்-வஞ்சகஞ்செய்
சூதனென்றும்பிடி வாதனென்றும்
கண்டோர் காரியுமிழும்-கீழ்க்குணக்
கடையனென்றும்மிக மடையனென்றும்
தொண்டாம் ஒருசிறுவன்-அவன்பெயர்
சொன்னலும் நாக்கசக்கும் பொதுநலமாம்
விண்டான் பழித்துரைகள்-புண்ணிலிட்ட
வேல்போல் செவியில்வந்து கால்வைக்கவே
கொண்டேன் பெருங்கோபம்-என்பெருமை
குலையச்செய் வானையுயிர்க் கொலையுஞ்செய்வேன்
ஆனலும் உங்கள்முன்னே-இவ்வழக்கை
அறைந்திட லாமென்றே விரைந்துவந்தேன்
நானே கடவுளினும்-உயிர்க்கருள்
நல்கும்வழித் தொண்டுசெய்யும் தொல்குடியினேன்
பொறுமை எதற்கும்வேண்டும்-என்றாலும்
புல்லரைப் பொறுக்கின்மிக அல்லல்விளையும்
சிறுமைக் குறும்பர்களைச்-சீர்திருந்தச்
செய்யநையப் புடைத்தலே சிறந்தவழி
நாட்டைக் கெடுக்கின்றேனும்-என்னைப்பற்றி
நல்லவர்களுள்ளுக்குள்ளே நகைக்கின்றாராம்
வாட்டும் பசியாலே-ஏழைகள்
வரவரப் பெருகநான் காரணமாம்
பெரும்பணக் காரர்களுக்கு-நான்சொல்லிப்
பெட்டிப்பணம் காக்கும்படித் திட்டம்செய்தேனும்
வறியோர்க் கிரங்குமவரை-நான்சென்று
மாற்றி நினைப்பைலோப மேற்றுகின்றேனும்
சிறியோர் பலர்உறவே-நாடோறும்

செய்கின்றேனும் நல்லோரை வைகின்றேனும்
என்வயிற்றில் பிறந்தாலும்-இரணியனுக்
கேற்றமைந்தன் போலெனக்கோர் கூற்றுவனும்
தன்பெயர் தழைத்திடவே-உலகத்தில்
தங்கி மகிழ்ச்சியின்பம் பொங்கிடுமாம்
பிடரி பிடித்துத்தள்ளினன்-வாய்திறந்து
பேசாமல் ஓடிப்போய்ப் பிழைக்கச்சொன்னன்
இடாறத் தன்னடிக்கீழ்த்-தொண்டுசெய்தால்
இடிகஞ்சி சிறிதூற்றப் படுமென்கிறன்
பருத்தஎன் உருவத்தைத்-தேரைக்காலோப்
பாக இளைக்கும்படி பண்ணில்நலமாம்
வருத்தி மடிபிடித்து-மல்லுக்கட்டி
வம்பன்செய்யுந் தொந்தரவு கொஞ்சமல்லவே
பொதுநலம் ஆட்சிபுரிய-நான்தொலைந்து
போவதுங்கள் விருப்பமோ புண்ணியர்களே
அதிகம்பேர் எனதுநண்பர்-பொதுநலம்
ஆதரிப்போர் ஆயிரத்தோர் கூறுமுளரோ
காந்தி யடிகள்போல-வெகுபேரைக்
கண்டபோதன் றேஎன்ஆட்சி குன்றிஒழியும்
தொந்தியைப் போற்பதுங்கி-வாக்கிலொன்றும்
உள்ளொன்று மிருக்குமட்டும் என்னகுறைச்சல்?
குறைவதன் றெனதாட்சி-நானறிந்து
கொண்டிருக்கின் றேனிதையவ் வண்டனறியான்
நிறைகுடக் தழும்பிடுமோ-தோல்வியென்று
நினைக்கின்றி லேன்அவனை மதிக்கின்றிலேன்
நீங்களே நினைத்திடுமின்-பிறர்க்கெல்லாம்
நீதிசொல்வோர் தாமவ்வழி நிற்பதில்லையே
தாங்கள்பிறர் குற்றமுணர்வார்-குற்றம்பல
தம்மிட மிருப்பதனை முன்மறக்கின்றார்
இதுஎன் வேலைத்திறமை-அடடா
இன்னும்பல சூழ்ச்சிகளுண் டெண்ணிலடங்கா
பொதுநலப் புல்லியனே-எனைவென்று

பூட்டு பவன்முடி சூட்டுபவன்
அண்டங்கட் கப்புறத்தும்-என்னுடைய
ஆணையும்செல் வாக்கும்செல்லும் நாணயமுண்டு
தொண்டுப்பய லவனுக்கு-மதிப்பென்ன
தூரநின் றிரண்டொருவர் நேருவதல்லால்
பக்கவலி மிக்கவுளதே-எனக்கந்தப்
பாங்கறியா தேசிறுசொல் ஓங்கியெறிந்தான்
மிக்கதீச் சுட்டபுண்ணும்-உள்ளாறி
விடுமேநாச் சுட்டவிந்த வடுமாறுமோ
நினைத்தால் வயிறெரிய-எனைப்பல
நிந்தைசொன்ன வாயழுகி வெந்துவிடுமே
தனைத்தான் அறியாமல்-பொதுநலன்
தலையால் நடக்கின்றான் நிலைகொள்ளுமோ
சொல்லால் முழக்குவதே-அல்லாமல்
தோள்தட்டி நின்றுசெய்கை தொடங்கலுண்டோ
எல்லோர் உள்ளத்தினும்-பொதுநல
இச்சைவரு மென்பதுகொஞ் சத்திலில்லையே
தாமே சிறப்புறவும்-மற்றவர்கள்
தாழவேண்டு மென்றெண்ணாத சால்பினரெவர்
ஆமே கலைபலநூல்-படிப்பினும்
அரியசொற் பொழிவுகள் ஆற்றிடினும்
எனக்கே அடிமைகளாம்-அப்புலவர்
எண்ணத்தி லிருக்கும்நானே உண்மையறிவேன்
தனக்கிணை யறவுயர்ந்த-தமிழ்மொழி
தன்னைவளர்க் குங்கடமை தாங்கியொழுகும்
கரந்தைச்சங் கத்தினரைப்போல்-வெகுசங்கம்
கலந்துழைத்தா லன்றோநான் கலங்கிடுவேன்
அரந்தை தவிர்க்குங்கல்வி-நாட்டினில்
ஆங்காங் குயர்ந்தாற்பின் தாங்கிநிற்பேன்
நாட்டாண்மை நகராண்மை-யாளர்பொது
நலம்விரும்பி னுலென்றன் வலங்குறையும்
மேட்டான மேட்டிகளெல்லாம்-பணத்தாசை

விட்டபோதன் றேஎனது கொட்டமடங்கும்
தாய்நாடு தாய்மொழிமேல்-காதல் மிகத்
தழைத்திடுங் காலமெனக் கிளைப்புத்தரும்
பேய்போற் பணத்தாசை-கொள்ளும்பல
பேர்குறைந்த போதெனது சீருங்குறையும்
பொதுநலம் மிகுந்தாலும்-என்னுடைய
புகழ்க்கொடி பறக்காமல் போய்விடுமோ
இதுநம் நாடென்னும்-பேச்சுக்குள்
இருக்கின்றே னென்னநீங்கள் நினைத்திடுங்கள்
சுயமரி யாதையிலே-நான்மறைந்து
தோன்றுகின்றே னிதைக்கருத் தூன்றிநோக்குமின்
நயமறச் சிற்சிலரை-இழித்துரைக்கும்
நாட்டமெல்லாம் நான்செயுங்கொண் டாட்டமல்லவோ
பார்ப்பனர் பக்கமிருப்பேன்-இப்போது
பார்ப்பனரல் லாரையும் பற்றிக்கொண்டேன்
தீர்ப்பாய்த் தீண்டாரை-இழித்துரைத்த
தீங்கனைத்தும் பார்ப்பனர்மேற் செல்லவிடுத்தேன்
தெய்வம் சமயமெனும்-நல்லுணர்வு
சிந்தையறச் சொந்தமந்திரம் மந்திரிக்கிறேன்
மெய்வகைப் பொதுநலமே-விரும்புகின்ற
வித்தகரை விண்ணுலக மேறவிதித்தேன்
லாலா லஜபதிபோற்-சிறப்புற்ற
நல்லோர் இறந்தவிடம் புன்முளைத்ததே
கோலா கலஞ்செய்வேன்-கொடுக்காலே
கொட்டாத்தேள் பிள்ளைப்பூச்சி யாகுமல்லவோ
நீங்களெனைப் பேணிக்கொள்ளுங்கள்-நானுமும்மை
நெஞ்சில்வைத்துக் காத்திடுவேன் அஞ்சலெனவே
தூங்குமுகப் பொதுநலத்தைக்-கண்டவுடன்
தூரத்துங்கள் எழுகடற் கரைக்கப்புறம்
மேல்நா டுயர்ந்ததென்பரே-அங்குமென்றன்
மேலிருக்கும் அன்பெவர்கள் பாலிருக்குமே
சால்புறும் நாகரிகம்-சிறந்துள்ள

தாலமனைத் தும்மெனது காலிணைக்குள்ளாம்
சுவடியில் எழுதிக்கொள்வார்-தன்னலந்
துறந்தால் பெரும்புகழ் நிரம்புமென்பார்
கவடிகள் தாம்நடவார்-அவர்கற்ற
கல்வியெலாம் எனைவெல்லக் கற்றதல்லகாண்
பாரீர் பாரீரே-பொதுநலப்
பையனைநான் வெல்லச்செய்யும் பரிசுகளை
வாரீர் வாரீரே-தன்னல
வாஞ்சையைக்கொண் டாடிவாழி பாடிடவே
தனனு தனதனனு.

# புறநாட்டுப் பொருள்கள்.

---

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப் பண்டிதர், கும்பகோணம்.

---

1. வெற்றிலை:-வெறு + இலை; சமைத்தற்குப் பயன்படாத இலை என்பது இதன் பொருள். தெலுங்கில் இதனை 'ஆக்கு' என்று வழங்குவர்; 'ஆக்கு' என்பது இலை என்று பொருள் படும். வடநாட்டுமொழிகளில் இதனைப் 'பான்' என்று கூறு கின்றனர்; இலை என்று பொருள்படும் 'பர்ணம்' என்ற ஆரிய மொழி 'பான்' என்றாயிற்றுப்போலும். தாம்பூலம், தம்பலம் என்பனவும் இலை என்ற பொருளையே உணர்த்தும். இது, மலேயாவிலிருந்து நம் நாட்டிற்குக் கொண்டுவரப்பெற்றதாகும்.

கோவலன், மதுரையிலுள்ள ஆயர்பாடியில் உண்டபிறகு அவனுக்குக் கண்ணகி வெற்றிலைச்சுருள் அளித்தாள் என்று

சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனை 'உண்டினி திருந்த உயர்பே ராளற்—கம்மென் றிரையலோ டடைக்கா யீந்த—' என்னும் சிலப்பதிகார அடிகளால் உணர்க. (XVI. 54—55) எனவே, இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுன்னரே வெற்றிலை நம் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டுளது என்பது நன்கறியக்கிடக்கின்றது.

2. சர்க்கரை:—வடமொழியில் இச்சொல் மணல் என்று பொருள்படும். மணல்போன்றிருக்குங் காரணம்பற்றி இப்பெயர் எய்தியுது போலும். இஃது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன்னர் நம் நாட்டிற்குச் சீனதேயத்தினின்று கொண்டு வரப்பட்டது என்று ஆராய்ச்சியர்ளர் கூறுகின்றனர்.

3. மிளகாய்:—இது நானூறு ஆண்டுகட்கு முன்னர்த் தென் அமரிக்காவிலுள்ள சில்லி என்ற மாகாணத்திலிருந்து நம் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பெற்றதாகும். சுவையில் இது மிளகைப்போல் உறைப்பாயிருத்தலால் தமிழ்மக்கள் முதலில் இதனை மிளகுகாய் என்று வழங்கத் தொடங்கினர். பின்னர், இது 'மிளகாய்' என்று மருவி வழங்கலாயிற்று. தெலுங்கில் இதனை 'மிரியபுகாய்' என்று கூறுவார்; மிரியம் என்பதற்கு மிளகு என்று பொருளாம். மலையாளத்தில் இதனைக் 'கப்பல் மிளகு' என்று வழங்குவர். இது அமரிக்காவிலிருந்து கப்பல் மூலமாய் அங்குவந்த காரணப்பற்றி அங்ஙனம் வழங்கிவருகின்றனர் போலும். இராசராசன் குலோத்துங்கன் முதலான சோழ மன்னர்கள் சர்க்கரை, மிளகு, சீரகம், புளி முதலியவற்றை வாங்குதற்குத் திருக்கோயில்களுக்கு நிபந்தங்கள் விட்டிருக்கின்றனர். ஆனல் அதில் மிளகாய் மாத்திரம் காணப்படாமைக்குக் காரணம் அந்நாளில் நம் தமிழகத்தில் அஃது இல்லாமையே யாகும்.

4. கத்தரிக்காய்:-இஃது அமரிக்காவிலிருந்து மரக்கலத்தின் வழியாய் வங்காளத்திற்குக் கொண்டுவரப்பட்டுப் பிறகு தெலுங்கு

நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் வந்தது. தெலுங்கில் இதனை 'வங்காய' என்று வழங்குவர்; வங்காளத்திலிருந்து வந்தது என்பது இதன் பொருளாகும்.

5. காப்பி :—இஃது அரபிமொழியாகும். இஃது அரேபியாவிலிருந்து முதலில் பிரஞ்சு தேயத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. அந்நாட்டினரும் இதனைப் பருகப்பழகினர். பின்னர், பிரஞ்சுதேயமக்கள் நம் தமிழ் நாட்டிற்கு வாணிகத்தின்பொருட்டு வந்தபோது அவர்களால் இது நம் நாட்டிற்குக் கொண்டுவரப் பட்டது. நம் நாட்டினரும் இதனைப்பருக நன்குபழகினர். வடநாட்டினர் இதனைப்பருக இன்னும் பழகாமைக்குக் காரணம் அவர்கள் பிரஞ்சு தேயமக்களோடு நெருங்கிப்பழகாமையேயாகும். நம் தமிழ் மக்கள் முன்னாளில் பிரஞ்சு தேயத்தாரோடு பெரிதும் நெருங்கிப்பழகியவர்கள் என்பதும் சிலகாலம் நம் தமிழ்நாடும் அன்னோர்களது ஆட்சியின்கீழ் இருந்ததென்பதும் இந்து தேயத்தின் பண்டை வரலாற்றை அறிந்தோர்யாவரும் நன்குணர்ந்தனவேயாம். ஆகவே, பிரஞ்சு மக்களிடத்திருந்தே நம் தமிழகத்தினர் காப்பியைப் பருகக் கற்றுக்கொண்டனர் என்க.

தேயிலை :—இது சீனதேயத்துப் பொருளாகும். இதனை அங்குத் 'தே' என்று வழங்குவர். ஆங்கிலேயர் சீனர்களிடத்திருந்து தேயிலை நீரைப் பருகக் கற்றுக்கொண்டனர். பின்னர், ஆங்கிலேயரிடத்திலிருந்து இதனைப் பருகுதற்குத் தமிழ்மக்கள் கற்றனர். எனவே நம் தமிழ்நாட்டில் தேயிலையும் காப்பியும் பருகும் வழக்கம் நன்கு நிலைபெறுவதாயிற்று. ஆனால் வடநாட்டினர் தேயிலை நீரை மாத்திரம் பருகுதலை ஆங்கிலேயரிடமிருந்து பழகியுள்ளார்.

7. உருளைக்கிழங்கு :—இஃது அமரிக்காவில் முதலில் பயிரிடப்பட்டுவந்தது; 300 ஆண்டுகளுக்குமுன் இதனை ஐரோப்பாவிற்குக் கொண்டுவந்து பயிரிடத் தொடங்கினர்; நூறு ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பாவிலிருந்து நம் நாட்டிற்குக் கொண்டுவரப் பட்டது.

8. **புகையிலை**:—இது முதலில் அமரிக்காவில் பயிரிடப் பெற்று வந்தது. பிறகு அமரிக்காவிலுள்ள வர்ஜீனியா என்னும் நாட்டிலிருந்து எலிசபத் அரசியின்காலத்தில் கி. பி. 1586ஆம் ஆண்டில் சர் வால்டர் ராலி என்பவனால் இங்கிலாந்திற்குக் கொண்டுவரப்பட்டது ;. இதனையுட்கொண்டால் பசியின்மை, மந்தம் முதலியவற்றைப்போக்கும் என்று அந்நாளில் ஆங்கிலேயர் பெரிதும் நம்பினர். ஆனால் இதன்விலை மிகுதியாயிருந்தமையால் செல்வமிக்கவர்களே இதனை வாங்கி உபயோகித்து வந்தனர். பிறகு அமரிக்காவில் இது பயிரிடப்படும் நாட்டை ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டு இதை மிகுதியாகப்பயிரிட்டு இங்கிலாந்திற்கு அனுப்பிவந்தமையால் இதன் விலையும் குறைந்தது. ஆங்கிலேயர் எல்லோரும் இதனை எளிதில் வாங்கி உபயோகிக்கத் தொடங்கினர். முதலாம் ஜேம்ஸ்மன்னன் ஆட்சிக்காலத்தில் இதனை உபயோகிக்கும் நியவழக்கம் இங்கிலாந்தில் எங்கும் பரவிற்று. அம்மன்னன் இதனைத்தடுக்கச் சட்டம் ஏற்படுத்தினன். ஆனால் இதனை உபயோகிக்கும் வழக்கம் ஒழியவில்லை. இதற்குக் காரணம் இது அந்நாட்டின் மக்களது மனத்தைப் பிணித்துத்தனக்கு அடிமையாக்கிக் கொண்டமையேயாம். உரோமாபுரியிலுள்ள போப் கோயில்களில் இதனை உபயோகிப்பவர்களைச் சாதியினின்று விலக்கவேண்டுமென்று ஒரு சட்டம் செய்தார். முதலாம் சார்லஸ்வேந்தன் காலத்தில் (1625 கி. பி.—1649 கி. பி.) உப்பு, கஞ்சா, அபின் முதலியவற்றைப் போல் இதன் வாணிகமும் அரசாங்கத்தாரின் பக்கத்தில் இருந்தது. பின்னர் இதனைமாத்திரம் விலக்கிவிட்டனர். மூன்றாம் ஜார்ஜ்மன்னன் காலத்தில் (1760—1820) பொடியின் பெருமை மேனாட்டில் எங்கும் பரவலாயிற்று. ஆனால், இந்நாளில் பொடியைக்காட்டிலும் புகைச் சுருட்டை உபயோகித்தலே சிறந்த நாகரீகம் என்று மேனாட்டார் கருதுகின்றனர். இது அமரிக்காவிலுள்ள பிரேசில் என்ற நாட்டிலிருந்து நம்நாட்டிற்குக் கி. பி. 1617ஆம் ஆண்டில்கொண்டு வரப்பட்டது. ஜிஹாங்கீர் சக்கரவர்த்திக்கு ஐரோப்பியன் ஒருவன் முதலில் இதனைப் பரிசிலாகக் கொணர்ந்து கொடுத்தனன் என்று கூறுகின்றனர். இப்போது இது நம்நாட்டில் எங்கும் பரவியுள்ளது.

---

# பாண்டியர் வரலாறு.

திருவாளர். T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

(முற்றொடர்ச்சி-225)

பாண்டியன் கானப்பேர்கடந்த உக்கிரப்பெருவழுதி :—கடைச் சங்கத்தைப் புரந்துவந்த பாண்டிமன்னர்களுள் இவனே இறுதியில் இருந்தவன். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது புதல்வன் என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். இவன் தன் பகைஞனாகிய வேங்கை மார்பனைப் போரில்வென்று அவனுக்குரிய கானப்பெரெயில் (காளையார் கோயில்) என்னும் ஊரைக்கைப்பற்றியவனாதலின் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்று வழங்கப் பட்டனன் (புறம்-21). மாவெண்கோ என்னும் சேரமன்னனும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழமன்னனும் இவனுக்குச் சிறந்த நண்பர்களாக இருந்தனர். (புறம்-367) இவன் சங்கப்புலவர்களோடு ஒப்பப்பாடும் ஆற்றலுடைய பெரும் புலவனாக விளங்கியமை ஈண்டு உணரத்தக்கது. மதுரை உப்பூரி குடிகிழார் மகனாவார் உருத்திரசன்மரைக்கொண்டு அகநானூறு தொகுப்பித்தோன் இவ்வேந்தனே யாவன். இவன் தலைமையின் கீழ்த்தான் கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது என்று ஒரு கதை வழங்குகிறது ; இஃது உண்மையன்று என்ப தற்குப் பல சான்றுகள் உள்ளன. இவன் குறிஞ்சியையும் மருதத்தையும் புனைந்துபாடுவதில் வன்மையுடையவன் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இவன் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும் அகநானூற்றில் ஒரு பாடலும் உள்ளன. (நற்றிணை 98, அகநானூறு 26) இவன் காலத்திற்குப் பின்னர்க் கடைச் சங்கம் நடைபெறாமல் அழிவுற்றது என்பது களவியலுரையால்

உணரப்படுகின்றது. ஆனால் அச்சங்கம் அழிந்தமைக்குத் தற்காலம் சொல்லப்படுங் காரணங்கள் உண்மையானவை என்பது தோன்ற வில்லை. இவனுக்குப்பிறகு பாண்டி நாட்டில் அக்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர் யாவரென்பது இதுபோது புலப்படவில்லை.

இனி, இவ்வேந்தர்களேயன்றிக் கடைச்சங்கநாளில் வேறு சில பாண்டி மன்னர்களும் இருந்தனர் என்பது சங்கத்துச் சான்றோர்கள் அருளிய எட்டுத்தொகை நூற்களால் அறியப்படு கின்றது. அன்னோர், கருங்கையொள்வாட் பெரும் பெயர்வழுதி, பன்னாடுதந்த பாண்டியன்மாறன்வழுதி, நல்வழுதி, கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழி யன், குறுவழுதி என்போர். அவர்களைப் பற்றிய வரலாறுகள் நன்கு புலப்படாமையின் சிற்சில குறிப்புக்களே ஈண்டு எழுதப் படுகின்றன.

கருங்கை யொள்வாட் பெரும் பெயர் வழுதி என்பான் சோழன் கரிகாற்பெருவளத்தான் காலத்தில் இருந்தவன். அவ் வளவனது மாமனாகிய இரும்பிடர்த்தலையார் என்ற புலவரால் பாடப்பெற்றவன்; மிக்க வீரமும் கொடையும் உடையவன். (புறம் 3).

பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி என்பான் சிறந்த செந்தமிழ்ப்புலவன்; (குறுந்தொகை 270) எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நற்றிணையைத் தொகுப்பித்தோன் இம்மன்னனே யாவன். (நற்றிணை இறுதிக்கட்டுரை).

நல்வழுதி என்பவன் வையையாற்றைச் சிறப்பிக்கும் பன் னிரண்டாம் பரிபாடலை இயற்றியவன். இப்பாடலில் கூறப் பெற்றுள்ள புதுநீர்விழாவும் வையையின் சிறப்பும் படித்தின்புறத் தக்கன.

கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி என்பான் வடபுல மன்னர்களைப் போரிற் புறங்கண்டு வெற்றிப்புகழை எங்கும் பரப்பிய பெருவீரன் (புறம் 51, 52).

இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்பான் வண்மையும் வீரமும் உடையவன் என்பது புலவர் தலைவராகிய நக்கீரனார் பாடிய 56-ஆம் புறப்பாட்டினால் நன்குவிளங்குகின்றது. இப்பாட்டினால் கடைச்சங்க காலத்தில் மேனாட்டு யவனர்கள் நம்தமிழகத்தில் மதுவகைகளைக் கொணர்ந்து விற்றுவந்தனர் என்பது இனிதுணரப்படுகின்றது.

குறுவழுதி என்பான் அகநானூற்றிலுள்ள 150-ஆம் பாடலை இயற்றிய வேந்தன் ஆவன்.

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்பான் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவரால் புகழ்ந்து பாடப்பெற்றவன்; (புறம் 58) சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனுக்குச் சிறந்த நட்பினன்.

நம்பி நெடுஞ்செழியன் என்பான் அரசர்கட்குரிய எல்லா இன்பங்களையும் துய்த்து, வண்மை, வீரம், நடுநிலைமை முதலான அருங்குணங்களெல்லாம் ஒருங்கே யமையப்பெற்றுப் பெருமையோடும் புகழோடும் வாழ்ந்தவன். இவன் இறந்த ஞான்று பேரெயின் முறுவலார் என்னும் புலவர் பாடியுள்ள கையறுநிலை எத்தகையோருடைய மனத்தையும் உருகச்செய்யும் இயல்பு வாய்ந்ததாகும். (புறம் 239).

இனி, கடைச்சங்கம் இரீஇய பாண்டிமன்னர் நாற்பத்தொன்பதின்மருள் கவியரங்கேறினார் மூவர் என்று இறையனாரகப் பொருளுரை உணர்த்துகின்றது. (பக்கம் 6) சங்கநூற்களை ஆராய்ந்துபார்க்குங்கால், தண்டமிழ்ப்புலமைசான்ற ஒண்டிறற் பாண்டிமன்னர்கள் பன்னிருவர், கடைச்சங்கநாளில் இருந்துள்ளார் என்பது நன்குபுலப்படுகின்றது. இப்பன்னிருவரும் இயற்றியுள்ள சிறந்த செந்தமிழ்ப்பாக்கள் நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு ஆகிய ஐந்து தொகை நூற்களிலும் காணப்படுகின்றன. எனவே, சங்கப்புலவர்களோடு ஒப்பப் பாடும் புலமையும் பெருமையும் வாய்ந்துள்ள இப்பன்னிரு பாண்டிமன்னர்களும் கவியரங்கேறியவர்களாதல் வேண்டு

மன்றோ? அங்ஙனமாயின், கடைச்சங்கம் இரீஇய பாண்டியர்களுள் கவியரங்கேறினார் மூவர்என்று இறையனாரகப்பொருளுரை உரைப்பது சிறிதும் பொருந்தவில்லை. ஆகவே, இதனை அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை உணர்த்துவார்களாக.

இனி, இம்மன்னர்களது ஆட்சிக்காலங்களை வரையறுத்துரைப்பதும், எவனுக்குப்பின் எவன் பட்டத்திற்குவந்தனன் என்பதையும் ஒருவனுக்கு மற்றொருவன் என்னமுறையினன் என்பதையும் சங்கநூற்களைக்கொண்டு ஆராய்ந்து கூறுவதும் இயலாதவையாயுள்ளன. நுணுகியறிந்தவற்றை ஆங்காங்குக் குறித்துள்ளோம். கடைச்சங்ககாலத்தில் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டிய அரசர்களைச் சில ஆராய்ச்சியாளர் அடியில்வருமாறு முறைப்படுத்தி எழுதியுள்ளனர்.

ஆரியப்படைதந்த பாண்டியன் நெடுஞ்செழியன்.
வெற்றிவேற்செழியன் என்ற சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்.
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி.

---

# IV

## பாண்டிநாட்டில் களப்பிரர் ஆட்சி.

பாண்டியருள் வலியிழந்த ஓரரசன் ஆட்சிபுரியும்போது களப்பிரர் வகுப்பைச் சேர்ந்த ஒருமன்னன் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அதனைக்கவர்ந்துகொண்டு அரசாளத் தொடங்கினன். சங்கநூற்களில் 'களப்பிரர்' என்றமொழியே காணப்படவில்லை. கி. பி. 500ல் வாழ்ந்தவராகிய வராகமிகிரரும் தென்னாட்டவரின்வரிசையில் களப்பிரரைக் குறிக்கவில்லை. ஆனால் கி. பி. 7, 8ஆம் நூற்றாண்டுகளிலிருந்த பல்லவவேந்தர்களாகிய

சிம்மவிஷ்ணுவும் முதல்நரசிம்மவர்மனும்1 மேலைச்சளுக்கிய வேந்தர்களாகிய முதல்விக்கிரமாதித்தனும் விசயாதித்தனும் இரண்டாம் விக்கிரமாதித்தனும்2 களப்பிரரை வென்றதாகக் கூறிக் கொள்ளுகின்றனர். ஆகவே இவர்கள் கி. பி. ஆறும் நூற்றாண்டின் முற்பகுதியிலேதான் பாண்டிநாட்டைக் கவர்ந்திருத்தல் வேண்டும். ஆயினும், இவர்கள் நாட்டை நீண்டகாலம் ஆட்சி புரியவில்லை. இவர்களது ஆட்சி சிறிதுகாலமே நடைபெற்றதென்பது பாண்டியன் கடுங்கோன் என்பான், பாண்டிநாட்டைக் கவர்ந்துகொண்ட அக்களப்பிரவேந்தனையே போரிற்புறங்கண்டு தன்னாட்டைக் கைப்பற்றி மீண்டும் அரசாளத்தொடங்கினன் என்று கூறும் வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றது.3 இது நிகழ்ந்தது சற்றேறக்குறைய கி. பி. 560 என்பர்.

இனி, பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணமும்4 திருவிளையாடற் புராணமும்5 கருநாடவேந்தனொருவன் பாண்டி

---

1 South Indian Inscriptions Vol. II pp. 356, Vol. I pp. 152.

2 Indian Antiquary Vol. IX pp. 129, Vol. VII pp. 303.
Epigraphia Indica Vol. V pp. 204.

3 வேள்விக்குடிச் செப்பேடுகளில் 4-ஆம் எடு பக்கம் 1.

4 கானக்கடிசூழ்வடுகக்கருநாடக்காவன்
மானப்படைமன்னன்வலிந்துநிலங்கொள்வானாய்
யானைக்குதிரைக்கருவிப்படைவீரர்திண்டேர்
சேனைக்கடலுங்கொடுதென்றிசைநோக்கிவந்தான்.

வந்துற்றபெரும்படைமண்புதையப்பரப்பிச்
சந்தப்பொதியிற்றமிழ்நாடுடைமன்னன்வீரம்
சிந்தச்செருவென்றுதன்னாணைசெலுத்துமாற்றாற்
கந்தப்பொழில்சூழ்மதுராபுரிகாவல்கொண்டான்.

(பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணம்.)

5 துன்னுசேனையிற்றுளங்கியவொருகருநாட
மன்னனன்னநாள்வந்தருட்டென்னனையோட்டி
கன்னிமண்டலங்கொண்டமன்னையர்கவிழுந்து
முன்னநீடியவதிகமுறைமையுமொழித்தான்.

(நம்பி திருவிளையாடல்.)

மண்டலத்தைக் கவர்ந்தாண்டனனென்றும் அவன் காலத்தே வைதிகநெறியும் சைவநெறியும் ஒருங்கே அழிய, சமணசமயம் மிக்கசெழித்ததென்றும் பின்னர் ஓரிரவில் அவன் கொல்லப்பட்டா னென்றும் கூறுகின்றன. இவ்விருநூற்களும் கூறும் கருநாட வேந்தன் களப்பிரனாகத்தானிருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாள ரும் இங்ஙனமே எண்ணுகின்றனர்.

---

# V

## கி. பி. 575 முதல் கி. பி. 900 வரை ஆட்சி புரிந்த பாண்டியர்கள்.

பாண்டியன் கடுங்கோன்:—இம்மன்னன் கி. பி. 575 முதல் கி. பி. 600 வரையில் ஆட்சிபுரிந்தவன் என்பது தெரிகிறது. பாண்டி நாட்டில் சிலபகுதிகளைக் களப்பிரரிடத்தினின்று முதலில் கைப்பற்றி மீண்டும் பாண்டியரது ஆட்சியை மதுரையில் நிலை பெறுமாறு செய்தவன் இவ்வேந்தனேயாவன். இவன் களப் பிரரைப் போரிற் புறங்கண்டு அன்னோரது ஆளுகைக்குட் பட்டிருந்த தன்நாட்டைக்கைப்பற்றி அரசுசெலுத்திய வரலாற்றை வேள்விக்குடிச் செப்பேடுகள் நன்கு விளக்குகின்றன. அப்பகுதி,

"களப்ரனெனுங் கலியரசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன்முளைத்த பருதிபோற் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு
விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்துக்
கோவுங்குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோலோச்சி வெண்குடைநீழற்
றங்கொளிநிறைந்த தாரணிமங்கையைப்
பிறர்பாலுரிமை திறவிதினீக்கித்
தன்பாலுரிமை நன்கனமமைத்த

மானம்போர்த்த தானைவேந்தன்
ஒடுங்காமன்னர் ஒளிநகரழித்த
கடுங்கோ னென்னுங் கதிர்வேற் றென்னன்" என்பது. இதனால் இவனது வீரமும் புகழும் இனிது புலப்படுதல் காண்க.

இனி, தென்மதுரையின்கண் விளங்கியதாகச் சொல்லப் படும் முதற்சங்கத்தைப் புரந்த பாண்டியருள் இறுதியிலிருந்தவன் கடுங்கோன் என்று இறையனார் அகப்பொருளுரை உணர்த்து கின்றது. இவன் மிகப்பழைய காலத்தில் நிலவிய முதற் சங்கத் தைப் புரந்தவன்; களப்பிரரை வென்ற கடுங்கோன் கடைச்சங்கத் திறுதிக்காலத்திற்குச் சுமார் நானூறு ஆண்டுகட்குப் பின்னர் இருந்தவன். எனவே, கடுங்கோன் என்னும் பெயர்கொண்ட இவ்விருவரும் வேறுவேறுகாலத்தில் வாழ்ந்த வெவ்வேறு மன்னர் ஆவர். ஆகவே, பெயரொற்றுமை யொன்றையேகொண்டு இவ் விருவரையும் ஒருவரென்று கூறுதல் உண்மையும் பொருத்தமும் உடையதன்று.

மாறவர்மன் அவனி சூளாமணி:—இவன் பாண்டியன் கடுங்கோனது மகன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறு கின்றன. இவன் கி. பி. 600 முதல் கி. பி. 625 வரை ஆட்சி புரிந்த பாண்டியன் ஆவன். இவன் காலத்தில் நிகழ்ந்த செய்தி களுள் ஒன்றும் புலப்படவில்லை. இவன் காலம்முதல் பாண்டி யர்கள் 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்ற பட்டங்களை ஒருவர்பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்துவருவாராயினர். மாறவர்மன் என்றபட்டத்தை முதலில் புனைந்து வாழ்ந்தவன் இவ்வேந்தனே யாவன்.

இவர்களைப்போல் சோழமன்னர்களும் 'இராசகேசரி' 'பரகேசரி' என்ற பட்டங்களை ஒருவர்பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்துவந்தமை ஈண்டு அறியத்தக்கதாகும்.

செழியன் சேந்தன்:—இவன், மாறவர்மன் அவனிசூளாமணி யினது புதல்வன்; சடையவர்மன் என்ற பட்டம்புனைந்து கி. பி. 625 முதல் கி. பி. 640 வரையில் பாண்டிநாட்டில் அரசாண்டவன்.

இவனைச் 'சிலைத்தடக்கைக் கொலைக்களிற்றுச் செழியன்' எனவும், 'மண்மகளை மறுக்கடிந்த வேந்தர் வேந்தன்' எனவும், 'செங்கோற் சேந்தன்' எனவும் வேள்விக்குடிச் செப்பேடுகள் புகழ்கின்றன. இவனது ஆட்சியின் இறுதிக்காலத்தேதான் சீனதேயத்தினனாகிய 'யுவான்சுவாங்' என்பான் பல்லவர்களது தலைநகராகிய காஞ்சிக்கு வந்தனன். இவன் அந்நகரிலிருந்து பாண்டி நாட்டிற்குச் செல்லப் புறப்படுங்கால் பாண்டி மன்னன் அப்போதுதான் இறந்தனன் என்றும் அந்நாட்டில் பஞ்சம் மிகுந்திருந்தது என்றும் தனக்குக் காஞ்சியிலுள்ளவர்கள் அறிவித்த செய்திகளைத் தன் வரலாற்றுக்குறிப்பில் வரைந்துள்ளான். எனவே, கி.பி. 640-ஆம் ஆண்டில் இறந்ததாக இவனால் குறிக்கப்பெற்ற பாண்டியன் இச்செழியன் சேந்தனே யாவன். இவனைப் பற்றிய பிறசெய்திகளை யுணர்த்தும் கருவிகள் தற்காலத்துக் கிடைத்தில.

மாறவர்மன் அரிகேசரி:—செழியன் சேந்தன் இறந்த பின்னர் அவனது புதல்வனாகிய அரிகேசரி என்பான் கி.பி. 640-ம் ஆண்டிற் பட்டம் எய்தினன். இவன் மாறவர்மன் என்ற பட்டம் புனைந்தவன். இவனைச் சுந்தரபாண்டியன் எனவும், கூன்பாண்டியன் எனவும் திருவிளையாடற்புராணம் கூறுநிற்கும். இவன் முதலில் சமணமதப் பற்றுடையவனாயிருந்து அம்மதத்தைப் பெரிதும் ஆதரித்துவந்தான்; பிறகு சைவசமயாசாரியருள் ஒருவராகிய திருஞானசம்பந்த மூர்த்திகளால் சைவனாக்கப்பட்டான். இவன் முன்னிலையிற்றான் திருஞானசம்பந்தருக்கும் சமணமுனிவர் எண்ணாயிரவர்க்கும் அனல்வாதமும் புனல்வாதமும் நிகழ்ந்தன. இவனது மனைவியார் மங்கையர்க்கரசி எனப்படுவர். இவ்வம்மையார் சோழமன்னனது புதல்வியார் என்று திருஞானசம்பந்தர் கூறியுள்ளார். இவ்வடிகளைச் சோழநாட்டிலிருந்து வருவித்துப் பாண்டிநாட்டில் பரவியிருந்த சமண் இருளைப் போக்குவித்தவர் இவ்வம்மையாரே யாவர். இவர்கள் காலத்தில் பாண்டிநாட்டில் அமைச்சராயிருந்தவர் குலச்சிறையார் என்பவர். இவர்கள் மூவரும் சைவசமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்

51

களாக விளங்கியவர்கள். சிவபெருமானிடத்துப் பேரன்புபூண்டொழுகிய பாண்டியன் அரிகேசரி*, மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், ஆகிய இம்மூவரும் சிவனடியார் அறுபத்துமூவருட் சேர்க்கப்பெற்றுள்ளார். இவர்களது வரலாற்றைப் பெரியபுராணத்திற் காணலாம்.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பாண்டிநாடு உயர்நிலையையடைந்தது. இவன், சேரர்களையும் சில குறுநிலமன்னர்களையும் பாழி, நெல்வேலி, செந்நிலம் முதலான இடங்களில் வென்றனன் என்றும், ஒருபகலில் சோழர்களுக்குரிய உறையூரைக் கைப்பற்றினன் என்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவன் புரிந்த இப்போர்களை இறையனார் அகப்பொருளுரையிலுள்ள மேற்கோள்பாடல்களும் எடுத்தியம்புகின்றன. (பாடல்கள் 22, 106, 235, 309) சைவசமயாச்சாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகளும் 'நெல்வேலிவென்ற நெடுமாற னடியார்க்குமடியேன்' என்ற திருத்தொண்டத்தொகைப் பாடற்பகுதியில் நெல்வேலிப்போரில் இவன் வெற்றியெய்திய செய்தியைக் குறித்துள்ளார். எனவே, சேரர்களும் பல குறுநிலமன்னர்களும் இவனுக்குத் திறைசெலுத்த, இவன் வேந்தர் வேந்தனாய்ச் சிறப்புற்று வாழ்ந்தவன் என்பது நன்குபுலப்படுகின்றது.

இவனது ஆளுகையின் தொடக்கத்தில்தான் சீனதேயத்தினனாகிய 'யுவான்சுவாங்' என்பான் பாண்டிநாட்டிற்குச் சென்றனன். அவன் தன்வரலாற்றுக் குறிப்பில், 'பாண்டி நாட்டில் முத்தும் உப்பும் மிகுதியாகக் கிடைக்கின்றன; பக்கத்துத் தீவுகளில் கிடைக்கும் முத்துக்களும் இங்குக் கொண்டுவரப்படுகின்றன; இந்நாட்டில் வேறு விளைபொருள்கள் மிகுதியாக இல்லை. இங்கு வெப்பம் மிகுந்துள்ளது; இந்நாட்டு மக்கள் எல்லோரும் கறுத்த மேனியுடையவர்களாயும் உறுதியும் போர் வலிமையும் மிக்கவர்களாயுமிருக்கின்றனர்; இந்நாடு வாணிகத்

---

* இவனது சிவபத்தி இறையனாரகப்பொருளுரையிலும் புகழப்பட்டுளது. (மேற்கோள் பாடல்கள் 256, 297)

தால் வளம்பெற்றுச் செல்வத்தாற் சிறந்துள்ளது' என்று பாண்டி நாட்டைப்பற்றித் தான் நேரில் அறிந்தவற்றை எழுதியுள்ளான். இதனால் மாறவர்மன் அரிகேசரியின் காலமாகிய ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பாண்டிநாடு எத்தகைய நிலையிலிருந்தது என்பதை ஒருவாறு உணரலாம்.

இவ்வேந்தன் இரணியகர்ப்பதானமும் துலாபாரதானமும் பலபல செய்து பெருமையுற்றவன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. துலாபாரதானஞ் செய்தல் கடைச் சங்க நாளிலும் வழக்கத்திலிருந்ததென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது. (சிலப். நீர்—173—176) இவனைப் போலவே, கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் தமிழகத்தில் பேரரசனாக வாழ்ந்த முதலாம் இராசராச சோழனும் இரணிய கர்ப்பதானமும் துலாபாரதானமும் செய்தனன் என்று திருவிசலூர்க் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

இனி, கடைச்சங்கநாளில் விளங்கிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே இவனது தந்தையாகிய செழியன்சேந்தன் எனவும் அந்நாளில் நிலவிய இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனே இவ்வரிகேசரி எனவும் ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் வரைந்துள்ளார். (Indian Antiquary Vol. XL). இஃது ஒருசிறிதும் உண்மையன்று. கடைச்சங்க காலத்துப் பாண்டியர்கள் எல்லோரும் தூயதமிழ்ப் பெயரையுடையவர்கள்; சங்ககாலத்திற்குப் பின்னர் அவர்களது பாண்டிநாடு களப்பிரரால் கைப்பற்றப்பட்டது. களப்பிரரது ஆட்சியொழிந்த பின்னர் அந்நாட்டின் அரசுரிமையை எய்தி, ஆட்சிபுரிந்த இப் பாண்டியர் இருவரும் 'சேந்தன்' 'அரிகேசரி' என்ற வடமொழிப் பெயர்களை யுடையவர்கள்; அன்றியும் வடநாட்டு ஆரிய மன்னர்களைப்போல் 'வர்மன்' என்ற வடமொழிப்பட்டம் புனைந்து கொண்டவர்கள். சங்ககாலத்துப் பாண்டிமன்னர்கள் இப்பட்டம் புனைந்து கொண்டவர்களல்லர் என்பது பத்துப்பாட்டு, புறநானூறு, அகநானூறு முதலான நூற்களை ஓதியுணர்ந்தவர்கள்

நன்கறிந்ததொன்றும். சங்ககாலத்துப் பாண்டியர்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குமுன்னரும் வாழ்ந்தவர்கள்; வடமொழிப் பெயர்களையும் பட்டங்களையும் உடையவர்களாகிய இப்பாண்டியர்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்தவர்கள். எனவே, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்போரும் செழியன் சேந்தன், மாறவர்மன் அரிகேசரி என்போரும் ஒன்றுக்கொன்று சேய்மையுற்ற வெவ்வேறு காலங்களில் விளங்கிய பாண்டி மன்னர்கள் என்பது நன்கு வெளியாதல் காண்க.

கோச்சடையன் ரணதீரன்:—மாறவர்மன் அரிகேசரி என்பான் கி. பி. 670-ஆம் ஆண்டில் சிவபெருமான் திருவடிநீழல் எய்தவே, அவனது மகனாகிய கோச்சடையன் ரணதீரன் அரியணையேறிச் செங்கோல் கைக்கொண்டனன். இவனுக்குச் சில விருதுப்பெயர்கள் இருந்தன. அவை, தென்னவானவன், செம்பியன், சோழன், மதுரகருநாடகன், கொங்கர்கோமான் என்பன. இவற்றால் இவ்வேந்தன் சோழநாட்டையும் கருநாட தேயத்தையும் கொங்கு நாட்டையும் கைப்பற்றித் தனக்குத் திறை செலுத்துமாறு செய்தவன் என்பது நன்கு அறியக்கிடக்கின்றது. அன்றியும் இவன் தென்திருவாங்கூரில் ஆண்ட ஆய்வேளைப் போரில் வென்றனன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. மேலைச்சளுக்கிய மன்னனாகிய முதல் விக்கிரமாதித்தனைத் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள மருதூரிலும் மங்கலபுரத்திலும் போரில்வென்று புறங்காட்டியோடச் செய்த புகழுடையான் இவ்வேந்தன் என்பதும் வேள்விக்குடிச்செப்பேடுகளால் அறிப்படுகின்றது. முதல் விக்கிரமாதித்தன் இப்பாண்டியனோடு போர்புரிந்த செய்தி அவனது கேந்தூர்க் கல்வெட்டுக்களாலும் உறுதியெய்துகின்றது. (Epigraphia Indica Vol. IX No. 29. P. 205) ஒப்பற்ற வீரனாய் நிலவிய இவ்வரசன் கி. பி. 710-ஆம் ஆண்டில் விண்ணுலகடைந்தான்.

அரிகேசரி பராங்குச மாறவர்மன்:—இவன் கோச்சடையனது புதல்வன் ஆவன். இவன், தன்பாட்டன் பெயராகிய

அரிகேசரி என்ற பெயருடையவன்; மாறவர்மன் என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன். இவனை முதலாம் இராசசிம்மன் என்வும் தேர்மாறன் எனவும் வழங்குவதுமுண்டு. இவன் கி. பி. 710 முதல் 769 வரை ஆட்சிபுரிந்தவன் என்பர். இவன்காலத்தில் சோணாடு பல்லவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்தது. அந்நாளில் தொண்டை மண்டலத்திற்கும் சோழமண்டலத்திற்கும் அரசனாக வீற்றிருந்து செங்கோல் செலுத்தியவன் நந்திவர்மப்பல்லவமல்லன் என்பான். நம் மாறவர்மனுக்கும் இப்பல்லவமல்லனுக்கும் பல போர்கள் நிகழ்ந்தன. குழும்பூர், நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர், பெரியலூர் என்னும் ஊர்களில் நடைபெற்ற போர்களில் இவன் பல்லவமல்லனையும் அவனது படைத்தலைவர்களையும் தோல்வியுறச் செய்தனன் என்பது தெரிகிறது. இவ்வூர்களுட் பல, புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ளன. எனவே, பல்லவர்கள் பாண்டி நாட்டையும் கைப்பற்றுவதற்குத் தெற்கே பெரும் படையுடன் செல்ல, இதனையுணர்ந்த நம் பாண்டியன் அப்பகைஞர்களைப் பாண்டிநாட்டின் வடஎல்லையிலே தோற்றோடச் செய்தனன் போலும்.

நென்மெலி, மண்ணை முதலிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் நம் பாண்டியனைப் பல்லவமல்லன் வென்றனன் என்று திருமங்கையாழ்வார், கச்சிப்பரமேச்சுர விண்ணகரப்பதிகத்தில் கூறியிருக்கின்றனர். இச்செய்தி, நந்திவர்மப் பல்லவமல்லனது உதயேந்திரஞ் செப்பேடுகளிலும் சொல்லப்பட்டுளது. (South Indian Inscriptions Vol. II part III No. 74) ஆகவே, சில இடங்களில் பல்லவர்களும் வெற்றியடைந்திருக்கலாம்.

இவன் மழநாட்டையுங் கொங்குநாட்டையும் கைப்பற்றி அந்நாட்டு மன்னர்களைத் தனக்குக் கப்பஞ்செலுத்திவருமாறு செய்தனன் என்றும் மழவரையன் மகள் பூசுந்தரியை மணந்து கொண்டனன் என்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இவன் கொங்குநாட்டிற்குப் படையெடுத்துச் சென்றபோது திருப்பாண்டிக்கொடுமுடி என்னுந் திருப்பதிக்குப்போய் அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானது திருவடிகளை வணங்கிப் பொற்குவியலும் நவமணித்திரளும் மனமகிழ்ந்து கொடுத்தனன் என்பது வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியப்படுகின்றமையின் இவனது சிவபத்தியின் மாட்சி ஒருவாறு விளங்கும். இவன், தன் பாட்டனைப்போல் இரணியகர்ப்பதானங்களும் துலாபாரதானங்களும் பலசெய்து புகழெய்தியவன். இறையனர் அகப்பொருளுரை மேற்கோள்பாடல்களும் இவன் பெருமையையும் வீரத்தையும் நன்குபுலப்படுத்தாநிற்கும்.

நெடுஞ்சடையன் பராந்தகன் :—இவன் அரிகேசரிபராங்குசனது புதல்வன் ; சடையவர்மன் என்ற பட்டம் புனைந்தவன் ; தென்னவானவன், சீவரன், சீமனேகரன், சினச்சோழன், புனப்பூழியன், விநயவிச்சுருதன், விக்கிரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மானியசாசனன், மநூபமன், மர்த்திதவீரன், கிருபாலயன், கிதிகின்னரன், கலிப்பகை, கண்டகநிட்டூரன், பண்டிதவத்சலன், கார்முகபார்த்தன், பரிபூரணன், கூடநிர்ணயன் முதலான பல விருதுப்பெயர்களையுமுடையவன். இவற்றுள் இரண்டொழிய, எஞ்சியவையெல்லாம் வடமொழிப் பெயர்களாகும். தூய தமிழ்ப் பெயர்களையும் பட்டங்களையும் உடையவர்களாய் வாழ்ந்துவந்த தமிழ் வேந்தர்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இத்தகைய பட்டங்களைப் பெருவிருப்புடன் புனைந்துகொண்டது பெரியதோர் வியப்பேயாம்.

இவன், காவிரியின் தென்கரையிலுள்ள பெண்ணாகடத்து நிகழ்ந்த போரில் பல்லவர்களை வென்றானென்றும் வேணாட்டரசனாகிய ஆய்வேளைப் போரிற்புறங்கண்டான் என்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவன் காவிரியின் வடகரையிலுள்ள ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் என்னும் இடங்களில் கொங்குநாட்டு வேந்தனாகிய அதியனை வென்றசெய்தி, சென்னைப் பொருட்காட்சிச்சாலையிலுள்ள இவனது செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது. இவன் கொங்குநாட்டிலுள்ள

காஞ்சிவாய்ப்பேரூர்க்குச் சென்று அங்குத்திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயில் எடுப்பித்தனன். இவன் ஆட்சிக்காலத்தில்தான் வைணவசமயாசாரியருள் ஒருவராகிய பெரியாழ்வார் வாழ்ந்தனர் என்ப. இவன் இப்பெரியாரிடத்தில் பேரன்புபூண்டொழுகி வந்தனன். பாண்டியர் எல்லோரும் சைவசமயத்தினர். இவன் ஒருவன்மாத்திரம் வைணவப்பற்று மிக்குடையவனாய்ப் பெரியாழ்வாரைத் தனக்கு ஞானாசாரியராகக் கொண்டனன். இவனைச் சீவரமங்கலத்துச் செப்பேடுகள் 'பரமவைஷ்ணவன்' என்று புகழ்கின்றன; பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலைப் பாசுரங்களில் புகழ்ந்து கூறியுள்ளார்.

வேள்விக்குடிச் செப்பேடுகளும் சீவரமங்கலத்துச் செப்பேடுகளும் இவ்வரசன் பிறப்பித்தவைகளேயாம். இவை, வரலாற்று ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படும் கருவிகளாயுள்ளன. இவ்வேந்தனது ஆட்சிக்காலம் கி. பி. 769-க்கும் கி. பி. 790-க்கும் இடைப்பட்டதாகும் என்பர்.

தொடரும்.

மாணவர் விருந்து.

# தமிழ்நாட்டுப் பெண்பாற் புலவர்கள்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

## 1. கழார்க் கீரனெயிற்றியார்.

'சோறுடைத்து' என ஔவையார் புகழ்ந்தோதிய சோழ வளநாட்டில், மாயூரநகரத்திற்குக் கீழ்த்திசைக்கண் உள்ள கழார் என்னும் ஊரில், எயினர் குடியில், எயிற்றியார் என்னும் இயற் பெயர் வாய்ந்த பெண்மணி ஒருவர் இருந்தனர். அவர் கீரன் என்பாரது மனையாளாதலின் கீரனெயிற்றியார் எனப்பட்டார்.

முற்காலத்தில் எயின்மரபிற் பிறந்தவர், குறுநிலமன்னராயும், சேனைத்தலைவராயும் இருந்ததன்றி, அறிவிற் சிறந்த பெரும்புலவ ராகவும் சிறந்து விளங்கினர். எக்குலத்திற் பிறந்த எவரும் கல்வி பயிலவேண்டுவது அக்காலத்தில் இன்றியமையாதிருந்தது. ஆண் மக்களைப் போலவே பெண்மக்களும் கல்வி கற்பாராயினர். இரண்டுபாலார் இயற்றிய பாடல்களும் புலவர் பெருமக்களால் நன்குமதிக்கப்பட்டுத் தொகுக்கப்பெற்றன. அரசனும் இருபாற் புலவரையும் வேற்றுமை நாடாது போற்றிவந்தனன்.

எயிற்றியாரும், உரிய பருவத்தில் கல்வி பயின்று எழுத்துச் சொற்பொருள் மூன்றினும் வல்லராய்த் தம்மரபு விளக்குவா ராயினர். அவர், வேட்கை பிறக்கும் காலமாகிய பெதும்பைப் பருவத்தாராயிருக்கையில் ஊழ்வசத்தால் எதிர்ப்பட்ட கீரனுர் அக் கால வழக்கிற் கிணங்க இன்றமிழ் இயற்கையின்பமாகிய கள வொழுக்கத்தால் அவரோடு மனமியைந்து கூடி ஒழுகுவாராயினர்.

கீரனாரோ என்றால், படைக்கலப்பயிற்சி சிறந்தவீரர். சோழ மன்னரது படைத்தலைவர். மன்னவன் மனக்குறிப்பினை அறிந் தொழுகு மாட்சியர். அழகும் ஆற்றலுமன்றிக் கல்வியானமைந்த காட்சியர்.

இக்கீரனார், நல்லிசைப்புலமை மேவிய மெல்லியலாராகிய எயிற்றியார் தமக்கு வாழ்க்கைத் துணைவராகக் கிடைத்ததற்கு மனமகிழ்வுற்றுத் தம்மாபிற்கும் திருவுக்கும் ஏற்றவண்ணம் அமைக்கப்பெற்ற தம் மாளிகையில் அவரோடிருந்து ஏவலிளைஞர் பணிகேட்ப, தென்புலத்தார் முதலிய ஐம்புலத்தாறோம்பி, இல்லறத்தை இனிதாக நடத்தி, நகமும் தசையும் போல உடனுறைவாராயினர்.

இவ்வாறு தம்மில் மனமொத்த அன்பினராய் இல்லறநடத்தி இருவரும் இனிதிருக்கு நாட்களில், ஒருநாள் கீரனார் வழக்கம் போலச் சோழனது நாளோலக்கம் காணச்சென்றனர். அங்கு அரசவைப்போந்த தூதுவர், வாய்புதைத்து நின்று, 'மன்னர் ழன்ன! நின் ஆணையை இகழ்ந்து மலைநாட்டரசர் திறைகொடாராயினர்' எனப்பணிவோடு உரைப்பாராயினர். உடனே கண் சிவப்ப மீசை துடிக்க நகைத்துப் பக்கத்தில் நின்ற கீரனாரை நோக்கினன் சோழன்.

அப்பொழுது அரசனது உள்ளக்குறிப்பைப் பொள்ளென வுணர்ந்த கீரனார், வணங்கி, வேந்தர் பெருமானே! சீற்றந் தணிக; யானே சென்று அப்புல்லியோரை வென்றடக்கித் திறையும் கொணர்வேன்; விடைதருக என்றனர். பொன்னியந் துறைவனும், 'அன்னவாறே செய்து வருக' என விடையளிக்க, இல்லத்தடைந்த கீரனார் சிந்திப்பார்—'அரசற்கு உற்றுழி உதவிடேனெனில் செஞ்சோற்றுக் கடன் கழிக்காத தீமையேனாகுவேன். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டுமன்றோ! இதனைச் செய்திடேனெனில் செய்ந்நன்றி கொன்றவனுமாவேன். இஃது இவ்வாறாக. என் காதலி எயிற்றியார், என்னிற் பிரிந்தறியாதவர்; பிரியின் ஆற்றாது வருந்துவா பெரும்போர் புரியவேண்டி

யிருத்தலின், நாட்களும் பல செல்லும்; வாடைக்காலமோ அண்மையது; அக்காலத்தில் வாரேனாயின், எயிற்றியார்க்கு ஏதம் இழைத்தவனாவேன். இவற்றிற்கு என் செய்குவேன்' என இருதலைக்கொள்ளியின் எறும்புபோல ஒருமருங்கினும் துணிவுறாது வருந்தினர்.

அந்நிலையில், கலையிழந்த மதிபோலப் பொலிவிழந்த தம் காதலர் முகத்தைக் கண்ணுற்றனர் எயிற்றியார். தம் கணவர்க் கடுத்தவை தமக்குற்றனவாகக் கருதும் பெற்றியாராதலின், மனங் கவன்று 'என்பால் ஏதேனும் தீமை கண்டனரோ? அன்றி அன்னவர் கற்பித்த நன்னெறியில் தவறினேனோ? அறிந்திலன்; கேட்டறிந்து தீர்வு நாடுவேன்' எனப் பலவாறு நினைந்தவர் ஒருவாறு துணிந்து, கீரனார் முகநோக்கி, 'ஆருயிர்த் தலைவ! என்றும் போலில்லாமல் இன்று உமது திருமுகம் வாடியிருப்பக் காண்கின்றேன்; அகத்தின் அடுத்ததை முகத்தின் அறியலாமென்பர். அதனால், உள்ளத்தில் கவலை பெரிதுடையிர் எனத் தோன்றுகின்றது. அதற்கு யான் காரணமாக இருப்பேனோ என்று ஐயுற்று அஞ்சுகின்றேன்; நுண்ணிய நூல்பல கற்பினும் பெண்மை அறிவே மிகும். ஆதலால், அறியாது அடிச்சியேன் பிழைசெய்திருப்பின் பொறுத்தருள்க' எனப் பணிவோடு கூறினர்.

'என்னுயிரினும் சிறந்த நங்காய்! நீ எனக்கு இழைத்த தீங்கு சிறிதும் இல்லை. அரசன் மலைநாட்டின்மீது படையெடுத்துச் செல்க என்று என்னை ஏவினன். மறுப்பின் என்னைச் சீறுவன். வேந்தன் சீறின் ஆந்துணையில்லை. அவனது ஆணையை மறுத்தற் கஞ்சிச்செல்லுவேனாயின், 'நின்னிற் பிரியேன்; பிரியின் ஆற்றியிரேன்' என நின்னை மணந்த நாளில் யான் சொல்லியசொல் பொய்படுமே என்று வருந்தினேன். என் வாட்டத்திற்கு ஏதுவாயிருந்தது இஃதன்றிப் பிறிதில்லை; இதற்கு யான் யாது செய்வேன்? கண்மணியிற்பாவாய்!' என்றனர் கீரனார்.

'தூங்கு புலியை வாயில் இடறுவார்போலத் தம் உயிர்க்கு உறுதி நினையாதாரே அரசன் ஆணையை மறுப்பவர். என்

பொருட்டாக எம்பெருமான் துன்புறுதற்கு மனங்கொள்ளேன்; கவலை வேண்டாம்; எவ்விதத்தும் ஆற்றியிருப்பேன்; காலம் இடையீடின்றி, அரசன்பணியை மேற்கொள்வதே நம்கடனாகும்' என்றனர் எயிற்றியார்.

அதைக்கேட்ட கீரனார், 'மடத்தகை மயில்போல்வாய்! கருதிய போரோ பெரிது; வாடைவருமுன் மீளுதற்கு இயலாதாயின், தனித்துறையும் நின் நிலைமை யாதாகுமோ? என்னும் ஐயுறவு அதனினும் பெரிது' என்றனர்.

'கண்போற் காதல! வான் பொய்க்கினும் பொய்க்கும், உம் வாய்மொழி பொய்க்காதே; ஏனையோர்க்குப் போர் பெரிதெனினும் உமக்கு எளிதன்றே? குறித்த பருவத்தில் மீளுதல் உமக்கு வாய்ப்புடைத்தாகும்; நீவிர் வருமளவும் யான் ஆற்றியிருப்பேன்; வருந்தாது போய்வருவீர்' எனத் தேற்றி விடுத்தனர் எயிற்றியார்.

தன்காதலி சொற்கேட்டுப் போர்மேற் செல்வதற்கு ஒருவாறு மனம் ஒருப்பட்ட கீரனார், 'என் நெஞ்சே! கோடைத் திங்களில், தனக்கு அருகில் யான் இருப்பவும் நடுங்குவாள் என் காதலி; குளிர்மிக்க கார்காலத்தும், பகல் இரவென்று அறியவொண்ணாத கூதிர்ப்பருவத்திலும், வீசும் பனிநாளையிலும் தனித்திருந்து என்னபாடு படுவாளோ? என நோகின்றேன்; என் தன்மையை இன்னதென் றறியாமல் நீ புலக்கின்றனை; இஃது என்?' எனத் தன்நெஞ்சோடு வருந்திப் போர்மேற் சென்றனர்.

நெடுங்காலமளவும் போர்நீட்டித்தது. 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது இயற்கையன்றோ? எயிற்றியார் நினைந்த வண்ணம் வருவதற்கு இயலாதொழியவே, கீரனார் வருந்திப் பாசறைக்கண் தங்கினர். கார்ப்பருவம் வந்தது. கருநிற மேகங்கள், வாள்போல் மின்னி, முரசென உருமினம் ஆர்ப்ப, வெஞ்சிலைகோலிச் சோனை என்னும் சுடுசரம் தூர்ந்தன; நிலனே களவுநன்மலரும் தளவவெண்முகையும் செந்நிறக் காந்தளும் வெள்ளமலர்க் கோடலும் மையிணர்க்காயாவும் கொண்டு துயர்தாநின்றது. அவரோ, மலைநாட்டின்கண் மாசறு

வேந்தன் பாசறை மேவினர்; குளிரின் கடுமைக்காற்றுது துயின்றில என் கண்கள்; அன்னாய்! என்செய்கிற்பேன்? காதலரைப்பிரிந்து வருந்து மகளிரது நீர்வார்ந்த கண்போலக் கருவிளை மலரும் இந்நாளில், நம் நிலைமையை அறிந்துவைத்தும் நம்மைக் கருதாத காதலர் அன்பிலர் கொல் எனத் தோழிக்குரைத்து வருந்துகையில், கண்களினின்றும் நீர் வார்ந்தது.

வாடைக் காலத்தில் தனித்திடின் வருந்துவேன் என்பதறிந்தும், என் நிலைமை நோக்காது பிரிந்தவரை நினைந்து அழுதலால், என் கண்கள் நாணுடையனவல்ல; அவரையும் அவரது வருகையையும் பன்முறை நினைந்தும், வாராமையால் புண்பட்ட என்நெஞ்சம் வருந்தவேண்டுவது இயல்பே: எத்தொடர்பும் இல்லாத என் கண்கள் உறங்கில; இஃது என்னை வியப்பு?

நம் காதலர் வைகும் பாசறைக்கண் காரும் வாடையும் இல்லை என நினைக்கின்றேன்; இருப்பின், வாராதிருப்பரோ? வாராமையின், அன்னவர் சென்ற நன்னாட்டில் இன்னவை இல்லை என்பதே தேற்றம். ஏ வாடைக்காற்றே! கணவரைப்பிரிந்து தனித்துறையும் என்னை வருத்துகின்றனையே; மகளிரையும் வலியிழந்தாரையும் வருத்துவதும் அறமாமோ? பேதையாகிய என்னை வாதை செய்யாமற் காக்கவல்லையேல், அவர் வாழும் நாட்டில் விரைந்து செல்லுக; செல்குவையாயின், நின்னைக் காண்டலும் என்னை நாடி மீள்குவர்; அதனால் என்னுயிரை மீள அளித்தனை ஆகுதி.

துணைவரோடு உறைபவரைக் காணின் 'வாடை வந்தது; எப்பொருள் பெறினும் பிரியன்மின்' என்பர் அளியுடையோர்; தனித்துறைகின்றேன் ஆதலால், எனக்கிரங்கிக் கூறினர் எவருமில்லை; அதனால், பற்பறை தாக்க வருந்துகின்றேன்; நெற்றியிற் பசலைகொண்டு யான் வருந்தவும், நம்மால் அருளத்தக்கவள் இவள் என்று கருதாதவர் இனி நினையார்கொல்? தாம் மேற்

கொண்ட வினைவயிற் சென்ற கருத்தால் மறந்தனரோ? இவ் வாடையை இனி ஆற்றிடேன் எனப் பலவாறு புலம்பிவைகினர் எயிற்றியார்.

இவ்வாறு வருந்தக்கண்டதோழி, 'நின் காதலர் வினைமுற்றியபின் நொடிப்பொழுதும் தங்கிடார்; வினைமுடித்து விரைவில் வருவது திண்ணம்; ஆற்றியிருத்தல் நின் கடன்' எனக் கூறக்கேட்டு எயிற்றியார் சிறிது ஆற்றியிருக்கையில், ஏவலிளைஞர் போந்து கீரனர் தேர் நம் கடைத்தலையது என்றனர்.

கேட்ட அப்பொழுதே வாட்டம் ஒழிந்த எயிற்றியார் கார் பெற்ற தோகைபோல உவப்பெய்தி உடனெழுந்து கடைத்தலை சென்று முகமலர்ந்து வரவேற்று, அன்புடைக்காதல! யான் தனித்திருக்கலாற்றேன் எனக் கருதி மேற்கொண்ட வினையையும் விரைவில் முடித்து மீண்ட எம்பெருமானது அருளிருந்தவாறு என்னே? என வியந்து நீர்மருங்கிருந்த கொடிபோல நெஞ்சந் தழைப்பக் கீரனோடு இன்புற்று இனிது வாழ்ந்திருந்தனர்.

# முப்பாலிற்கண்ட மூவகை உதவிகள்.

திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப்புலவர்,

சலகண்டபுரம்.

"அமிழ்தினு மின்மொழித் தமிழ்மா தேவியின் முடிமிசை விளங்கும் முழுமணியனைய திருக்குறளில் ஆசிரியர்வள்ளுவனார் 'செய்ந்நன்றியறிதல்' என்னும் தலைப்பின் (அதிகாரம்) கீழ் ஒருவற் கொருவரியற்றும் உதவிகளுட் டலைசிறந்த மூவகை யுதவிகளை எடுத்துக்கூறி அவை, முறையே வையகமும் வானகமு மாற்றினும் ஒத்தல் அரிது, ஞாலத்தினும் மாணப்பெரிது, கடலி னும் பெரிது எனவிதந்து கூறிய கருத்தைப் பொருட்டொடு பொருத்தி விளக்குக" என எனதருமை நண்பரும், தமிழ்ப்புலமை சான்றோரும், இலக்கண நூற்களின் ஆராய்ச்சி மிக்காரும் ஆகிய குன்னூர் நிதிக்கிழவர், திருவாளர், இராமசாமிப் பிள்ளையவர்கள் பணித்திட்டனராக, அப்பெரியார் என்னைப் பொருட்படுத்தியிட்ட கட்டளையை மறுத்தற்கஞ்சி, எனது புல்லிய வறிவு கற்றோர் பலர்க்கும் புலப்பட்டு நகைக்கிடந்தருமென்பதையும் நோக்காது யானறிந்தவாறு வெளியிட ஒருப்படுகின்றேன். இதனினும் சீரிய கருத்துக்களைக் கல்விமான்கள் இத் தமிழ்ப்பொழில் வாயிலாய் எடுத்துக்காட்டி யருள்வரேல் அன்னோர்க்கென் வணக்கம் உரியதாம்.

தமக்கு முன்பு ஒருவர்செய்த நன்றிக்கீடாக இறப்பது, முன் ஒரு நன்றியும் செய்யாதார்க்குச் செய்வது என ஒருவர்க்கொரு வரியற்றும் உதவிகள் இருவகைப்படும். இவற்றுள், கொடுத்த கடனைத்திருப்பி வட்டியோடு கொடுத்தல்போல், முன்செய்த நன்றியினும் சிறந்ததொன்றை உதவியோர்க் கெதிருதவல் யாண் டும் மக்கட் டன்மைக்குரியதேயாதலின், அது விதந்தோதும்

சிறப்பினதன்றென விடுத்து, முன்னர் தமக்கொரு நன்றும் செய்யாதார்க்குச் செய்யும் உதவியையே ஆசிரியர் எடுத்துக் கொண்டு சில பாகுபாடுகளுடன் ஆராய்ந்து ஒப்புக்காணத் தொடங்குகின்றார். செய்யாமற் செய்யும் உதவியும், பெறுவோர்க்கின்றியமையாமை நோக்காலத்துச் செய்யப்படின், அது செய்வோன் பெருமையைத் தெரிப்பதல்லது பெறுவோர்க்குள்ளுறும் பேருவகை பயவாதாகலின், அதனினும் பார்க்க, உதவிபெறுவோர், தம்மானும் தங்கிளைஞர்களானும் தமக்குற்ற துன்பத்தினின்றும் மீள்வோ மீட்கப்படவோ முடியாமற் றியக்கமெய்துங்காலையிற் செய்யப்பெறுமேல் பெரிதும் சிறப்புறுமன்றே! மற்றும், காலம் வாய்ப்ப, செய்யாதார்க்குச் செய்யுமிவ்வுதவி, கெண்டையை இட்டு விலாங்குகவர்தலொப்ப இக்காலத்திவர்க்குச் செய்த இந்நன்றிக்கீடு நந்தமக்குற்றுழி, மிகவளம்பெற இவராற் பெறுதுமெனப் பிற்பயன்கருதிச் செய்வதினும், அஃதும் நாடாது தம் கடப்பாடே யீதெனச் செய்யப்படுவதாயின் அம்மவோ! அதன் பெருமை எத்துணைச் சிறந்ததாகும்! என்றிங்ஙனம் முறைப்பட வெண்ணிய வுட்கிடைதோன்றவே செந்நாப்போதார் (திருவள்ளுவர்) செய்யாமற் செய்த வுதவி, காலத்தாற் செய்த உதவி, பயன்றூக்கார் செய்தவுதவி, என நிரலே பகுத்து அவற்றின் ஒன்றினொன்றேற்ற முடைமை சுட்டுவாராயினர்.

அற்றாக, இவ்வுதவிகட்கு வானகம் வையகம் ஒப்பாகாமை முதலியவற்றைக் கூறுதற்குப் போந்த பொருட் டென்னையோ வெனிற் கூறுதும். தினைத்துணைய நன்றியையும் பனைத்துணையவாகக் கொள்ளல் வேண்டுமென்னுங் கருத்தினராய பெருநாவலர், முன் காரணமின்றிச்செய்த உதவிக்கீடாகும் பொருட்கள்யாவையென நாடுவாராய் மேலுங்கீழும் நோக்கியவழிக் கண்ணுற்ற வானகத்தையும் வையகத்தையும் ஒருங்குதரின் அமையும்போலும் என அவற்றின் உயர்வும் பெருமையும் கருதிநோர்வார்க்குப் பின் அவற்றின் எளிமையும் இழிதகவும் புலப்படவே அவையும் தகுவனவாகா எனக்கூறினர் என அவர் கூட்டியமைத்த சொன்னோக்கம் குறிக்கின்றது. இக்குறிப்பை விளக்குதும்.

தம்மால் ஒருநன்றும் பெறாதிருப்பவும் காரணமின்றித் தமக்கருள்சுரந்து இடர்தீர்த்துதவியோர்க் கியற்றப்படும் கைம்மாறு மிக உயர்ந்ததாகவும் பெரியதாகவுமிருத்தல் வேண்டும். ஆதலின் "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று" எனப் பெரியதற்கும் உயர்விற்கும் எல்லையாக ஆன்றோர் கண்ட வானக வையகங்கள் முதலிற் கருதப்பட்டன.

*"எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய் தேறுவா னுதரிக்கின்ற" உலகமாதலானும், உருவிற் பெரியதெனினும் உயர்வுடையதாகாப் பொருள் மதிப்புறுமையானும், வையகத்தாராற் றுதித்துவணங்கப்படும் கடவுளர் வாழ்விடமாதல்பற்றியும், கருதியவற்றைக் கையுறவழங்கும் கற்பகம், காமதேனு, சிந்தாமணி முதலிய ஈகைச் சிறப்புடைப் பொருட்களைத் தன்கணுடைமையானும், வையகத்தினும் வானகம் முற்பட எண்ணுதற்கேற்றதாயிற்று. அற்றாயின், இவ்வருமைப்பாடுற்ற வானகம் ஒன்றே தரின் அமையாதோ? வையகமும் கூட்டியுதவலெற்றுக்கெனின், வானகஞ் சிலபல குறைபாடுகளுமுடைமையின், அது தீர்ந்து சிறத்தற்கு வையகம் சிலபல விழுச்சீருடையதாகலின் இவ்விரண்டுங்கூட்டித்தரல் வேண்டிற்றென்க. அங்ஙனமாயின் வானகத்தின் குறைபாடுகளும் வையகத்தின் நிறைமாண்பும் யாவோ? எனின், அவ்வானகம்,

> "நீர்பல்கான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
> சோர்சடை தாழச் சுடரோம்பி யூரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பி—"

எய்தும் பெற்றியதாகலின் எய்துதற்கு எளியதன்றாய், முன்னர்ப் பெருவருத்தமுற்று உஞற்றுந்தவத்திற்கேற்பப் பிற்பயன்தரும் காரணத்ததாய், அறம், தவங்கட்கேற்ப வமைந்த காலவளவும் இருக்கைதந்து பின்னர் எனைக்கீழுலகங்களுக்கு இழித்துந்தும் தகையதாகவுமிருத்தலின், அது, வேறோர் பொருட்டும் வேண்டாது, வருந்திக்கேட்ப வியற்றாது, மீட்டும் கவர்ந்து சிறுமையுறுத்தாது மனமுவந்து வலியத்தாமே செய்த நன்றிக்கீடாகாது

* கம்பராமயணம்—நகரப்படலம் (1)

சிலபல குறைபாடுகளையுடைத்து. இனி வையகமோ, "தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்" †என்பதனால் அறிவரிய பெரியதாக, தானே பிறர்க்கிடந்தாலன்றிப் பிறர்பாலிடம் வேண்டாதாகியும், பல்லுயிர்தாங்கும் திண்மையதாகியும், தன்னை அகழ்வாரையும் தாங்கும் பெரும்பெரும் பொறை நிரம்பியதாகியும், தன்கண் விளைபவற்றைப் பிறர்க்கே தரும் பெற்றித்தாகியும், வித்தியவொன்றைப் பலவாகப் பல்குவித்து மேலோர் கீழோர் என வேற்றுமையற மக்கள், புள், விலங்கு முதலியவற்றிற்கேயல்லாது ஓரறிவுடைய புல் முதலியவற்றுக்கும் ஆக்கந்தந்து வாழ்விக்கும் அரும்பெறற்றன்மையதாகியும் விளங்கி மேம்படுதலின், அது செய்யாமற் செய்தவுதவிக்கு ஒருபுடை நிகரொத்தலின் அவ்வானகத்தோடு சேர்த்து வழங்கின் ஒக்குமெனக் கருதப் பட்டது. இனி, இங்ஙனம் கருதியும் அவ்விரண்டு மாற்றினும் ஒத்தலரிது என முடிவுகட்டியவா றென்னேவெனின்:— நன்றாய் நினைவுகூர்ந்து நோக்குழி, வானகம்போன்றே வையகமும் பல குறைபாடுகளோடும் தொடர்புடைத்தாதல்கொண்டு, நவை கடிந்த அந் நல்லுதவிக்கு, ஓராற்றாற் பெருமையும் ஓராற்றாற் சிறுமையும் உடன் விராவிய இவ்விருபொருட்களும் ஒப்பா மாறில்லை யெனத் தேறப்படாவாமென்க. வையகமுடைய குறை பாடுகள் யாவையோவெனின்:— அந்நிலம் "பருவம் முயற்சியளவிற் பயப்பதாகும் காரணத்ததாதலானும், தன்கட் பெய்த வித்தின் விளைவினுள்ளும் முளை, நாற்று, பீள், கதிர் எனக்காரண காரியமுறையே அமைதலானும், காலந்தப்பி முயலின் அளியாமையானும், உழுதொழிலாளர் விரும்பும் நெற்பயிர் முதலியவற்றோடு விரும்பாக் களைகளையும் ஒருங்கு வளர்த்தலானும், தன் மாட்டுத் தொடர்புடையார்க்கல்லது பிறர்கொள்ளக் கொடாவேலியாணுட் பட்டுக் கிடத்தலானும், எருவிட்டுழுதுவித்தி, நீர் கால்யாத்த பின்னும் மழையின்மை, வெட்டுக்கிளி புழுபூச்சிகள் கவர்தல், நன்கு காவாமை முதலியவற்றுள் எதனுனும் ஒன்றால் தான் தரும் பயன் குன்றிப் பாடெய்தாமையானும், இன்னோரன்ன ஏதமுடை

† நன்னூல் (உள).

மையின், பெறுவோன் வியப்புற்று மகிழத் தாமே யருளிச்செய்யும் செய்யாமற் செய்தவுதவியின் பென்னம் பெரிய பெருமைக்கேற்ற பெற்றியினதாகாமை கண்டுகொள்க.

இனிக் காலத்தாற் செய்த நன்றி, பருவத்துப்பட்ட பயிர்போல நன்மைதருவதாயினும், முற்கூறிய நிலத்தின் இயல்புக் குற்றங்களால் அதன் நன்மை சிதைவதுபோன்று, சிதையாத நன்மை பெருகிச் சிறப்ப நிற்பதால் ஞாலத்தினும் மாணப் பெரிதாயிற்றென்க.

இனி, பயன்றூக்காது செய்த உதவிக்குக் கடலை ஒப்புக்கூற நினைத்து அதுவுமமையாது அதனினும் பெரிதாம் என ஓதிய உட்கோள் யாதோவெனின்:—

விசும்பிற் றுளி வீழினல்லது பசும்புற்றலை காண்பரிதாய் இவ்வுலகினர்க்கும், சிறப்பொடு பூசனை செல்லாமையின் வானுலகினர்க்கும் இன்றியமையாததாகிய மழைக்குக் கடலே முதற் கருவியாயமைதலின், அம் மாரிமாட்டொன்றும் ஆற்றுது கிடந்த உலகிற்கு, அது பெய்து எல்லா வளமும் ஓங்கத்தருதலை நோக்கி அதனோடு பயன்றூக்காது செய்த உதவியும் ஒக்குமெனக் கடலைக் கருதுவாராயினர். கருதினர், தம் கருத்துத் தகுதியுடையது தானேவெனப் பின்னுமொருமுறை ஆராய்ந்து துணியப் புக்கார்க்கு, ஆராய்ச்சியில் அக்கடலின் மாட்டுள்ளசில பலசிறுமைகள் தென்படவே, ஒரு சிறிதும் சிறுமையேயின்றி முற்றும் பெருமையாகவேயுள்ள பயின்றூக்காதவுதவி, அக்கடலினும் மாண்புடைத்தென வரையறுத்துக் கூறினர் என்க. கடலின் மாட்டு அவர் கண்ட சிறுமைகள் யாவோ? எனின்:— அக்கடல், (1) உவர் நீரானிரம்புதலாற்றானே நேரே பயன்படுதலின்றி வெய்யோன் துணையால் ஆவியாக வேற்றுருக்கொண்டு முகிலாய் வான்சென்று நின்று குளிர்காற்றின் துணைவலியால் மாரியாகப் பெய்துதவல், (2) அங்ஙனம் உதவுங்காலும், கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉமாகித் தீங்கும் நலனும் உடன் தருவதன்றி ஒருதலையாய் எடுப்பதையே புரியாமை, (3) மற்று

இடி, மின்னல் என்னுங் கருவிகளால் உலகுக்கு ஒரே வழித்தீங்கும் இழைத்தல், (4) மணி, முத்துமுதலிய் உயர்ந்த விலைபெறும் பொருட்களை அடுத்தோர்க்குதவாது ஆழக்கொண்டு கரந்து வஞ்சித்தல், (5) தன் பெருமைகண்டு அணுகவந்தாரை அலைக்கையாலலைத்தோட்டுத லன்றியும், ஆழ்த்தி மூழ்குவித்துக் கொலையும் புரிதல், (6) இன்னோரன்ன பிற தீங்குகளுமுடைமையாமென்க. இவ்வாற்றால் வாரிதி, தீங்கென்பதொன்று மின்றாய்ச் சிறந்த குறியெதிர்ப்பு நோக்காதியற்றும் உதவிக்கீடாகாமை தெளிக.

இதுகாறும் கூறியவாற்றாற்போந்த பொருட்களாவன:— ஒருவர்க்கொருவ ரியல்பாக இயற்றும் உதவிகளுட் காரணம் பற்றியனவொழிய, காரணமின்றித் தமக்குமுன் யாதொரு நன்றியும் செய்யாதார்க்குச் செய்யும் உதவி, காலந்தேர்ந்தியற்றும் உதவி, பயனைநோக்காதியற்றும் உதவி, என்னுமிம்மூன்றும் முறையே ஒன்றினொன்று சிறப்புற்றுத் தமக்கீடாக, வானகம் வையங்களையும், ஞாலத்தையும், கடலையும் கூறினும் சாலவாய் ஒப்பிறந்து நிற்பனவாகின்றனவென்பதூஉம், இவ்வொப்புக்கும் சில பல பொருட்டுகள் உண்டென்பதூஉம், ஒப்பாகாமைக்கும் ஆங்கே சிற்சில பொருட்டுகள் உண்டென்பதூஉம், ஆதலானே ஆசிரியர் வள்ளுவனார், அவற்றை ஒப்பாக நேர்ந்தும், அவற்றினும் பெரிதாமென ஓதினாரென்பதூஉம், பிறவுமாம்.

# மதுரைக்காஞ்சி ஆராய்ச்சி.

திருவாளர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், காரை.

(முற்றொடர்ச்சி 340-ஆம் பக்கம்.)

## 2. மதுரைச் சிறப்பு.

மதுரைக்காஞ்சி யென்னும் இச்சீரிய பாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் மதுரையின் சிறப்பையும், அதனைச் சூழவுள்ள நானிலங்களின் வளனையும், அதனைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட மன்னரது ஆட்சி நலனையும் உணர்த்துகின்றன. ஆகலின் அவற்றைமட்டில் இவ்வாராய்ச்சியின் இப்பகுதியில் வெளியிடுகின்றேன்.

க. மதுரையாண்ட மன்னரது ஆட்சி நலன்:—இவ்வுலகம் மிக்கபரப்பும் உயரிய முடிகள்கொண்ட மலைகளும் தன்பாற்கொண்டது. மலை முடிகளில் தேனிறால் தூங்கும் மாண்பும், யாறுகள் தோன்றிப்படரும் சிறப்பும், கானஞ்செறிந்து நிற்கும் கவினும் காண்பார் கட்புலனைக் கவரும் காட்சியினவாம். இக்காட்சியமைந்த உலகினை, இப்பாட்டுடைத்தலைவனான பாண்டியன் நெடுஞ்செழியன் முன்னோர்கள் ஆட்சிபுரிந்து புரந்து வருநாள், காற்று வலமாக விசும்பின்கண் சுழன்று திரிய, அதனால், மழை வேண்டுங்காலத்துத் தப்பாது பெய்து உதவ, நாற்றிசையும் விளைநலனும் பிறவும் மிகைபடப்பெற்றன; தொடுப்பின், விதைத்த ஒன்று ஆயிரமாக விளையும் நிலவளஞ்சிறந்தது; விளைநிலனும் மரங்களும் தம்பாலாம் பயனைப் பல்லுயிர்க்குங் கொடுத்தலை மேற்கொண்டு தழைத்தன; அங்கண் விசும்பில், ஆங்காங்குமிளிரும் நாண்மீன் தத்தம் நிலைதிரியாது கொட்புற்றொழுகின; செஞ்ஞாயிறு பகற்போது செய்தும், வெண்டிங்கள் இரவுசெய்தும்,

மைதீர்ந்து கிளர்ந்து விளங்கின; மக்கட்கு நோய்தருவனவாய பசியும் பிணியும் இலவாகி நீங்க, நோக்கு விளங்கும் வசியும் வளனும் பெருகின; எண்டிசையினும் இருந்து உலகின்பொறை யேற்கும் வயக்களிறுகள் அறவும் பொலிவுபெற்று, வளர்ச்சியும் வலியும் ஒருங்குவாய்ப்பு, உலகாள் மன்னரது செங்கோன்மையான், அப்பொறையின் வருத்தம் பேணாது மேம்பாடுபெற்றன.

இந்நலங்களைத்தரும் ஆட்சிக்குக் கண்ணென வகுத்த மாந்தர் வாய்மொழியால் புகழ் நிறைந்தவர்; பொய்யறியாப் பொலிவும் பெற்றவர்; இவர் வாழுந்தெருக்கள் பலரோடிருந்து பலநாளுண்ணினும் தண்டாத மிகுவளனும் இருமருங்கும் மழையென மருளும் மாடம்பிறங்குதலால், காண்பவர் கண்டு தண்டாக் காட்சியும் பெற்றனவாம். இவர்கள் அமைச்சுத் தொழில்பூண்டு ஆட்சித்துறையில் உதவிசெய்ய, பல நல்லூழிகள் தமக்கு அடிப்பட்டு நடக்க, இவ்வாட்சிநலனைப் பல வெள்ளம் எனும் எண்ணியற் பெயரைக்கொண்ட காலமெல்லாம் மக்கள் மீக்கூற, இப்பாட்டுடைத்தலைவனது முன்னோர் உலகினை ஒங்குதிரை யொலிக்கும் முந்நீரே வரம்பாக நிற்க ஆண்டனர் என்பது.

உ. வடிம்பலம்ப நின்ற பாண்டியன்:—இவன் "நிலந்தந்த பேருதவிப் பொலந்தார்மார்பின் நெடியோன்" எனச் சிறப்பிக்கப் பெறுகின்றான் பெறவே, இவன், நாட்டிலுள்ள ஏனையரசர் பலரும் தன் துன்னருந் துப்பினைக்கண்டு அஞ்சித் தம் நாடனைத்தும் விட்டு அகன்றாராக, *அவற்றைக்கொண்டு தன் கீழ்வாழ்வார்க்குக் கொடுக்கும் வள்ளன்மையும், போர்வன்மையும் தலைசிறந்தவன் என்பது பெறலாகும். எனினும், இவன், விழுமிய சூழியும், விளங்கிய ஓடையும், கடுஞ்சினமும், கடாம் கமழுதலால் அளறுபட்ட சென்னியும், வரைமருளும் தோற்றமுமுடைய வினைநவின்ற போர்யானைகள் பல சினஞ்சிறந்து, போர்க்களத்து வீரரைக்கொன்று திரிந்துழக்கவும், குதிரைத்திரள் பகைப்புலநோக்கிப் பாய்தா, ஆண்டெழும் செந்துகள் அகல்வானத்து

---

* இது இளம்பூரண அடிகளது உரை. நச்சினார்க்கினியர் சிறிது திரித்துக்கூறுவர்.

வெயிலை மறைப்பவும், வாவும் பரிகள் பல பிணைத்த திண்ணிய தேர்கள் காற்றென்ன விரைந்து கொட்புறவும், வாட்போரின் மிக்க மறங்கொண்டு திரியும் மைந்தர் பலர் தோண்முறையால் வீறுமுற்றவும், இருபெருவேந்தராய சேரசோழரொடு வேளிர் பலரும் சாய்ந்தோடப் பொருது, அவரைச் செருவென்றும் அமையாமல், உயர்ந்திலங்கும் அருவிகண்மிக்க மைவரையுலகத்து மன்னர் பலரையும் வென்றுயர்ந்து, தன்னொடு மாறுகொண்ட பகை மன்னர் தம் நாடுகளைப் பலவாகச் சிதறுண்ணப்பிளந்த சிறப்பும் மிக்கவன் என்பது போதந்தது.

## ௩. மதுரையின் வளம்.

நாட்டுச் சிறப்பு:—வானம் குணகடலின் நீரை முகந்து சென்று குடமலைவரையில்முற்றி, அவ்வரைச்சாரலின் வளர்ந்தோங்கும் கழைகள் நிலை தளரவும், வாழும் களிற்றினமும் அஞ்சி அலமரவும், உருமேற்றோடு பரந்து, இரவும் பகலும் ஒழிவின்றிப் பெருமழை பெய்ததாக, ஆங்காங்கு கல்லப்பட்டிருக்கும் கவலைக் கிழங்கின் அழகிய குழும்புகளில் (குழிகளில்) நீர் நிறைந்து, மிகுதிப்பட்டு அருவியென வழிந்தோட, இந்நீர்மிகுதியைத் தாங்காது திரண்ட புனல் நீத்தம், செந்நிறங்கொண்டு, குணகடல் நோக்கிப் பரந்து செல்லும். அவ்வழி, இடையிலுறும் ஏரி, குளம் முதலியன நீர் நிரப்பப்பெற, அவற்றிற்கீழ் வயங்கும் களிறு நிற்பினும் மறைக்கும் உயர்ச்சிசான்ற கதிர்விளையும் செந்நெற்கழனிகளும், ஒளிரும் இலஞ்சிகளும் (மடுக்கள்) நீர்வளம் மேம்படும். அவற்றின்கண்ணும், அடையும், முட்டாளும் கொண்ட தாமரை, கட்கமழும் நெய்தல், வள்ளிதழ் அவிழும் நீலம், வண்டினம் படியும் மெல்லிலைகொண்ட ஆம்பல் முதலியனவும், மற்றும் பிற சுரும்பினம் இறைகொள்ளும் பூக்களும் நிறைந்து மணங்கமழ்ந்து, தேனார்ந்த சுரும்பாடத் திகழ்கின்ற பொய்கையின்கண்ணும், இடையிடையே படர்ந்துநிற்கும் வள்ளைக்கொடிகளைத் தள்ளி, வயமுற்ற மீன்களை வலைஞர்கள் தம் வலைகளாற் பிடித்துக் கொன்று குவிப்பர். அதுபோது, அவ்வள்ளைக்கொடிகளிற்றங்கி யுறங்கியிருந்த கம்புட்கோழி பறந்

தோடுங்கால் எழும் ஓசையும், கொடுமுடிகள் மிக்க மீன்வலை வீசும் வலைஞர், அம்மீன்கட்கு விலைகூறிக் களிக்கும் ஓசையும் ஓருப்பக்கம் எழுந்து சிறக்கும். ஒருபால், கரும்புகளை ஆட்டியடும் எந்திரச்சாலையினோசையும், வேறொருசார் களைப்பறிப்போர் செய்யும் ஓசையும், அவ்வயலருகே, அள்ளற்கண் வலியற்று வீழ்ந்த முதுமைமிக்க பகடுகளை, எழுப்புதற்காக, கள்ளுண்டகளமர், அவற்றிற்கு உற்றவிழுமம் தெரியாதவாறு பெயர்க்கும் ஆரவாரமும் ஓங்கும். தழைத்த புகன்றை முதலியன மிக்குறும் கழனிகளில் வித்திய நெல் முற்றியதாக, அதனை அறுத்தற்கண், அவ்வன்கைவினைஞர் செய்யும் ஓசையும், இன்குரல் தொடுத்த வாச்சியங்களுடன் மழைவளனருத் தண்ணிய பரங்குன்றத்தில் நடைபெறும் விழாக்களில் எழும் நல்லோசையும், புதுநீர் விழாவயர்தற்பொருட்டுப் பேராரவாரத்துடன் செல்லும் மகளிர்தம் கோதையை மைந்தர் புனையவும், அம்மைந்தரின் தண்ணிய தாரைத் தாம் புனையவுமாகக் கூடியாடும் நீராட்டோசையு மாகவெழும் இவ்வோசைகளோடு, குருகுகள் மேலே சூழ, வீடுகளினருகு நிற்கும் மாங்கடோறும், நிரையே கோத்து உணக்கப்பெறும் வற்றன் மீன்கள் அசையும் பாணர்குடியிருப்புக்களில், அவர் பாடலால் எழும் ஓசை முற்றும் கலந்து, விண்படர்ந்து, ஆண்டுவாழ்வார்க்கு இனிய இசையின்பம் நல்கும். இது மருத நிலவளன்.

இனி, முல்லை நிலவளன் வருமாறு: இது காடும், காடு சார்ந்த நிலமும் பொருந்தியது. ஈண்டு, கானவர் ஒருபக்கல் நின்று தினைகொய்வர். ஒருசார் எள்ளிளங்காய் முற்றிநிற்ப, கருந்தாள் வாகு தன் முற்றிய கதிர்காட்டி அழகுசெய்ய, ஆழ்ந்த குழிகளில் மணிகள் கிடந்து மிளிர, போழகு வாய்ந்த நவ்விமான்கள், எழுந்தோங்கிய அக்காட்டின்கண், மடப்பம் பொருந்தும் கண்ணினையுடைய பிணைமானோடு, தம் சிறுதலையையுயர்த்தியோடி யுகளும். செம்பொற்றுகள், பரந்தமணலின் மேற்புறத்தே கிடந்து நல்லொளிபரப்பும். பாப்பிவைத்தாற் போலும் பான்மையவாய்ப் பாறைகள், ஒள்ளிய கொன்றை பரந்த நீழலில், இனிய காட்சியினை நல்கும். நீலமணியன்ன பசும்பயிர்களின் மேல், முருக்குண்ட முசுண்டையின் ஒள்ளரும்புகளோடு, முல்லை

யின் வெள்ளியொத்த வொண்பூக்க ளுதிர்ந்து பரந்து, அழகு செய்ய, அவற்றினருகே, வல்லோன் ஒருவன் தைஇய (எழுதிய) கூத்தயர் வெறிக்களமொப்ப, மெல்லிய அவல்களில் தெளிந்த நீர் நிறைந்து, நீலமணியெனத் திகழும் நெய்தல், இடைமணந்த தொய்யிற்கொடியொடு மாறுபடமலர்ந்து வயங்கும்.

இனிச்சேயோன் மேய மைவரை யுலகமெனப்படும் குறிஞ்சியில், வரைச்சாரல்களிற் கிடக்கும் பெரும் பாறைகள், வெள்ளருவிகள் பல வீழ்தலாலும், நீர்த்தாரைகளின் உறைப்பாலும் கருநிறங்கொண்டு அஞ்சுவரு காட்சிபயப்ப, இடையிடை செழிப்புற்றுத் தழைத்த பைங்கூழும் பிறவும் ஆமா முதலியவற்றிற்குப் புல்லுணவளிக்கும் பொற்பு விளங்கும். ஆங்காங்குள்ள தினைப் புனங்களிற் படியும் கிளிமுதலிய புட்களைக் கானவர் ஓப்பும் ஓசையும், துடவைகளிற் செழித்து நின்று, பலமணிகளையொக்கும் அழகிய பூக்கள் நிறைந்து விளங்கும் அவரையின் நறுந்தளிரை மேயவரும் அவ்வாமா முதலியவற்றைக் குறவர்கள் கடிதலிலெழும் ஓசையும், மலைமிசையுறையும் அக்குறிச்சி மக்கள், பொய்க்குழிதொட்டுக் கேழல் முதலியவற்றைப் பிடித்தற் பொருட்டு, அதன் வாயை மேலாக மூடிவைப்ப, அவ்வழிவந்து கேழல் அதன்கண் வீழ்தலும், அதனைக்கொல்லும் வெற்றியாற் செய்யும் ஆரவாரமும், கருங்கால் வேங்கையின் நறும்பூக்கொய்யும் குறமகளிர் 'புலிபுலி' என்று கூறியாடும் ஓசையும், இம்மலைச்சாரல்களில் மாறிமாறி யொலிக்கும். அன்றியும் இச்சாரல்கள், குறுங்கதிர்தாங்கும் தோரையும், நெடுங்காலையுடைய ஐயவியும், ஐவனமென்னும் வெண்ணெல்லுமாகிய விளைநலம் சிறந்தும், இஞ்சி, மஞ்சள், மிளகு முதலியனவும் பிறவுமாய பண்டங்கள் பல மிகுந்தும் விளங்கும்.

இனி, அருவிகளும், அவற்றுளுளதா மழகுமில்லாத பல மலைகள் ஆழ்ந்த விடரகங்கள் கொண்டுநிற்பது பாலை. நிறைந்தெழும் சூறைக்காற்று, ஊகம்புல் முதலியன உலர்ந்து கிடக்கும் காட்டுள், வைக்கோலைச் சாடுவதுபோல் அவற்றைச்சாடியலைத்து, அவ்விடரகங்களின் மோதிச்சேர்த்து அணைத்து அடங்கும்.

காற்றுமோத, அலைபடுங்கடலின்கண் எழும் பேரோசை யொத்த பெருமுழக்கம் அச்சுறுவளியின் பயனாக வெழும். இந்நிலத்துக் காயும் வெயில், நிழலும்தன் உருவிழக்குந் தன்மைத்தாய வேனில் வெப்பமுடையது. இக்காலத்தில், மலையருகு கிடக்கும் சுரத்தின் கண், வேட்டுவவிளைஞர் பலர் சிலையேந்தி ஆறலைக்கும் கள்வரைக் காத்தற்பொருட்டுக் காந்துறைவர். இவர்களுறையும் மனையகங் கள் தழை வேயப்பட்டும், இவரது படுக்கைகள் மான்தோல் பரப் பப்பெற்றும் இருக்கும். பொதுவாக, இவர்கள் தழை விரவிய கண்ணி சூடுமியல்பும், கடுஞ்சொற் கூறும் காய்சினமுமுடையர்.

இனிக் கடற்சார்ந்ததாய நெய்தல் வளன் வருமாறு:— கட்டற்றுறைகளில், பெருநீரோச்சும் மரக்கலமீகாமர் பலருடன் கூடி, இடமகன்றயவனம் முதலிய பிறநாடுகளினின்று கொணர்ந்த குதிரைகளுடன், முழங்குங் கடல்தந்த விளங்குகதிர் முத்தமும், அரம்போழ்ந்தறுத்த இலங்குகின்ற வளைகளும், பரதர் (செட்டி கள்) முதலியோர் கொண்டுதந்த பலவேறுவகைக் கூலங்களும் ஒருபுடை மலையும் கடலுமென மிக்குத்தோன்ற, வேறோர் பக்கத் தில்; இருங்கழிகளில் விளைந்த வெள்ளுப்பும், கருப்புக்கட்டியொடு கூட்டிப் பொரிக்கப்பட்ட புளியும், பரந்தோங்கிய கானலில் வன்மைத்திமிலர் (மீன்பிடிக்கும் படகு உடையவர்கள்) தாம் கொணர்ந்த கொழுமீன்களைத் துடியின் கண்போல் உருண்ட துண்டுகளாக அறுத்து உணக்கிய கருவாடுகளும் ஏற்றப்பட்ட நாவாய்கள் பல நின்று அசையும் பொலிவு விளங்கும். இங்ஙனம், இவை நாடோறும் முறையே மிகும் பெருவளம் பயின்றது இந்நெய்தல்.

இவ்வண்ணம் ஐந்திணைவளனும் அமைந்து அழகுபெற்று, முழவு முழங்குந் திருநாள் நடைபெறும் நெடுந்தெருக்களும், துணங்கை, குரவை முதலிய கூத்துக்கள் நிகழும் பரத்தையர் சேரியும் இடையருப் புதுவருவாயும் கொண்ட பல ஊர்களும், அவற்றுட் பல குடித்திரளும் மிகுந்திருத்தலால், இப்பாண்டிநாடு பாடல்சான்ற பண்புடைய நாடாயிற்று.

உ. நகரச்சிறப்பு:—இது பெரும்பா ணிருக்கையும், மணி நீர்க்கிடங்கும், பல்படைப்புரிசையும் வையைபோலும் வழக் குடைய வாயிலுமுடையது. இவற்றுட் பெரும்பாணிருக்கை யின் நலம்:—

பெரும்பா ணிருக்கையாவது பெரும்பாணர் என்னும் ஒரு வகைச்சாதியார் வாழும் இடம். இது, வையைத்துறைதோறும் பலவேறு வகைப்பட்ட பூந்தோட்டங்கள் சூழப்பெற்று அவற்றி னிடையில் நெடுங்காலமாக இருந்துவரும் தொன்மை சிறந்தது. அன்றியும் இது, யாற்றின் அடைகரையிலிருத்தலால் காவும் பொழிலும் மிக்கு, உயர் சிமயத்து நின்று இயங்கிவரும் நீர் கொழிப்ப வரும் நுண்ணிய வெண்மணற் குன்றுகள் தம்மேற் படிந்த பூக்களால் நறுமணம் வீச, முழங்குகால் பொருதலால் மாவிசும்பு தடவும் மரங்களசைய, மயில்கள் அகவி ஆரவாரிப்ப, முசுக்கலைகள் தாவும் கொம்பரில் அவற்றின் மந்திகள் விளையாட் டயரும் பெருஞ்சிறப்புடையது. கரையினியல்பு இற்றாக, யாற்று நீரொழுக்கு, தாது சூழ்ந்த கோங்கம் பூவும் வேறு பிற மலர்களும் பரந்து, ஒருகோதை (பூமாலை) யொப்ப ஒழுகி யழகுசெய்யும்.

மணிநீர்க் கிடங்கு:—இந்நூற்பொருள் நிகழ்ந்த காலத்துக்கு முன்னர் மானவிறல் வேள் என்னுமொரு குறுநிலமன்னன் அழும்பில் என்னும் ஊருடையனாய் விளங்கினான். அவ்வூர் நில வளமும் பொருள் வளமும் மிகுந்தது. இதன் வளத்தைக் காணப் புகும் ஒருவனது காட்சி வேறொரு நிலத்தையும் விளைநலனையும் காண்டற்குச் செல்லாதென்பர். இத்தகைய அழும்பிலை யொத்த நாடிழந்தவர்களும், செல்வங் கொழுத்த செழும்பதிகளிடத்தவாய குடியிழந்தவர்களுமாய்த் தொன்றுதொட்டுவரும் செற்றங்கலந்த வலிமை தம்மைத் தூண்டுதலால் எதிர்ப்பான் வந்த அண்ணல் யானையும் அடுபோர்த் தொழிலுமுடைய வேந்தர்பலர் உழிஞைப் போர்செய்தற்கு வந்தாராக, அவர் நெஞ்சிற் கிடந்த மாறுபா டனைத்தையும் போக்கி, தாம் தம் இன்னிசைமுரசு முதலிய வற்றை இடைப்புலத்தே விட்டோடச்செய்து அவர் முதுகு காணும் வகையிற் காத்துநிற்கும் மிக்க ஆழமுடையது அக்கிடங்கு.

வாயில் :—மழைதவழும் மலையென உயர்ந்தோங்கிய மாடங்களாற்றிகழ்ந்து, மிக்க முதுமையும் வலிமையுங்கொண்டு நிற்கும் இந்நகர்க்கண்வாயில், அணங்கு வாழ்தலால் ஐயவியும் நெய்யும் அப்பிய நெடுநிலையும், திண்ணிய கதவங்களும் உடையதாய், இடையறு நீர்ப்பெருக்கினைக் கொண்டு ஓடும் வையையாற்றினைப் போல் மாந்தரும் மாவும் இடையறுது வழங்கும் வழக்கினையுடையதாய் விளங்கும்.

இங்ஙனம் வழக்கிடையறுது விளங்கும் வாயில் கடந்து உள்ளகம் நோக்குவார்க்குக் கட்புலனுவது யாறு கிடந்தன்ன அகன்ற நெடுந்தெருவே யாகும். அதன் இருமருங்கும், மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை முதலியனவாகப் பலவேறு வகைகள் விரவிய மாடங்கள் வானகம் மூழ்கி நின்று உயர்ச்சி காட்ட, அவற்றின் சாளரங்கள், அம்மேடையிலே வீசுகின்ற மெல்லியதென்றலை வரவழைக்கும். தெருவின்கண், விழாவயர்தல் விரும்பி நகர் மாக்கள் எடுத்த பேரோசை ஒருபுடையெழுந்து அதிர, அவ்வோசை கேட்டு மகிழும் வேறொரு சாரார் பல இன்னியம் இயம்புவர். அவற்றின் றிரண்டவோசை நீராட்டிடையெழும் முழக்கத்தை யொக்கும். நிற்க, இம்மாடங்களின் மேனிலையிற் றிகழும் நெடுங் கொடிகளும், விழா விரும்பியெடுத்த வியன் கொடிகளும், வேற்று வேந்தரை வேறலாலெடுத்த நலம்பெறு கொடிகளும், நீர் ஒலித்ததுபோல மிக்கொலித்துவந்த வேற்படையைப் புலவுப்படக்கொன்று, உடன் மேல்நெருங்கிய யானைப்படையையும் அறவே சாய்த்துப் புகழ்செய்து வீறுற்று எடுத்த விறல்சான்ற நன்கொடிகளும், பெருவரை மருங்கின் வீழும் அருவிபோல் நுடங்கித்தோன்ற, கள்விற்போ ரெடுத்தகொடியெழுந்து அசையும் காட்சி, அங்கியமத்தை நன்கு அணிசெய்யும்.

இனி, அங்கியமங்களுள், கந்து நீத்து உழிதரும் கடாம்பொழியானை, காலெனக்கடுக்கும் தேர், இடுமயிர்ப்புரவி, கள்ளார்களமர் உட்பட நால்வகைத்தாய படைதிரண்டு முறையே செல்ல, நறுமணம் சமழும் பூக்கள் பல பூந்தட்டுக்களிற் கொண்டு நிற்பவரும், ஒன்றற்கொன்று மாறுபடும வகையிற் பலபடவிரித்த மாலை

களை எந்தி நிற்பவரும், நவமணிகள், பொன், சந்தனம், கருப்பூரம் முதலியவற்றைச் சேர இடித்துத் துகள்செய்து, பூந்தாது ஒப்பத் தூய்மைப்படுத்திய சுண்ணத்தை உடையவரும், பசிய கருங்காலியைச் சீவிக் காய்ச்சி யெடுத்த களிப்பொடு, இனிய நீர்மைகொண்ட பாக்குக்களைக் கலந்துகொண்டு, அவற்றோடு வெற்றிலையும் சேரவைத்து விற்பவரும், சங்கைச் சுடுங்காற் பெறலாகும் சுண்ணாம்பு உடையவருமாகிய பலவேறு வகைப்பட்ட மக்கள், இருமருங்கும் வந்து கலந்த பகைப்புலம் போன்று விளங்குதலால், தம் இன்னுயிர்க்கு அஞ்சி, வெய்துயிர்த்து, எங்கியிருந்து, பின்னர் அந்நாற்படையும் நீங்க, மாட நீழலிலே பல இன்னியங்கள் கறங்கச் செம்மாந்திருப்பர்.

நிற்க, மனையகங்களில் மடப்பமும் நோக்கினாரை வருத்தும் செயிர்ப்பு முற்ற கண்களும், அழகுறப்படர்ந்து தோன்றும் மாமையும், நிரைகெடாது வார்ந்து கூரியவாய் இலங்கும் எயிறுடைய செவ்வாயும், மூங்கில் போலும் தோளும், விளங்கும் ஒளிகொண்ட கைவந்தியும்* தொய்யில் பொறித்த சுணங்குபூத்த இளமுலையும், மைபோலும் கரிய மொய்த்த கூந்தலும், மயிலன்ன சாயலும், மடப்பமும் உடைய மகளிர் பலரும், தம்மைக்கோலஞ் செய்து, மெல்லெனக் கையெறிந்து நடந்து, காமநுகர்ச்சியன்றிப் பிறிதொன்றினையுங் கல்லாத இளையோருடன் கூடிக்களிக்கும்படி, சங்கொப்ப நரைத்த கூந்தலைக் கோதிப் பின்னே முடியிட்டுப் பொலியும் தொன்முது பெண்டிர் பலர், காமரு பண்ணியங்கள் பல "புடையமை பொலிந்த வகையமை செப்பு"க்களில் வைத்து, மணம் கமழும் பூக்களையும் உடன்கொண்டு சென்று மனைதோறும் உலாவி விற்பனை செய்வர்.

இனி, இம்மனையகம் கடந்து செல்லின், ஒருவன் காணலாவன கடவுட்பள்ளி, அந்தணர் பள்ளி முதலியனவாம். அவற்றுட் கடவுட்பள்ளியென்பது பௌத்தப்பள்ளியாம். திண்ணிய கதிர்களைத் தெறிக்கும் பேரணிகலங்கள் பலபூண்டு, காமரு

---

* கைவந்தி : கையில் தோளின் கீழ் அணியப்படும் ஓர் அணிகலன். இப்பெயர் வழக்கிலுமுள்ளது.

பேரிளம் பெண்டிர் தாம் விரும்பிக்கூடிப்போற்றும் தம் கணவருடன், தாந்தணிந்து விளங்கும் தாமரைப் போதைக் கையிற் பிடித்துச் செல்லுதலொப்ப ஒள்ளிய சிறு பிள்ளைகளைத் தம் கையிற் பிடித்துக்கொண்டு, எல்லோருமாகத் திரண்டு இப்பள்ளிகளையுடைந்து, பூவும் புகைபுங்கொண்டு, பள்ளிக்கடவுளைப் பாவித் தொழுது வணங்குவர்.

அந்தணர் பள்ளியாவது எக்காலமும் மறைமுடிவையே பார்த்தொழுகலாற்றும் பான்மையர் உறையும் விழுமிய விடமாம். இவர்கள் மறைநான்கனுள், சிறப்பில்லாத அதர்வமறை நீங்கலாக, ஏனைச்சிறப்புடை மறைமூன்றையும் தமக்குப் பொருள் விளங்கும் வகையிற் பாடுதலுடையவர். அன்றியும், இவர் விழுமிய சீர் பயப்பதாய வேள்வி யொழுக்கத்தி லீடுபட்டு நிற்பவர். இவரது நெஞ்சம் அறநெறி பிழையாத அன்பு நிறைந்து, உயர் நிலைமையதான உம்பருலகையும் இவண் நின்றே யெய்தும் கொள்கைமேற்கொண்டு, விளங்கும் விழுப்பமுடையது. இதனால், இவர், இந்நால்வகை நிலங்களமைந்த உலகத்தில் ஒப்பாரும் மிக்காருமிலராகி, ஒருதாமாகி உறைகின்றனர். இங்ஙனம் சீவன்முத்தராயிருக்கும் இவர் விரும்பியுறையும் இடமே இப்பள்ளி. இது மலையொன்றை உள்வெளியாக வாங்கி இருப்பிடமாக்கினாற் போன்ற திண்மையும் பெருமையும் அமைந்ததாகும்.

இவற்றோடு உடனெண்ணப்படுவனவாய்ப் பல அறிஞர் சேக்கைகள் (அமணப்பள்ளிகள்) அருகே காணப்படுகின்றன. அவை, செம்பினாற் செய்தமைத்தாற்போலும் செவ்வியசுவர்கள் சூழ்ந்தவை; நோக்குவார் காட்சிவிசையும் தவிர்க்கும் வகையில் மேலேபுயர்ந்து, குன்றங்கள் பல அணுக்கத்தே நிறைந்து தோன்றுங்காலெழுந்த காட்சியினைப்பெற்று, விளங்குவனவாம். இங்கு, தாதுண்ட வண்டுகள் சூழ்வந்து முரலும் தேனூறும் பூக்களும் நறுமணம் கமழும் புகையும் கொணர்ந்து சாவகர் முதலியோர் வணங்கிப் பரவுவர்; அந்தக் 'கயம் குடைந்தன்ன வயங்குடை'க் கோயிலின்கண்ணிருக்கும் பெரியோர், வானமும் நிலமும் ஒருங்கே முழுதும் உணரும் சான்ற கொள்கையினையும், அக்கொள்கைக்

குத் தளர்தல் இல்லையாய்ச் சாயாத திண்ணிய யாக்கையும் அமையப்பெற்றவர். மேலும், *இவர் புலன்கண்மேற் செல்லுகின்ற அவாவைந்தனையும் அவித்த பேராற்றல் படைத்தமைந்தவர்; சென்ற காலமும் வரூஉம் அமையமும், இன்று இவண் தோன்றிய (நிகழ்காலம்) ஒழுக்கமொடு நன்குணரும் மதிநுட்பம் நூலோடுடையர். இவரது சேக்கைகளில் பல வடங்களால் அமைந்த நூலுறிகள் தொங்கும். அவற்றில் இவரது குண்டிகைகள் வைக்கப்பெற்றிருக்கும்; அக்குண்டிகைகள் மிகக் குறுகிய வாயுடையவை; கல்லைப்பொளிந்தான்ற போன்ற் தோற்றத்தனவும்மாம்(?) இச்சேக்கைகளைச் சுற்றிலும் நறும்பூப்புதர்கள் பல வயங்குங் காட்சி, மனத்தானோக்குவார்க்குப் பெரியதோர் இறும்பூது பயக்கின்றது. இதன்கண் உறையும் அறிஞராய அமணர்தாம் வருத்தமறப் பறித்து வழிபடுதற்கெனவே இப்பூஞ்செடிகளும் பிறவும் வைத்து வளர்க்கப் பெறுகின்றவாம்.

இனி, மேலே கூறப்பட்டனவற்றோடு, கல்வி, அறிவு, நல்லொழுக்கம், அறனருளுடைமை முதலியவை மணக்கும் சிறப்புடைமையால் சிறந்து விளங்கும் அரசவையிலுறையும் பெரியோராய காவிதிமாக்கள் முதலியோரது நலனும், பிறவும் கூறுகின்றார்.

காவிதிமாக்களாவார் காவிதியென்னும் பட்டத்தை அரசனால் தாப்பெற்றவராவர். அவர்களுள் ஈண்டுக் கூறப்படுபவர், அரசனிடத்து அப்பட்டத்தைப்பெற்று, அமைச்சுக்கடம் பூண்டொழுகும் அமாத்தியராவர். இவர்கள் முறை வேண்டினார்க்கும், குறைவேண்டினார்க்கும் அச்சம், அவலம், ஆர்வம் முதலிய நிகழாமற்போக்கி, செற்றமாதல் உவகையாதல் ஒன்றேனும் ஒருதிறத்தேனும் செய்யாது, தம்மையும் காத்து, ஞெமன்கோல் (துலாக்கோல்) போலும் செம்மைத்தாய நடுநிலை பிறழாத கொள்கை மேற்கொண்டவராவர். அன்றியும், இவர்கள் அறங்கூறவையத்தாரோடு உடனிருந்து, அரசன்மாட்டு நிகழும் நன்றும் தீதும்கண்டு, அத்தீங்குகளையாராய்ந்து அவற்றுள் அவன் மீட்டும்

---

* கற்கப்படுவனவாய நூல்களனைத்தையும் முற்றுணர்ந்து நிறைந்தும், களிப்பின்றியடங்கின அறிவுடையரென்பது மொன்று.

ஒழுகாவாறு அடக்கி, அன்பும் அறனும் அவனைவிட்டு ஒழியா வகையிற்காத்து ஒழுகும் பேராண்மை தலைசிறந்தவர். இத் தொழில்களில் ஈடுபடுங்கால், இவர்கள் தம்மையும் பழிபாவங்கள் வந்தணுகாவாறு நீக்கிக்கோடலும், பரந்த புகழை யிப்பரந்தவுல கில் நிறுத்தலும் செய்துகொள்ளும் திறல்மிக்கவர். இதுபற்றியே இவர்களை ஆன்றவிந்தடங்கிய கொள்கை மேம்பட்ட சான்றோர் களோடு ஒப்பவைத்து எண்ணுப. எனெனின், இச்சான்றோரும் அரிய வேள்விகள் பலசெய்து மாவிசும்பு (தேவருலகு) வழங்கும் வாலறிவும், வேள்விக்காலத்துப் பரந்த தம்மார்பிடைப் பூசப் பெறும் நறிய சந்தனப்பூச்சு முடையவரே. இவர்கள் தம் அரசனைச் சூழவிருக்குங்கால், உயரிய பட்டாடையுடுத்து, முடி யில் மயிர்க்கட்டணிந்து (தலைப்பாகையணிந்து) சிறந்த தோற்றங் கொண்டு திகழ்வர். தொடரும்.

# தமிழகத்துப் பண்டைத் தமிழ் மக்களும், தனித்தமிழ் மொழியும்.

திருவாளர், K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A.,
சட்டகலாசாலை, சென்னை.

(முற்றொடர்ச்சி-195)

இத்தமிழகத்தே நின்றுலவிய மொழி, தன்னேரில்லாத் தண் டமிழ் மொழியாகும். காலத்தால் மிகத் தொன்மை வாய்ந்த மக்கள் தம்முள்ளத்தே தோன்றும் கருத்துப் பொருள்களைப் பிற ருக்குத் தெரிவிக்கவெண்ணி அக்கருத்துக்களுக்கேற்ப கைக்குறி களும் ஒலிக்குறிகளும் எற்படுத்திக் கொண்டனரென்பதூஉம்,

பின்னர் அவ்வொலியினை யுணர்த்த வடிவினையுண்டாக்கின ரென்பதூஉம், ஓர் மொழி இவ்வாறே மக்களது கூட்டுறவின் பயனால் தோன்றுதற்குரியதென மக்களியல்பை ஆராய்ந்துணர்ந்தார் கூறுவர். நீர் சூழ் நிலவரையில் நிலவும் மொழிகளுக்குள் தொன்மொழியாய்க் கருதப்படும் தமிழ், ஆரியம், ஹீப்ரு, லத்தீன், கிரேக்கு ஆகிய இவ்வைந்தனுள் சுவை மிகவும் மலிந்து, நயம் மிகவும் பொலிந்து, சொல்வளம் மிகவும் செறிந்து, ஏட்டினிலே தங்கியிறவாமல் பேச்சுவழக்கினில் நின்றுலவுவது உயர்தனித் தமிழ் மொழியே. இத்தண்டமிழ்மொழி இயற்கையழகு வாய்க்கப் பெற்றிருப்பதால் இம்மொழி 'உலகவழக் கழிந்தொழிந்து சிதையாது' என்றும் இந்நிலவுலகத்தின்கண் உலவுகின்றது.

'தமிழென்ப தினிமை நீர்மை' 'தமிழறியார் நெஞ்சம் போன்று' 'தமிழ் தழுவிய சாயலவர்' 'தமிழினு மினிய தீஞ் சொற் றையலாள்' 'தன்பாற் றழுவுங் குழல்வண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே' 'பாலேய் தமிழர்' 'தமிழ்நிகர் நறவமுந் தனித்தண் டேறலும்' 'அத்தமிழின்பப் பாவினை' என்பவற்றால், 'தமிழ்' என்ற மொழியே இனிமை, செம்மை, அருமை, வண்மை, நறுமை எனப்பொருள்படும். *மற்றும் இஃது ஒட்பம், தட்பம், விழுப்பம் என்ற பிற அரும்பெருங்குணம் பலவும் தனக்கே உரிமையாயுடையதாகலின் பேச்சுவழக்கற்று ஏட்டினில் தங்கி தன்னொளி மழுங்கின பிறமொழியினைப் போலல்லாது,

'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்'

என்பாராயினர்.

---

*'The Tamil is not a vulgar dialect. Before the principal basis of the English had a written character, it was a highly polished language. Its name signifies sweetness & though not so musical as Telugu in its poetic form especially it is not without its claim to emphomic charms & linked sweetness.'

'தமிழ்' என்ற மொழியைத் 'தமி + ழ்' எனப் பிரித்து, தமி என்பதற்குத் தனித்து அதாவது ஒப்பின்மை கொண்டு வழங்குவதெனப் பொருள்கொடுத்து, தமிழ் ஒப்பின்மை கொண்டு வழங்கும் மொழியெனக் கூறுவர் சிலர். சிலர், 'தமிழ்' என்ற மொழியில் முதல் வல்லினமும், பின் மெல்லினமும் அதன் பின்னர் இடையினமும் அவைகளுக்குரிய ஓசைகளும் உண்டானமையின் அம்முறைமையும் தழுவ 'தமிழ்' ஆயிற்றென்பார். மற்றும் ஒரு சாரார் தமிழர் தமக்குரிமைப் பொருள்களனைத்திற்கும் தம் என்ற உரிமை அடைமொழி கொடுத்துக் கூறுதல் வழக்கமாகலின், தம் + ஆய் = தாய், தம் + அக்கை = தமக்கை, தம் + கை = தங்கை, தம் + அவர் = தமர் என்னுமாறே, தமக்குரிய ஒலி, தம் பேச்சுமொழி எனப் பொருள்படத் தமிழ் என்ற மொழியினைத் 'தம்' + 'இழ்' எனப்பிரிப்பர். தமிழ் மொழி 'எவ்வினையு மோப்புதலிற் றிராவிடமென் றியல்பானடை' யாயிற்றென்பார் ஒரு சாரார். மற்றும் ஓர் வகையார் 'தமிழ்' தமம் + இல் எனப் பிரித்து இருளில்லாததென்பர். 'திராவிடம்', 'திரமிளம்' முதலாய ஏனைய சொற்களினின்றும் 'தமிழ்' என்னும் சொல் தோன்றிலது ; அம்மொழி பண்டுதொட்டே 'தமிழ்' எனும் பெயர்வாய்க்கப்பெற்றுச் செவ்வியுடன் மிளிர்கின்றதென்பது

'சதுமரைஆ ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அனாதியென மொழிகுவதும் வியப்பாமே'

என்பதனால் அறியலாகும்.

நற்றமிழ் மொழிக்குரிய செவ்வியும் சிறப்பும் அருமையும் ஈண்டுவரும் பாக்களால் உணரலாகும்.

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ(டு) அமர்ந்து
பண்ணுறத்தெரிந்(து) ஆய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது(ம்) முதலை
யுண்ட பாலனை யழைத்தது(ம்) எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலே மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

[பரஞ்சோதி முனிவர்.]

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்(கு) இணையாத்
தொடர்(பு) உடைய தென்மொழியை யுலகமெலாம் தொழுது
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்எனிற் [எத்துங்
கடல்வரைப்பில் இதன்பெருமை யாவரே கணித்(து) அறிவார்.

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினர் என்றால்இவ்
விருமொழியு(ம்) நிகரென்னும் இதற்(கு)ஐய முளதேயோ.

[சிவஞானமுனிவர்.]

தமிழ் மொழியோடு பிறமொழிகளின் தத்துவத்தினையும் கற்றுணர்ந்த பேரறிவு சான்ற பெரியார் பலர், இந்நிலவுலகினில் வழங்கும் மொழிகள், ஆரியம், செமிடிக், துரானியம் ஆகிய மூவகைகளே எனப்பகர்வார். தமிழ்மொழி இம்முப்பிரிவுகளி லொன்றாகிய துரானிய வகுப்பினைச் சார்ந்ததெனக் 'கால்ட் வெல்' (Caldwell in his comparative Grammar) கூறுவர். இவர்தாம் கூறும் கொள்கை வலியுடைத்தன்றெனப் 'பரிதிமாற் கலைஞர்' எழுதுவது பின் வருமாறு:—'தமிழர்கள் துரானியர் களால் வென்றடக்கப்பட்டபோது அத்துரானிய பாஷைச் சொற் களில் சில தமிழ்ப் பாஷையின் கண்ணே புகுந்திருத்தலுமியல்பே. இனித் துரானியரை வடக்கிருந்து போந்த ஆரியர் வென்று துறத் தலும் அவர்கள் தெற்கே வந்து தமிழருடன் கலப்பாராயினர். அப்பொழுதும் துரானிய பாஷைச் சொற்கள் சில தமிழ் மொழி யின்கண்ணே இடம் பெற்றிருத்தல் வேண்டும். எனவே தமிழ்ப் பாஷையின்கண் முதன் முதல் கலக்கப்புகுந்தது துரானிய

பாஷையே. சரித்திர உண்மை இவ்வாறிருத்தலின், தமிழ்ப் பாஷையைத் தூரானிய பாஷையோடு சேர்த்து ஓரினமாக்கிப் பாகுபாடு செய்தல் பொருத்தமற்றதாகும்.'

இலக்கணக் கொத்துரை இயற்றவந்த திருவாவடுதுறை ஆதீனத்தினைச் சார்ந்த சுவாமிநாததேசிகர், தமிழ் ஆரியத்தினின்றும் பிறந்ததெனப் பின்வருமாறு கூறுவர்.

'அன்றியும் தமிழ்நூற் களவிலே யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ
வன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவ ரறிவுடை யோரே
ஆகையால் யானு மதுவே யறிக
வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினு
மிலக்கண மொன்றே யென்றே யெண்ணுக'

இவர்தம் கூற்று, சிறிதும் பொருந்தாததாதலைப் பின் வருவனவற்றால் நன்குணரலாம்.

'தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ்செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம், புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா.'

'சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறிற் றிணைபா லுணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை வேற்கெழு வாயுருபுந்
தேற்றிய லிங்க மொருமூன்று மில்லை செழுந்தமிழ்க்கே.

(பிரயோகவிவேகம்.)

தண்டமிழ் மொழியினில் வடசொற் கலப்பிருந்தமையின் வடமொழியினின்றும் தமிழ்மொழி போந்ததெனப் பல்லோர்

எண்ணினர். தொல்காப்பியர் காலத்தே வடசொற்கள் தமிழின்கண் வழங்கலுற்றன வென்பதை 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' என்பதனால் அறியப் பெற்றோ மாயினும், தொல்காப்பியர் காலத்திற்குப் பன்னெடுங் காலமுன்னர் தமிழ்மக்கள் தூயதமிழினை வளர்ப்பதில் ஆர்வங் கொண்டனரெனல் நன்குவிளங்கும். இரண்டாயிரத்து அறுநூற்றறுபதடிகளையுடைய திருக்குறளில் ஏறத்தாழ ஐம்பது வடசொற்களும், எழுநூற்று எண்பத்திரண்டடிகளையுடைய மதுரைக் காஞ்சியில் ஐம்பத்தைந்து வடசொற்களும் இருப்பதனால், பண்டைத் தமிழ்ப் புலமைவாய்ந்த பெருந்தகையார் இருமொழியிலும் வல்லுநரென அறியப் பெறலாமே. யொழிய, வடமொழியினின்றும் தமிழ்மொழி போந்ததென எண்ணுவது, எண்ணுவார் அறியாமையைப் புலப்படுத்துவதாகும். மற்றும் தொல்காப்பியரது காலத்திற்கு முன்னரே தமிழ்எழுத்துக்கள் (எழுதப்படுதலின் எழுத்தே) தோன்றியிருத்தல் வேண்டுமென்பது

'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' [எழுத். 14]

'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' [எழுத். 15]

'எகர வொகரத் தியற்கையு மற்றே' [எழுத். 16]

'புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயீ ரியல வுயிர்த்த லாறே' [எழுத். 17]

என்ற தொல்காப்பிய நூற்பாக்களினால் அறிந்தமையான் வடநாட்டாரியரது கிரந்த எழுத்துக்களினின்று தமிழ் எழுத்துக்கள் போந்தவை யென்பதூஉம், கி. பி. முதனூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் எழுத்துக்களில்லை யென்பதூஉம் பொருந்தா உரைகளாகும். ஆரியர்கள் தம் ஆரியம் வழங்கத் தமிழ் எழுத்துக்களின் வழக்கினைப் பின்பற்றிக் கிரந்த எழுத்துக்கள் ஏற்படுத்திக் கொண்டனரென்பது இயைபுடைத்து. இதனானே ஆரியர்கள் தமிழகத்தே குடியேறு முன்னர் தமிழ்மொழி எம்மொழியுடனும் சிறிதும் கலவாது உயர் தனிச் செம்மொழியாகவே யிருந்ததென்பதூஉம் மற்றும் ஆரிய

ரும் தமிழரும் ஒருங்குசேர்ந்து வாழநேரிட்டகாலத்தே தமிழ் மொழியினிற் சிறிது சிறிது வடமொழிகள் சேர்ந்து வழங்கின வென்பதூஉம், தமிழ் எழுத்துக்களும், தனித்தமிழ் மொழியும் தமிழர்க்கே வுரியவென்பதூஉம் அறியப்படும். அடியில்வரும் பாக்கள் பிறமொழிச்சொற்களை வேண்டாமையானே, பொருள் விழுப்பம் தோன்றச்செய்யும் தனித்தமிழின் நறுஞ்சுவை பழுத்த கொழுஞ் சொல்லும், இத்தகைய சொற்களினு லுண்டாய நன்சுவையொழுகும் நடையுடைச் செய்யுளும், மற்றும் தமிழ்மொழியின்கண்ணே காணப்படும் அருமைப்பாடுகளும் பெற்றுக் கவின் பெற்றுதல் காண்க.*

'நோயுங் கைம்மிகப் பெரிதே மெய்யுந்
தீயுமிழ் தெறலின் வெய்தா கின்றே
யொய்யெனச் சிறிதாங் குயரிய பையென
முன்றிற் கொளினே நந்துவள் பெரிதென்
நிரைய நெஞ்சத் தன்னைக் குய்த்தாண்
டுரையினி வாழி தோழி புரையி
னுண்மை செல்வனை ஞெகிழ்த்தோன் குன்றத்
தண்ணெ னெடுவரை யாடித் தண்ணென
வியலறை மூழ்கிய வளியென்
பசலை யாகந் தீண்டிய சிறிதே.' [நற்றிணை.]

'எழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறக்கினும் யாழ்க்கவைதா னென்செய்யுஞ்
சூழும்கா னும்மக ணின்க்குமாங் கனையளே'
[கலித்தொகை.]

எம்மொழி இயற்கை யொலிகளை யுடையதாய் இன்பம் விளைப்பதுடன் குறைந்த எண்ணினையுடைய எழுத்துக்களை வாய்ந்

*'The Tamil the most cultivated ab-intra of all the Dravidian idioms can disperse with the Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish without its aid.'—Caldwell.

It is one of the most copious, refined and polished languages spoken by man—Taylor.

துளதோ அஃதே தனிமொழியெனப் பெறப்படும். இத்தகைய நீரதாயுள்ளது தமிழ்மொழி யல்லாது பிறிதெதுவுமின்று. தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் தனியொலிகளாயுள்ள முப்பதும் மூன்றுமே தமிழ் எழுத்துக்கள்.

'எழுத் தெனப் படுவ
அகர முதல்
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே'
'அவைதாங்
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்தமென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.'

தனியொலிகள் முப்பதிற்கும் சார்பொலிகள் மூன்றிற்கும் குறைந்த அளவானே 'குறியீடு' அமைக்கப்பட்டது. இவ் வெழுத்துக்கள் வேற்றுமொழியார் இறும்பூதுகொள்ள எத் தகைய ஓசையினையும் ஒலியினையும் தனித்தோ அல்லது சார்ந்தோ புலப்படுத்தும் தகைமை மிகப்பெற்றுத் தெள்ளிதில் அறியக்கூடிய எளிய அமைப்பினையுடையன. வீறுசால் தமிழகத்தே வழங்க லுறும் இம்மொழியின் இயற்கையோசைகளும், அளவிற்குட் பட்ட உயிர்ப்பொலிகளும், மிகச்சுருங்கிய நெடுங்கணக்கின் தனி எழுத்துக்களின் வன்மையும், இலக்கண இயற்கை வரம் பினைக் கடவாத இயற்கைப் பிறப்பினையு முடையதால் இம்மொழி யினை 'வீறதேறுந் தமிழ்' என்றனர் ஆளுடைய பிள்ளையார்.

'முத்தமிழ்த்துறையில் முறைபோகிய' எனப்படுவதால், தமிழ்மொழியிலே இயல், இசை, நாடகமென முப்பிரிவுண்டென் பது செவ்விதிற் புலனாகும். இயற்றமிழ், 'செந்தமிழ்', 'கொடுந் தமிழ்' என இருபாகுபாடுகளையுடையதாய் உலகினருக்கு உதவும் நெறி இப்பெற்றியது, உயர் வழக்கம் இந்நெறியதெனப் பொருள் புலப்படுமாறே செய்யுள் அல்லது உரைநடை வழியாகச் சுட்டிக் காண்பிக்கும் தகைமைத்து. இசைத்தமிழினைக் குறித்து அடி யார்க்குநல்லார் 'பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்த

லால் இசையென்று பெயராம்' எனக் கூறினர். ஓர் காதையினைத் தழுவிவரும் கூத்து, செவிப்புலனுக்கும் கட்புலனுக்கு மின்பம் தருமாகில் அஃது நாடகமென்ப. அக்கூத்து பதினொரு வகைப்படும்.

'கடையமபி ராணிமாக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.'

'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங், கண்ணிய புறனே நானான் கென்ப' யென்ற மெய்ப்பாட்டியலது சூத்திர உரையில் 'முடியுடை வேந்தருங் குறுநிலமன்னரு முதலாயினோர் நாடகமகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்பவிளையாட்டினுட் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும் அவைகருதிய பொருட்பகுதி பதினாறுகி அடங்கும் நாடகநூலாசிரியர்க்கு என்றவாறே' யெனக்கூறி 'அது முதனூலை நோக்கிக் கூறியவாறு போலும்' எனக் குறிப்பிட்டிருப்பதையு மறிக. அவையரங்கினோர் முறைமை யாவற்றினையும் மெய்ப்பாட்டியலிலே நன்குணலாகும். சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையில் 'மண்ணின் மாதர்க் கணியாகிய கண்ணகியுந் தான்காண ஆயர்பாடியி லொருமன்றத்து மாயவனுடன் தம்முனுடிய வாலசரிதை நாடகம்' என்று குறிப்பிட்டிருப்பதினாலும், மற்றும் அடியார்க்கு நல்லார் 'இசைத்தமிழ் நூல் பல இறந்தன'. 'இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும் பிறவும் தேவ இருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல், சயந்தம் குணநூல், செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல்நடு இறுதி காணாமையின் அவையுமிறந்தனபோலு' மெனக் கூறியிருப்பதினாலும் பண்டைக்காலத்தில் நாடகநூல்களும் இசைநூல்களும் மலிந்திருந்த உண்மை நன்கு புலப்படும்.

தமிழ்மக்களின் வழக்க ஒழுக்கத்தினை அறவே ஒழித்துத் தம் வழக்க ஒழுக்கங்களைப் புகுத்திய வடநாட்டாரியமக்கள், 'அறம் பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே' எனத் தம் நுண் ணறிவால் கற்றுணர்ந்த தமிழ் மக்கள் மனத்தை அலைக்கப் புகுந்து இசையும் நாடகமும், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியர் கூறியாங்கே, காமநிலையினைப் பற்றியன அவற்றைக் கைவிட்டு அறம்புரிதல் சிறந்ததெனத் தண்டமிழ் மக்களுக்குக் கூறித், தாம் கொண்ட கூற்றினையே தமிழகமுழுவதும் நிலைநாட்டி விட்டமையான், இசையும் நாடகமும் நம் தமிழ்மொழி தன் னகத்தேயுடையதா யிருந்தும் நாம் பெற்றிலேம். மற்றும் மெல்லிய இன்னிசை வாய்ந்த தமிழ் இசை நூற்கள் காந்து படவும், மனம் சற்றிளைத் திருக்குங்காலை அம் மனத்திற்குப் பேரின்பம் தந்து தன்வயமாக்கி நிற்கும் தமிழர் இசை ஒழிய, அத்தமிழாது செவி அறுவறுப்புக்கொள்ளக் கனத்த ஓசையும் உரத்த ஒலியுமுடைய வடநாட்டாரிய மக்களது இசை, பெரிதும் வழங்கலுற்றது. இதனானே வடநாட்டாரியமக்கள் தமிழ் மக்களுக்கல்லாது தண்டமிழ் மொழிக்கும் இன்னல் பல புரிந்தவ ரென்பது உணரலாம்.

௨

# கிறித்தவர் கிழமைகளும் மாதங்களும்.

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நாங்குனேரி.

கிறித்தவர்கள் தமது கிழமைகளுக்குப் பின்வருமாறு பெயர்கள் அமைத்துளர். அவை வருமாறு:—"சன்டே, மன்டே, டியூஸ்டே, வென்ஸ்டே, தர்ஸ்டே, பிரைடே, சாட்டர்டே." இவ்வேழு கிழமைகளும் சேர்ந்தது ஒருவாரம் என்றும், நான்குவாரங்கள் ஒருமாதமென்றும் கணக்கு ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. ஓர் ஆண்டு என்பது இம்மாதங்கள் பன்னிரண்டு கொண்டது. அவர்களுடைய மாதங்களின் பெயர்கள் வருமாறு:—'ஜனவரி, பெப்ரவரி, மார்ச், எப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்.' இக்கிழமைகளும் மாதங்களும் எவ்வாறு இப்பெயர் பெற்றன என்பதே இக்கட்டுரையின் ஆராய்ச்சிப் பொருள்.

முதலில் கிழமைகளின் பெயர்க் காரணங்களை ஆராய்வோம். கிழமைகளின் ஈற்றில் "டே" என்ற சொல் பொதுவாக அமைந்திருக்கிறது. அதன் பொருள் "கிழமை" என்பதே. நமது தமிழ்க் கிழமைகளின் ஈற்றில் எவ்வாறு கிழமையென்ற சொல் அமைந்திருக்கிறதோ அதைப்போலவே அவர்களுடைய கிழமைகளின் ஈற்றில் 'டே' என்ற சொல் அமைந்திருக்கிறது.

இக்காலத்தில் கிறித்தவச் சமயத்தினராக இருக்கும் மக்களெல்லாம் ஒருகாலத்தில் வேறு சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஏனெனில் கிறித்தவச் சமயம் மிகவும் பிற்காலத்தில் தோன்றியது. கணக்குக் கெட்டாத காலத்திலிருந்த மக்களெல்லோரும் அறிவு வளரப்பெறாதவர்களாய், நாடு நகரங்களில் வாழப்பெறாதவர்களாய், காடுகளிலே மாக்களைப் போலத்திரிந்து வாழ்ந்துவருபவர்களாயிருந்தனரென வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அக்காலத்திருந்த மக்களெல்லோரும் தமது ஆற்றலுக்கு

மேற்பட்ட பொருள்களை அஞ்சி, மதித்து, வணங்கி வந்தனர். அவர்களுக் குத் தங்களுடைய வல்லமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாய், பெருமை மிக்கதாய், புகழுடையதாய் ஒருபொருள் இருக்கிறது என்ற நம்பிக்கை இருந்தது. அவர்கள் தமது கண்ணுக்குப் புலப்படுகின்ற பொருள்களில் மிகவும் வியப்பைத் தருவனவாக இருந்த பொருள்களையெல்லாம் அப் பொருளின் அறிகுறியாக மதித்தனர். அவ்வாறு மதித்த பொருள் களிலெல்லாம் மிகவும் தலை சிறந்ததாக அவர்கள் இரவியையே கொண்டனர். ஏனெனில் அவர்கள் இரவியைப்போல மிகவும் வியப்பைத் தருவதாகவும் மிகவும் அழகுடையதாகவும், மிகவும் பயன் தருவதாகவும் வேறு ஒரு பொருளையும் கண்டிலர். அவனே அவர்களுக்கு ஒளியைத்தந்து உலகில் அவர்களை உலாவச் செய்தான்; வெப்பத்தைத்தந்து அவர்கள் நல்வாழ் வடையச்செய்தான். அதனால் அவர்கள் அவனைத் தாங்கள் மேற்கூறியாங்கு மதித்த ஒரு பெரும் பொருளின் நேர் அறிகுறியாகக்கொண்டு வணங்கத் தொடங்கினர். அவர்களுக்கு வணக்கம் என்ற உணர்ச்சி இயல்பிலே அமைந்திருந்தது.

இரவியே அவர்களுக்குக் கண்கண்ட கடவுளாக ஆயினன். அதனால் அவனுடைய பெயராலே தமது முதற்கிழமையை அழைத்தனர். அவனுக்கு அவர்கள் மொழியில் "சன்" (Sun) என்பது பெயர். அதனால் அவர்களுடைய முதற் கிழமை "சன்டே" (Sunday) என வழங்கப் பெறுவதாயிற்று.

பண்டைக்காலத்திருந்த இம்மக்கள் இரவியைப்போலவே திங்களையும் வணங்கி வந்தனர். ஏனெனில் இரவிக்கு அடுத்தபடியாக வியப்பைத் தருவதாகவும் ஒளியுடையதாகவும் உள்ளபொருள் திங்களே. இரவி மிகப் பெரிய உருவுடையதாகவும், அளவிலடங்கா ஒளியுடையதாகவும், மிகுந்த வெப்பமுடையதாகவும் இருத்தலினாலே அதனை அவர்கள் ஓர் ஆண் தெய்வம் எனக்கொண்டனர். திங்கள் சிறியதாகவும், குளிர்ச்சியோடு கூடிய ஒளியுடையதாகவுமிருத்தலினாலே அதனை அவர்கள் ஓர் பெண் தெய்வம் எனக் கொண்டனர். பின் அவர்கள் இரவியைக் கணவனாகவும் திங்களை அவனுடைய மனைவியாகவும் எண்ணத் தலைப்பட்டனர். அதனால் தமது இரண்டாவது கிழமைக்குத் திங்களின் பெயரையே அமைத் தனர். திங்களுக்கு அவர்கள் மொழியில் "மூன்" (Moon) என்பது பெயர். அது சிதைந்து "மன்" (Mon) என ஆக, அதனால் அக்கிழமை "மன்டே" (Monday) என வழங்கப்பெறுவதாயிற்று.

அவர்கள் இரவிக்கு "போபஸ் அப்பாலோ" என்றும், திங்களுக்கு "டையானு" என்றும் வேறு பெயர்கள் அமைத்திருந்தனர். இத்தெய்வங்களுக்குப் பல இடங்களில் பெரியகோவில்கள் கட்டி நிலைபெறுத்தி வழிபட்டனர். பல பெரிய திருவிழாக்களும் கொண்டாடினர். போபஸ் அப்பாலோ என்ற இரவித்தெய்வம் விண்ணிலே தனது கொழுந்துவிட்டெரியும் ஒளிமயமான தேரிலே பகலில் விரைந்து செல்வதாகவும், அவனுடைய மனைவியாகிய டையானு தன் வெள்ளித்தேரிலே இரவில் விரைந்து செல்லுவதாகவும் அவர்கள் எண்ணினர். டையானு மிகவும் அழகாகவும் குளிர்ந்த கதிருடனுமிருந்ததால் அவர்கள் அவளை மிகவும் அன்பு பாராட்டி வணங்கினர். அவள் அடிக்கடி காடுகளில் விருப்பத்தோடு சுற்றித்திரிவதாக நம்பினர். அவளுக்குச் செய்த விழாக்களில் அவளுக்குப் பல்விதமான பொருள்களைப் படைத்தனர். அவைகளுள் ஒன்று மாவினுலாகிய பெரிய அப்பங்கள். அந்த அப்பங்கள் சுற்றிவர எரிபந்தங்களோடு படைக்கப்பெறும். சிறுவர்களும் சிறுமிகளும் அவளைத் தமக்கு மிகவும் உரிய தெய்வமெனப் பாராட்டி வழிபட்டனர்.

கணவனுகிய இரவியின் கிழமையே முதற்கிழமையாகவும், அவனுடைய மனைவியாகிய திங்களின் கிழமையே இரண்டாவது கிழமையாகவும் உலகத்தாரெல்லாராலும் கொள்ளப்பட்டு வழங்கிவருவது வியப்பாகவே இருக்கிறது. இத்துடன், தமிழ்மக்களும் இரவியை ஆண் தெய்வமாகவும் அதனுல் தந்தைக்குரியவனுகவும், மதியைப் பெண்தெய்வமாகவும் அதனுல் தாய்க்குரியவளாகவும், கொண்டு வழங்கிவருவது அறிஞர் எண்ணி ஆராயத்தகுந்த பொருளாகவே யிருக்கிறது. ஒளிநூல் (சோதிடம்) வல்லார் தந்தையைப் பற்றிய செய்திகளைச் செய்பவன் (பிதிர்காரகன்) ஞாயிறு என்றும், தாயைப்பற்றிய செய்திகளைச் செய்பவன் (மாதுர்காரகன்) திங்களென்றும் கொண்டு பலன்களைக் கூறுகின்றனர். காரகன்-செய்பவன்.

பண்டைக்கால மக்கள் நாளடைவில் அறிவு வளரப்பெற்று போபஸ் அப்பாலோ, டையானு முதலிய சிறு தெய்வ வழிபாடுகளைக் கைவிட்டுத் தற்காலக் கிறித்தவச் சமயக்கொள்கைகளை யுடையவராக ஆனுலும் அவர்கள் நாங்கள் முன் அமைத்த கிழமைப் பெயர்களை மாற்ருமல் முன்னிருந்தபடியே வழங்கிவருவாராயினர். அவர்கள் கிறித்தவர்களான பின் முதற்கிழமையாகிய சன்டேயைக் கடவுளை வணங்கும் ஓர் ஓய்வு நாளாகக்கொண்டனர். அதாவது வேறு தொழில்கள் யாதொன்றும் புரியாமல் அன்று அவர்கள் கடவுளை வணங்கும் தொழில் ஒன்றையே மேற்கொண்டவரா

யிருந்தனர். அன்று விளையாட்டுக்களோ, வேடிக்கைகளோ ஒன்றும் நடைபெறா. மாணாக்கர்கள் தமது பாடங்களைக்கூடப் படியார். ஒரு நாள் முழுவதும் வேறு வேலையொன்றும் செய்யாமல் உண்பதும் கடவுளை வழிபடுவதும் மட்டும் செய்திருப்பது முடியாத செயலாதலால் அவர்கள் சிலகாலம் மிகுதியாகத் தின்றுவிட்டு ஒருவேலையுமில்லாமல் கொட்டாவி விட்டுக்கொண்டும், முனங்கிக்கொண்டும் அந்நாள் எவ்வாறு கழியுமோ என ஏங்கியிருப்பர். பலநாள் வேலைசெய்த பின் ஓர் நாளாவது ஓய்வு வேண்டுமென்பது உண்மையே. ஆனால் ஓய்வு என்பது மக்களுக் காக ஏற்பட்டதே ஒழிய ஓய்வுக்காக மக்கள் படைக்கப்பெறவில்லை. இவ் வுண்மையை அறிஞர்கள் நாளடைவிலுணர்ந்து அந்நாளைத் தக்காங்குக் கழிக்கத் தலைப்பட்டனர். அதனால் அவர்கள் இக்காலத்தில் கடவுளைத் தொழுவதும், கடவுள் நூலைப்படிப்பதும், கடவுள்மேல் பாடல்கள் பாடுவ தும், தமது சமயத்தைப் பரப்புமாறு பெருஞ்சொற்பொழிவுகள் பல புரி வதுமாக அந்நாளைக்கழிக்கின்றனர். அக்கிறித்தவச் சமயத்தினரே நம் நாட்டில் அரசியற்றிவருகின்றனராதலின் நமக்கும் ஞாயிற்றுக்கிழமையே விடுமுறைநாளாகின்றது. பண்டைக்காலத்தில் தமிழ்மக்கள் நிறைமதி, இருள்மதிக் காலங்களையே ஓய்வு நாட்களாகக் கொண்டிருந்தனர். அவ் வழக்கம் இக்காலத்திலும் சிற்றூர்கள் சிலவற்றிலுள்ள பள்ளிக்கூடங்களிற் காணப்பெறும். ஆனால் சிற்றூர்களில் அரசாங்கத்தார் மேற்பார்வைப் பள்ளிகள் ஏற்பட ஏற்பட அப்பழைய நம் நாட்டு வழக்கம் அவ்வூர்களிலும் மறையத் தொடங்குகின்றது. இதனால் நாம் நாளடைவில் நம்மை யறியா மலே புறச்சமயத்தினர் கொள்கைகளை மேற்கொள்பவராகவும் நமது பழைய வழக்கங்களைக் கைவிடுபவராகவுமாகின்றோம். அறிஞர் இதனை ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும்.

'சன்டே'க்கு மறுநாள் ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் நாள். ஏனெனில் 'சன்டே'யன்று ஓய்வுக்கப்புறம் உடலில் ஊக்கமிருப்பது இயல்பே. மேலும் முன்னாளில் செய்யவேண்டிய வேலைகளையும் அன்று சேர்த்துச்செய்து முடிக்கவேண்டியிருக்கும்.

ஐரோப்பாக் கண்டத்திலே நார்வே என ஒரு நாடு இருக்கிறது. அந் நாட்டினர் சிறு தெய்வங்களை வழிபட்டுக்கொண்டிருந்த காலத்திலே "டயர்" என்ற பெயரையுடைய தெய்வத்தைத் தமக்குப் போர்க்கடவுளாக வைத்திருந்தனர். அக் கடவுள் "டிவ்" என்றும் கூறப்பெறும். இந்தத் தெய்வத்தின் பெயராலே மூன்றாவது கிழமையாகிய "டியூஸ்டே"

(Tuesday) என்பது வழங்கப்பெற்றது. "டயர்" என்பதே "டியூஸ்" என மருவிற்று என்பர் சிலர். சிலர் "டிவ்" என்பதே "டியூஸ்" என ஆயிற்று என்று கூறுவர்.

பண்டைக் காலத்திலே ஓநாயுருவுள்ள ஒரு பேய் இருந்தது. அதன் பெயர் "பென்ரிஸ்". இப்பேய் உலகத்தைப் பலவாறு துன்புறுத்தி வந்தது. இதை அடக்கினலொழிய உலகுக்கு நன்மையுண்டாகாதெனத் தெய்வங்கள் சிந்தித்தன. இதை அடக்குவதென்பது முடியாத செயலா யிருந்தது. ஆனல் டயர் இக்கடினமான வேலையை மேற்கொண்டனன். மலைகளிலிருந்த தெய்வங்கள் உலகத்திலுள்ள கடினமான பொருள்களைக் கொண்டு ஓர் சங்கிலி செய்தன. அது அறுக்க முடியாத வலிமையுடையது. அச்சங்கிலியால் பென்ரிஸ் என்ற பேயைக் கட்டுதல் வேண்டும். அச் சங்கிலியைக் கழுத்திற்போடுவதற்கு அப்பேய் இடங்கொடுக்கவில்லை. கடைசியாக அப்பேய் தெய்வங்களைப்பார்த்து "நீங்கள் இச்சங்கிலியைக் கொஞ்சகாலங்கழித்து எடுத்துவிடுவதாக வாக்களித்தல் வேண்டும். மேலும் உங்களில் ஒருவரை என்வாயில் தன் கையை நுழைக்க அனுப்பவேண்டும். அவ்வாறு செய்தால் இதை என் கழுத்திற் போடவிடுவேன்" என்று கூறிற்று. அதைக்கேட்ட தெய்வங்களெல்லாம் தத்தம் கையை நுழைக்க அஞ்சி வாளா இருந்தன. ஆனல் டயர் என்ற போர்க்கடவுள் மட்டும் அச் செயலைப்புரிய வீரத்தோடும் துணிந்து முன்வந்தனன். டயர் அப்பேயின் வாயில் தன்கையைப் புகுத்தியவுடனே அப்பேய் கட்டப்பட்டது. ஆனல் அது தான் பிடிபட்ட வெறியில் டயரின் கையைத் துண்டாகக் கடித்து விட்டது. அதுமுதல் டயருக்கு ஒரு கைதானிருந்தது.

இம்மூன்ருவது கிழமையாகிய டியூஸ்டேயை பிரஞ்சுக்காரர்கள் "மார்டி" (Mardi) எனவழங்குகின்றனர். அப்பெயர் "மார்ஸ்" (Mars என்ற பெயரிலிருந்து அமைந்ததாம். மார்ஸ் என்பதும் ஓர் தெய்வமே. இத் தெய்வத்தை பிரஞ்சுக்காரர்கள் தமது போர்க்கடவுளாகக் கொள் கின்றனர். உரோமானியரும் இவனையே தமது போர்க்கடவுளாகக் கொள்வதோடு இவனை இரவியின் தலைமகனெனவும் கூறுகின்றனர். நம் நாட்டு ஒளிநூல் வல்லாரும் மூன்ருவது கிழமைத் தலைவனுகிய செவ் வாயைப் போர்த்தலைவனுகவே கொள்கின்றனர்.

நான்காவது கிழமை "வெட்னெஸ்டே" (Wednesday) என்பது. இது "வென்ஸ்டே" என்றே சொல்லப்பெறும். இது "ஓடின்" என்றும் "வூடென்" என்றும் சொல்லப்பெறும் தெய்வத்தின் பெயரால்

அமைந்தது. இந்தத் தெய்வம் ஸ்காந்திநேவியர்களின் தெய்வங்களில் மிகப்பெரிது. ஸ்காந்திநேவியர் என்பார் ஐரோப்பாவிலுள்ள நார்வே, சுவீடென் என்ற நாடுகளில் வாழும் மக்கள். நார்வேயும் சுவீடெனும் சேர்ந்து ஸ்காந்திநேவியா எனப்பெறும்.

'ஊடெனை'ப்பற்றி அவர்கள் கூறும் வரலாறு பின்வருவது. அவன் தங்கத்தாலும் வெள்ளியாலும் கட்டப்பெற்ற அரண்மனையிலே வாழ்ந்தனன். அவ்வரண்மனையின் பெயர் வல்காலா. அவனுடைய தோள்களில் இரண்டு அண்டங்காக்கைகள் இருந்தன. உலகச்செய்திகள் அவனுக்குத் தெரியவேண்டுமானல் அக்காக்கைகளை அனுப்பி உலகைச் சுற்றிப்பறந்து சென்று அங்கங்கே தாங்கள் கண்டனவைகளையும் கேட்டனவைகளையும் தன்னிடம் வந்து சொல்லச்செய்வான். அவனைச்சுற்றிப் பல பெண்கள் உட்கார்ந்திருப்பர். அப்பெண்கள் தலைக்காப்புகளையும், ஈட்டிகளையும், பரிசைகளையும் அணிந்திருந்தனர். அவர்கள் வால்கைரீஸ் என்ற பெயரால் அழைக்கப்பெற்றனர். போரில் மடிந்தவீரர்களின் உயிர்களை வல்காலா என்ற அரண்மனையில் தன்னுடன் விருந்துண்ண அழைத்துவர ஊடென் இப்பெண்களை உலகத்துக்கு அனுப்புவான். அவன் அவர்கள் விருந்துண்ணும்போது அவர்களுடைய வீரச்செயல்களடங்கிய வரலாறுகளைக் கேட்டு மகிழ்வான். அவர்கள் தம் வரலாறு கூறும்போது அவன் புளித்த சாற்றைக் குடிப்பான். அவன் தனியே ஒருபோதும் உண்ணுவதில்லை. இவன் மனம்போன போக்கிலெல்லாம் நடப்பவன்.

ஐந்தாவது கிழமை "தர்ஸ்டே" (Thursday) என்பது. ஸ்காந்திநேவியர்களுடைய தெய்வங்களில் மிகவும் வலிமையுள்ளதாகிய "தார்" (Thor) என்பதின் பெயரே இக்கிழமைக்கு இடப்பெற்றதாம். இவன் ஊடென் என்ற தெய்வத்தின் மகன். தார் என்பவனுடைய கையில் ஒரு சம்மட்டி இருந்தது. அதை ஒருவராலும் தூக்கமுடியாது. அவன் கையில் இரண்டு இருப்புக்கையுறைகளும் ஒரு இருப்பு அரைக்கச்சையும் இருந்தன. அந்த அரைக்கச்சையை அவன் அணிவானேயானல் அவனுடைய வல்லமை இரட்டிக்குமாம்.

ஒரு காலத்தில் "திரிம்" என்ற பேயன் தாரது சம்மட்டியை எடுத்து ஒளித்து வைத்துவிட்டான். அப்பேயன் "பிரேயா" என்ற பெண் தெய்வம் தன்னை மணந்துகொண்டால் அக்கூடத்தைத் திரும்பத்தருவதாகக் கூறினன். பிரேயா தாரின் அன்னையார். ஆதலின் தார் அவளைப்போல் தன் உருவை மாற்றிக்கொண்டு அப்பேயனிடம் சென்றான்; போனவுடன்

பசி மிக்குளதெனக் கூறினன். அப்போது அவன் அங்கிருந்த ஒரு முழு மாட்டையும் எட்டுப் பெரியமீன்களையும் ஒரு தடவையில் தின்றுவிட்டான். அதைக்கண்டு அப்பேயன் திடுக்கிட்டான். தாருடன் சென்ற தோழன் வழிநடையே அவ்வளவு பசிக்கும் காரணம் எனக்கூறினன். அப்போது அப்பேயன் தாரைப் பெண்ணெனவே மயங்கி அவளுக்கு அவனுடைய கூடத்தைத் தந்தான். உடனே தார் அவனையும் அவனைச் சேர்ந்த பெயரையும் அக்கூடத்தால் அடித்துக் கொன்றுவிட்டான்.

இவ்வளவு ஆற்றலுடைய தாருக்குச் செய்யமுடியாமற்போன செயல்களும் சில இருந்தனவாம். அந்நாட்டினர் தாம் வாழும் பூமியை 'மிட்கார்ட்' என்ற பாம்பு சுமந்துகொண்டிருக்கிறதாக நம்பியிருந்தனர். அம்மிட்கார்ட் ஒரு பூனையைப்போல உருவெடுத்து நின்றது. அதைத் தூக்குவதற்காகப் பல்லாற்றானும் முயன்றும் முடியாமல் தார் தோல்வியடைந்தான். ஒரு சமயம் நீர் நிரம்பிய ஒரு கொம்பை அவனிடம் சிலர் தந்து அதிலுள்ள நீரைக்குடித்து அதை வெறுமையாக்க வேண்டினர். ஏனெனில் அக் கொம்பின் மற்றொருநுனி கடலோடு பிணைக்கப்பட்டிருந்தது. அதனால் அவன் குடிக்கக்குடிக்கக் கடல்நீர் அதில் வந்து கொண்டேயிருந்தது.

ஆறாவது கிழமை "பிரைடே" (Friday) என்பது. இது நாம் முற்கூறிய தாரின் தாயாகிய "பிரேயா" (Freya) என்ற பெண் தெய்வத்தின் பெயரானமைந்தது. இவள் ஊடென் என்பவனுடைய மனைவி. இவளே நாம் முற்கூறிய திரிம் என்ற பேயனை மணக்க மறுத்தவள். இதைச் சிலர் தற்காலத்தில் தீயநாளென நினைக்கின்றனர். ஆனால் இந்நாள் அக்காலத்தில் தெய்வத்துக்கு மிகவும் உகந்தநாளெனக் கருதப்பட்டது. தமிழ் மக்களும் இக்கிழமைக்குரிய கோளாகிய வெள்ளியைப் பெண் கோளாகவே குறித்திருக்கின்றனர்.

ஏழாவது கிழமை "சாட்டர்டே" (Saturday) என்பது. இது உரோமானியரின் தெய்வமாகிய "சாட்டர்ன்" (Saturn) என்பவனுடைய பெயரால் அழைக்கப்பெறுவது. இவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் பிறந்த பிள்ளையெனவும், தெய்வங்களின் தந்தையாகிய ஜூப்பிட்டர் இவனுக்கு மகனெனவும் கூறுகின்றனர். இவன் மிகவும் தீயகுணத்தையுடையவன். இவன் தன்னுடைய பிள்ளைகளையே தின்று வந்தான். இவ்வளவு கெட்டவனுடைய பெயரினதாக சாட்டர்டே இருந்தாலும் இது மிகவும் மகிழ்ச்சியைத் தரும் நாளாகக் கிறித்தவ மக்களால் கருதப்படுகிறது.

இந்நாளில் பலவிருந்துகளும் விளையாடல்களும் நடைபெறுகின்றன. தமிழ்மக்களும் இக்கிழமைக்குரியவனாகிய சனியை மிகவும் தீயவனாகவே கருதுகின்றனர்.

மேலேகண்ட ஆராய்ச்சியால் கிறித்தவர் கிழமைகளுக்கு ஏற்பட்ட பெயரெல்லாம் புறச்சமயத்தினருடைய சிறு தெய்வங்களின் பெயர்களாகவே இருக்கின்றன என அறியலாம். ஆயினும் அவைகளைக் கிறித்தவர்கள் தம்மவைகளாகவே கொண்டு வழங்கிவருகின்றனர். இனி அவர்களுடைய மாதங்களின் பெயர் வரலாற்றை ஆராய்வோம்.

பண்டைக்காலத்திய உரோமானியர் பல சிறு தெய்வங்களை வழிபட்டு வந்ததோடு அவைகளிடத்தில் அளவிலடங்காத அன்பும் கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் அவைகளின் பெயர்களிற் சிலவற்றைத் தங்கள் மாதங்களிற் சிலவற்றுக்குப் பெயராக அமைத்திருக்கின்றனர். அதனால், அத்தெய்வங்களின் வழிபாடு வெகு காலத்துக்கு முன்னாலேயே இறந்தொழிந்திருப்பினும், இக்காலத்திலும் உலகத்தாரனைவரும் அவைகளின் பெயர்களை நினைக்கவேண்டியவராகின்றனர்.

அத்தகைய தெய்வங்களுள் ஒன்று "ஜானஸ்" என்பது. அதற்கு முன்பக்கத்தில் ஒரு தலையும் பின்பக்கத்தில் ஒருதலையுமாக இரண்டு தலைகளிருந்தன. அதனால் அது முன்னும் பார்க்கும், பின்னும் பார்க்கும். அதனுடைய கையில் ஒரு திறவுகோலிருந்தது. இத்தெய்வத்தை வானுலகத்தின் வாயிற்காவலனென்றும் தங்கள் வாசல்களையும் கதவுகளையும் பாதுகாப்பவனென்றும் அவர்கள் நம்பியிருந்தனர். அதனால் தெய்வ அன்புள்ள ஒவ்வொரு உரோமானியனும் எச்செயலைச் செய்யத்தொடங்கினாலும் அன்றி எச்செயலை முடிக்கவேண்டினாலும் முதன்முதலில் ஜானஸையே வணங்கி வேண்டுவன். ஜானசுக்குப் பல இடங்களிலும் கோவில்களிருந்தன. அவைகள், ஓராண்டுக்குப் பன்னிரண்டு மாதங்களிருத்தல் போலப் பன்னிரண்டு கதவுகளையுடையனவாயிருந்தன. நாட்டில் போர்நிகழும் காலங்களிலெல்லாம் அக்கோவில்கள் இரவும் பகலும் அடைக்காமல் திறந்தே வைக்கப்பட்டிருக்கும். அமைதிநிலவுங் காலங்களிலெல்லாம் ஒருநாளும் திறக்கப்பெறாமல் அவை அடைத்தே வைக்கப்பட்டிருக்கும்.

இவ்விருதலைத் தெய்வமாகிய ஜானஸ் (Janus) பெயராலேயே முதல் மாதமாகிய ஜனவரி (January) என்பது அமைந்திருக்கிறது. ஆண்டின் முதல்மாதத்துக்கு முன்னும் பின்னும் பார்க்கக்கூடிய இவ்விருதலைத்

தெய்வத்தின் பெயர் அமைந்தது மிகவும் பொருந்தும். எவ்வாறெனில் ஒவ்வொருவரும் ஆண்டின் தொடக்கத்தில் முன் ஆண்டில் நடந்ததைச் சிந்தித்துப் பின் தொடங்கும் ஆண்டில் நடக்க இருக்கும் செயல்களையும் எண்ணிச் செயல்களைத் துணிதல் வேண்டும் என்பதை இது நினைப்பூட்டத் தகுந்த நிலையிலுள்ளது. இம்மாதம் முப்பத்தொரு நாட்களையுடையது.

ஜானஸ் என்ற தெய்வத்தைப்போலவே "உலூப்பெர்க்கஸ்" என்ற தெய்வத்தையும் உரோமானியர் வழிபட்டு வந்தனர். இத்தெய்வத்தை நோக்கி ஓர் சிறந்த திருவிழா நடைபெற்றது. அவ்விழாவின் பெயர் "பெப்ரூவா" (Februa) என்பது. இவ்விழாவின் பெயராலே "பெப்ரவரி" (February) என்றமாதம் அழைக்கப்பெற்றது. இவ்விழா அழுக்கைப்போக்கிச் செம்மைசெய்யும் விழவாக அவர்களால் கொண்டாடப் பட்டது. அவர்கள் இதை மன அழுக்கைப்போக்கும் திருநாளாகக் கருதினரேனும் இவ்விழாவை அளவுக்குமிஞ்சி உண்பதிலேயே கொண் டாடினர். இக்காலத்திலும் மேல்நாட்டில் இப்பெப்ரவரிமாதக் கடைசியிலே வீடுவாசல்கள் துப்புரவாக்கப்பெறுகின்றன.

ஒருகாலத்தில் இம்மாதமே கடைசிமாதமாக இருந்தது. அதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்குமுன்னர் (கி. மு. 450) இது ஜனவரிக்குமுன் இருந்தது. பின்னர் இது இரண்டாவது மாதமாக ஜனவரிக்குப்பின் வைக்கப்பெற்றது. அதற்குச் சில காலத்தின் பின் "மார்ச்" மாதம் முதல் மாதமாக எண்ணப்பெற்றது. அதனுல் பெப்ரவரிமாதம் மறுபடியும் கடைசி மாதமாயிற்று. அதற்குச் சிலகாலத் தின்பின் "ஜூலியஸ் சீசர்" என்ற அரசர் காலத்திலே பழையபடி "ஜனவரி" முதன்மாதமாயிற்று. அதுமுதல் இம்மாதம் இரண்டாவது மாதமாகவே இருந்துவருகிறது. இம்மாதத்தை முதன்முதல் ஏற்படுத்தியவர் "நூமா" என்பவர் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இம்மாதத்தின் பதினைந்தாவது நாளையிலே "பெப்ரூவா" என்றவிழா கொண்டாடப் பெற்றது. இம்மாதம் இருபத்தெட்டு நாட்களையுடையது. ஆனுல் நான் காண்டுகளுக் கொருமுறை இருபத்தெட்டோடு ஒருநாள் கூட்டப்பெறு கிறது. இதனுல் இது ஒன்றுதான் நிலையற்றமாதமாக இருக்கிறது. ஓர் ஆண்டு முந்நூற்றறுபத்தைந்துநாள் ஆறுமணிகளைக் கொண்டிருத்தலினுலே இவ்ஆறுமணிகளும் நான்காண்டுகளில் ஓர்நாளாகும். அவ் ஒருநாளும் மிகக் குறுகிய அளவையுடைய இம்மாதத்தோடு சேர்க்கப்பெறுகிறது. இதன் விவரமெல்லாம் "மாதங்கள்" என்ற கட்டுரையிற் குறித்தோம்.

உரோமானியரின் போர்க்கடவுள் "மார்ஸ்" என்பது என மேலே குறித்தோம். இது அச்சம், ஓட்டம் என்ற குதிரைகளால் இழுக்கப் பெறும் தேரிலே உலவிச்செல்லும். இது ஒரு பெரியஈட்டியை வீசிக் கொண்டு, இருப்புப்பரிசையை உயரத்தூக்கிக்கொண்டு மேகமண்டிலத்தை அளாவிய தலைக்காப்பணிந்து பார்ப்பவர் மனத்தில் அச்சத்தை உண்டு பண்ணும்.

உரோமானியர் இத்தெய்வத்தைப் போர்த்திறமையோடு இன்னும் பல தன்மைகளும் பொருந்தியதாக எண்ணினர். இது மிகவும் வல்லமை யுடையதாதலால் இதனால் செய்துமுடிக்க முடியாதபொருளே கிடையா தென அவர்கள் நம்பினர். இதனுடைய பீடத்திலே குதிரை, ஆடு, ஒநாய், பறவைகள் இவைகளைப் பலியிட்டு அவர்கள் மழைபொழியும்படி இதை வேண்டிக்கொள்வார்கள். போர்வீரர்கள் சண்டைக்குப்போகும் காலங்களிலே மார்சுக்கு விருப்பமான கோழிக்குஞ்சுகளை ஓர் கூட்டி லடைத்து அக்கூட்டைத் தம்மோடு கொண்டுபோவார்கள். சண்டை தொடங்குமுன் அவர்கள் அக்கூட்டிலே கொஞ்சம் தானியங்களைப் போட்டு அவைகளை உற்று நோக்குவார்கள். அவைகள் அவ்வுணவை ஆவலோடு தின்றால் போர்க்கடவுளுடைய அருள் தம் பக்கமிருக்கிறதனால் தமக்கு வெற்றி கிடைக்குமென்றும், தின்னவில்லையானால் அக்கடவுளுடைய அருள் தமக்கில்லையாதலால் தமக்குத் தீமை வருவது உறுதி யெனவும் எண்ணுவர். இடியும் மின்னலும் இத்தெய்வத்தாலே உண்டாயின என்று அவர்கள் நம்பியிருந்தனர். அவர்கள் ஏதாவது ஒருசெயலைத் தொடங்குமுன் இக்கடவுளிடம் விடைகேட்கப் போவதுண்டு. அக்காலத் தில் அவர்களிருக்கும் இடத்திலுள்ள மரத்திலே மரங்கொத்திப்பறவை வந்து கொத்துதல் வேண்டும். கொத்தினால் அக்கடவுள் தமக்கு நல்ல வாக்குக் கொடுத்ததாகவும் கொத்தவில்லையென்றால் நல்லவாக்குக் கொடுக்க வில்லையென்றும் அவர்கள் எண்ணினர். இவ்வழக்கத்தைத் தமிழ்நாட்டில் சில இடங்களில் சிறுதெய்வ வழிபாட்டினரிடம் இக்காலத்தும் காணலாம். ஆனால் இவர்கள் மரங்கொத்திப்பறவைக்குப் பதிலாகப் பல்லியை வைத் திருக்கின்றனர். தாங்கள் குறித்த பக்கத்தில் பல்லி சத்தமிட்டதென்றால் தங்கள் தெய்வம் நல்வாக்கருளியதாக இவர்கள் நம்புகின்றனர்.

மேலே குறித்த மார்சு "Mars" என்றதெய்வத்தின் பெயராலே மூன்றாவது மாதமாகிய "மார்ச்" March என்பது அழைக்கப்பெறு கிறது. இது முப்பத்தொரு நாட்களையுடையது.

நான்காவது மாதம் "எப்பிரல்" என்பது. இதன் பெயர் கடவுளரின் பெயரால் அல்லது விழாவின் பெயரால் அமைந்த தொன்றன்று. இதுவே இளவேனிற் காலத்தின் தொடக்கம். இம்மாதத்திலே அழிந்துபோன இலைகள் பூக்களெல்லாம் மறுபடியும் தோன்றி எல்லோருடைய மனத்தையும் மகிழச்செய்வன. இவ்வாறு எல்லாப்பொருள்களும் தோன்றுவதையும் மலர்வதையுங்கண்ட உரோமானியர் "ஓம்நியா எபிரெட்" (Omnia Aperit) என்று மகிழ்ந்து கூவினர். இதன் பொருள் "இது எல்லாவற்றையும் தோற்றுவிக்கிறது" என்பது. இதனால் தொடக்கம் என்ற பொருளையுடைய உரோமானியச் சொல்லாகிய "எபிரெட்" (Aperit) என்பதே "எப்பிரல்" (April) என வழங்குவதாயிற்று. இம்மாதம் முப்பது நாட்களையுடையது.

ஐந்தாவது மாதம் "மே" (May) என்பது. இது "மேயா" (Maia) என்ற பெண் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்பெறுவது. அட்லாஸ் என்ற தெய்வத்தின் மகளே மேயா. அட்லாஸ் நாம் வாழும் பூமியைத் தோளிற் சுமந்துகொண்டிருப்பதாக உரோமானியர் எண்ணினர். இவனுக்கு எழு பெண்மக்களிருந்தனர். அவ்வெழுவரும் ஒருமலையில் வாழ்ந்துவந்தனர். அவர்களிற் சிறந்தவளே மேயா. இவளுடைய மகனே "மெர்க்குரி" என்பவன். இவன் விண்ணில் வாழும் தெய்வங்களிடமிருந்து தூதுவனாக அடிக்கடி மண்ணுலகத்துக்கு வருவதாகக் கூறுகின்றனர். தெய்வங்களின் தந்தையாகிய ஜூப்பிட்டர் இந்த எழுபெண்களையும் தூக்கி விண்ணில் ஒரு கூட்டமான விண்மீன்களாக வைத்துவிட்டான். விண்ணிற் காணப்படுகின்ற "பிளேயாடிஸ்" (Pleiades) என்று சொல்லப்படுகின்ற ஆறன் கூட்டமாகிய விண்மீன் தொகுதியே மேயாவும் அவளுடன் பிறந்தவர்களுமாகக் கருதப்படுகிறது. அக்கூட்டத்தில் ஏழாவது விண்மீன் கண்ணுக்குத்தெரிவதில்லை. அதற்குக் காரணம் பின்வருவது. அட்லாசின் ஏழாவது மகள் "சிசிபஸ்" என்ற ஒருவனை மணந்தனள். அவன் எக்காலத்திலும் மலைமேலே ஓர் பெரிய கல்லை ஓயாமல் உருட்டிக்கொண்டிருக்கும்படியாகக் கடவுளரால் வெவ்வுரை வழங்கப்பெற்றபடியால் அவள் கவலையினால் தன்முகத்தை மறைத்துக்கொண்டனள். அதனாலே அவளைக்குறிக்கும் விண்மீன் தெரிவதில்லை. இம் "மே" மாதம் முப்பத்தொரு நாட்களையுடையது.

ஆறுவது மாதம் "ஜூன்" (June) என்பது. இது "ஜூனோ" (Juno) என்ற பெண் தெய்வத்தின் பெயரால் வழங்கப்பெறுவது என்று

சிலர் கூறுகின்றனர். கடவுளரின் தந்தையான ஜூப்பிட்டர் என்பவனின் மனைவியே ஜூனோ. அவள் பேரழகுடையவளெனினும் பொறாமை மிக்குடையாள். பேரிளைரச்சலிடும் மயில்களால் இழுக்கப்பெறும் தேரில் அவள் உலாவிவருவாள். வேறு சிலர் ஜூன் என்ற பெயர் இப்பெண் தெய்வத்தின் பெயரால் அமையவில்லை, ஆனால் இது உரோமானியருள் ஓர் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாகிய "ஜூனியஸ்" (Junius) என்பவன் பெயராலே வழங்கப்பெறுகிறது என்று கூறுகின்றனர். இவன் கொஞ்சமும் அடக்கமாவது நல்லொழுக்கமாவது இல்லாதவன் என்றும் கொடுமை மிக உடையவனென்றும் சொல்லப்படுகிறான். இதனால் இம்மாதம் யார் பெயரால் அமைந்திருந்தாலும் சரி; ஜூனோவும் ஜூனியசும் தீயவர்களே. இம்மாதம் முப்பது நாட்களையுடையது.

ஏழாவது மாதம் "ஜூலை" (July) என்பது. இது உரோமானியப் பேரரசராகிய "ஜூலியஸ் சீசர்" (Julius Caesar) எனபவரது பெயரால் அமைந்தது. இவர் மிகவும் வல்லமையும் அறிவும் திறமையும் உடையவர். இவர்தான் முதன்முதலில் இங்கிலாந்தின்மேற் படையெடுத்துச் சென்று அங்கு வாழ்ந்திருந்த அறிவுநிரம்பா மக்களைவென்று சரியான சட்ட திட்டங்களை யெல்லாம் அங்கே ஏற்படுத்தி ஆண்ட பெரியார். இவர் காலத்தில் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கியிருந்தது. அதைமாற்றிப் பழையபடி ஜனவரி மாதத்தை ஆண்டுத் தொடக்கமாகச் செய்தவர் இவரே. இதனால் ஐந்தாவதாக இருந்த இம்மாதம் ஏழாவதாயிற்று. இம்மாற்றத்தின் முன் இம்மாதத்தின் பெயர் "குவிண்டிலிஸ்" (Quintilis) என்பது. உரோமானிய மொழியாகிய இதன் பொருள் ஐந்தாவது மாதமென்பது. பேரரசராகிய சீசர் இம்மாதத்திலே பிறந்தவர். ஆதலின் இவர் தம்முடைய பெயரை இம்மாதத்துக்கு வைத்தார். மேலும் "ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்" ஆகிய ஆறுமாதங்களும் வேறு காரணங்களால் அமைந்திருப்பதால் எக்காலத்திலும் அவைகளுக்கே அவை அமையும். ஆனால் அடுத்த இம்மாதமோ ஐந்தாவது மாதமென்ற பெயரை யுடையதாக இருந்தது. அதனாலே தமது ஏற்பாட்டின்படி ஏழாவதுமாத மான இதற்குத் தம்முடைய பெயரை இவர் இட்டார். இது முப்பத்தொரு நாட்களையுடையது.

எட்டாவது மாதம் "ஆகஸ்ட்" (August) என்பது. இது இப் பெயரைப் பெறுவதன்முன் "செக்ஸ்டிலிஸ்" (Sextilis) எனவழங்கப் பெற்றது. குவிண்டிலிஸ் என்ற பெயர் ஜூலையென மாற்றப்பட்ட பின்னரும் சிலகாலம்வரை எட்டாவது மாதம் செக்ஸ்டிலிஸ் என்ற பெய

ராலேயே வழங்கப்பெற்றது. உரோமானிய மொழியாகிய செக்ஸ்டிலிஸ் என்பது ஆறுவதுமாதம் எனப்பொருள்படும். ஆதலின் இப்பெயர் இம் மாதம் உண்மையில் எட்டாவது மாதமானபின் இதற்குப் பொருந்தாதாயிற்று. அதனால் சீசரின் பின் அரசாண்ட "ஆகஸ்டஸ்" (Augustus) என்பவருடைய பெயரால் இம்மாதம் வழங்கப்பெறுவதாயிற்று.

ஆகஸ்டஸ் என்பவர் ஜூலியஸ் சீசருடைய மருமகன். இவருடைய பழைய பெயர் "அக்டாவியஸ்" என்பது. இவர் முதலில் "ஆண்டொனி" என்பவரோடும் "லெப்பீடியஸ்" என்பவரோடும் சேர்ந்து அரசாண்டார். கடைசியில் இவரே தனி அரசரானார். இவர் தமது நாட்டு முன்னேற்றத்திற்கு மிகவும் உழைத்தவர். அதனால் குடிகள் இவருடைய பெயரை "உயர்குடிப்பிறப்பினன்" என்று பொருள்படும் "ஆகஸ்டஸ்" என்மாற்றி யழைத்தனர். குடிகளுடைய வேண்டுதலினாலே இவர் தமது பெயரை இம்மாதத்துக்கிட்டனர். வேறொன்றுக்கிடாமல் இம்மாதத்துக்குத் தமது பெயரை இவர் இடுவதற்குக் காரணம் இவர் இம்மாதத்தை மிகவும் சிறப்பாகக் கருதினதே. இதை இவர் சிறப்பாகக் கருதிய காரணம் இம்மாதத்திலே போர்முடித்து வெற்றியுடன் இவர் அரசராயினதே. மேலும் இம்மாதத்திலே இவர் "ஈஜிப்ட்" நாட்டை வென்றார்.

ஆகஸ்டசுடைய ஆளுகைக்காலம் மிகச்சிறந்ததாக வரலாற்றாசிரியரால் பாராட்டப்பெறுகிறது. உரோமாபுரியைப் பேரழகுடையதாக விளங்குமாறு பளிங்குக் கற்களால் கோவில்களையும் மாளிகைகளையும் கட்டுவித்தவர் இவரே. அந்நாட்டில் பற்பல இடங்களிலும் பெரிய நூல் நிலையங்களைத் தோற்றுவித்தவர் இவரே. இவர் காலத்திலே மிகச்சிறந்த உரோமானியப் புலவர்கள் திகழ்ந்தனர். இத்தனைக்கும் மேலாக இவர் காலத்திலே கிறித்தவச்சமயத்தலைவராகிய "ஏசுகிறிஸ்துநாதர்" தோன்றினர்.

இம்மாதம் ஆகஸ்ட் என்ற பெயரை யடைவதற்குமுன் இது முப்பது நாட்களையே உடையதாக இருந்தது. 'தமது முன்னோரான ஜூலியஸ் சீசர் பெயராலான மாதமாகிய ஜூலைக்கு முப்பத்தொரு நாட்களிருக்கின்றன. தம்முடைய பெயராலான மாதத்துக்கு முப்பது நாட்களே உள' என்று ஆகஸ்டஸ் எண்ணுவரோ என எண்ணி உரோமானியர் முப்பத்தொரு நாட்களையுடைய அடுத்த மாதத்திலிருந்து ஒரு நாளையெடுத்து ஆகஸ்டோடு சேர்த்து அதையும் முப்பத்தொரு நாட்களையுடைய மாதமாக்கினர். அதுமுதல் இதற்கடுத்த "செப்டெம்பர்" மாதம் முப்பது நாள் மாதமாயிற்று.

ஒன்பதாவது மாதம் "செப்டெம்பர்" (September) என்பது. இதில் "செப்டம்" (Septem) என்பதன் பொருள் "ஏழு". இது இப்போது ஒன்பதாவது மாதமாக இருந்தாலும் ஒரு காலத்தில் ஏழாவது மாதமாக இருந்தது என்பதைக் காட்டுவதற்கு இதன் பெயரே சான்று பகர்கின்றது. இது பேரரசர் ஆகஸ்டஸ் காலத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் பின் முப்பது நாட்களையுடையதாக இருக்கிறது.

பத்தாவது மாதம் "அக்டோபர்" (October) என்பது. இதன் பெயரிலுள்ள "அக்டோ" என்ற சொல்லின் பொருளால் இது பண்டைக் காலத்து எட்டாவது மாதமாக இருந்தது என அறியலாம். இது முப்பத்தொருநாட்களையுடையது.

பதினோராவது மாதம் "நவம்பர்" (November) என்பது. முன் ஒரு காலத்தில் இது ஒன்பதாவது மாதமாக இருந்ததென்பதை இதன் பெயரிலுள்ள "நவம்" என்ற சொல் காட்டுகிறது. இது முப்பது நாட்களையுடையது.

பன்னிரண்டாவது மாதம் "டிசம்பர்" (December) என்பது. இதன் பெயரிலுள்ள "டிசம்" என்ற சொல் பத்து எனப்பொருள்படும். அதனால் இது ஒருகாலத்தில் பத்தாவது மாதமாக இருந்தது என்ற உண்மை புலனாகிறது. இது முப்பத்தொரு நாட்களையுடையது.

மேலேகண்ட "செப்டெம்", "அக்டோ", "நவம்", "டிசம்" என்ற சொற்கள் இவைகள் குறிக்கும் பொருளுடனே வடமொழியில் "சப்தமம்" என்றும் "அஷ்டமம்" என்றும் "நவமம்" என்றும் "தசமம்" என்றும் அமைந்து கிடப்பது ஆராய்ச்சியாளர் குறித்துணரற்பாற்று. பொதுவாக மக்கள் பழமையை மாற்றுவதில் அச்சமுடையவராகவும் துணிவற்றவர்களாகவுமே இருக்கின்றனர். இதனாலேதான் செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய பெயர்கள் மாதங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமற்றவைகளாயிருந்தாலும் அவைகள் யாதொரு மாறுபாடும் செய்யப்பெறாமல் அப்பழைய பெயர்களாலேயே இன்றும் அழைக்கப் பெறுகின்றன. மேலும் கிழமைகளுக்கு ஏற்பட்ட பெயர்களைப்போலவே மாதங்களின் பெயர்களிற் பல சிறு தெய்வங்களைச்சேர்ந்த பெயர்களாலே அமைந்திருந்தாலும் அவைகளையும் கிறித்தவர்கள் தம்மவைகளாகவே கொண்டு வழங்கிவருகின்றனர். இதுகாறும் ஆராய்ந்தவற்றால் கிறித்தவர்களுடைய கிழமைகள், மாதங்கள் இவைகளுடைய வரலாறு தெளிவாகிறது.

உ

# என்து காதலர்.

திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப்புலவர்,

சலகண்டபுரம்.

## தோழி, தலைவி உரையாடல். (சம்பாஷணை)

தோழி :— அழகிய அன்னப்! யாவர்நுங் காதலர்?

தலைவி :— கிழமைத் தோழீ! கேட்ப தென்னே!
அறியாய் கொல்லோ ஆசை மணாளனை!
நாயகன் பெயரை நங்கைய ருரைப்பரோ?

தோழி :— நீயுங் கூறாய் நானும் அறியேன்
என்றாற் பின்னர் எவர்தாம் கூறுவர்?

தலைவி :— ஒருபெய ரன்றவர்க் குரைப்பதெல் லாம்பெயர்.
ஊரொன் றில்லை யுலகெலாம் அவரூர்.
அவரே என்னை அணைந்த மணாளர்.

தோழி :— ஊரும் பேரும் ஒன்றுமில் லாரைச்
சேரநீ துணிந்தது சிறிமையிற் சிறுமையே!

தலைவி :— ஒரூர் ஓர்பெயர் உள்ளோர் சிறியரே
பலபேர் பலவூர் படைத்தோர் பெரியரே.
அதனால் எனக்கும் அளவில் பெருமையே.

தோழி :— அப்படி யாயின் அவரை உலகினர்
எப்பெயர் ஊர்கொண் டிசைப்பரர் கூறுதி.

தலைவி :— ஐம்பெரும் பூதமோ டாதவன் மதியுயிர்
என்பவு மானஇவ் வெட்டுமெவ ரிருப்பிடம்
சாங்கியர் புத்தர் சமணர் மீமாம்சர்
பாங்குறும் தர்க்கர் பாற்கரர் களாமுகர்
வைணவர் மாயா வாதர்பல சைவர்

பிறருங் கூறும் பேரெலா முடையார்
சிவமெனும் பெயராற் றெரிந்தோர் அழைப்பார்
பேரொன் றிடுதற்குப் பேற்றோ ரில்லை
ஆதலால் அவரைநாம் அழைப்பதெல் லாம்பெயர்.

தோழி:— நன்றுநன் றவரைநின் னாயக னாக
நேர்ந்தோர் பிறரோ! நீகொண் டனையோ?
அவரே யுனைவந் தணைந்தன ரோசொல்?

தலைவி:— பிறர்கொடுப் பதுவும் பிழைபடும் நானே
அவரை வலிய அணைதலு மியல்பன்று
அதனால், தானே வந்தெனைத் தனிமையிற் கலந்தனர்.

தோழி:— நீயோ சிறந்தனை நின்னா யகன்போல்
ஆயினும் அவரைஇன் னாரென் றறியாய்
குலமொடு கோத்திரம் கொள்கையும் நோக்காய்
பலர்முன் மணக்கும் பாவைய ரியல்பொரீஇக்
கள்ளப் புணர்ச்சியிற் கலப்பது தகுமோ?
பிறழ்ந்தனை நெறிமுறை பேதாய் என்னே!

தலைவி:— அறியாய்! சிறியை! அளியை! எளியை!
* குலமவர்க் கெங்கும் †கோத்திரம் மனைமனை
கள்ளப் புணர்ச்சியே காதலின் காதல்
என்கண் ணுள ரியல்பும் அஃதே
இருமன மொத்ததே திருமண மன்றோ!
பலர்முனம் மணப்பது பாங்கறி யார்க்கே
பழிப்பிலை என்பது பாங்கிநீ யுணர்தி.

தோழி:—நல்லாய் நின்னுரை நகைவிளைக் கின்றது
எதனாற் காதல் அவர்பாற் கொண்டனை?
அவரினும் மிக்க ஆண்க ளிலரோ?
பிறிதோ ரழகன்மேற் பித்துறாய் கொல்லோ?
பொருள்நனி யுடையரோ? அருள்மிகுந் தவரோ?
பட்டும் பணியும் பரிந்தளிப் பாரோ?
வேறோர் பெண்ணையும் வேட்டில ரேயோ?

---

* குலம்—கோவில்; அவர்க்கு எங்குங் கோவிலுண்டு.
† கோத்திரம்—மலை. மனை மனை பெண்சாதி வீடு; உமையவள் மலைமகளாதல்பற்றி.

பின்னும் பற்பல பெண்களை மணப்பரோ?
மாமன் மாமியார் வரிசைசெய் வாரோ?
பலவூ ருடையவன் பலரை மணந்தனைப்
பாரா விடின்நீ பரிவா யலையோ?
ஆரா யாதுநீ யாற்றிய செய்தி
நகுதக் கன்றே நாடுங் காலை.

தலைவி :—வாய்வந்த சொல்லல் மாண்பன் றனக்கே
கூறுவன் கேட்டபின் குறையறிந் தமைதி!
நீதான், வினவிய கேள்விகள் பலவே அவற்றுள்
ஒரோவொன் றம்பல உரைபெருக் குனவே
எத்தே வரினும் இவர்பெருந் தேவர்
இவரினும் உயர்ந்தோ ரில்லையா தலினால்
மகாதே வப்பேர் வழங்கிட லானும்
தாண்பிற வாதான் தவிர்த்த லல்லது
பிறக்கும் பிறராற் பிறவி தீர்ந்திடப்
படாமை யானும் பற்றவற் குற்றேன்
காமநோய்க் கஞ்சுவேன் காமனைக் காய்ந்த
கண்ணுத லடிக்கே காதல்கூர்ந் தேனால்
கூற்றுவன் வருமெனக் கொட்புற் றஞ்சுவேன்
அவனை யுதைத்த அடியிணைச் சார்ந்தேன்
செம்பொருள் விளக்கி மையல் தீர்க்கக்
கல்லா லமர்ந்த கடவுளை நச்சினேன்
ஆலந் தானுண் டமுதந் தேவர்க்
கீந்தவரு ளாள னென்பது கேட்டுப்
பாவியேற் கருளும் பாங்கனென் றுவந்தேன்
சிறுபிறை சூடிச் செய்பிழை பொறுத்தோன்
என்குற் றமெலா மெண்ணு தருள்வனென்
றன்னவற் கென்னுளம் ஆர்வமீக் கூர்ந்தது
பண்டோ ரடியவர்க் காகமண் சுமந்து
பிரம்படி கொண்ட பிரானெனக் கேட்டபின்
என்னையும் வருந்தி யேற்பனென் றடைந்தேன்
அதனால், அவனினு மிக்கோர் யாரு மில்லை
உயர்வற உயர்ந்தோற் கொருப்பட் டுற்றபின்
பிறர்தமைப் பொருட்டாய்ப் பேணேன் தெளிதி

தங்கமா மலையும் தன்கைப் படுமால்
வெள்ளிமா மலையவர் மேவிய விருக்கையே
மணிச்சபை கண்டாய் மன்னன் நடிப்பது
ஒருபொரு ளாக உயர்பொருள் அவனே
அவனே பொருளா மலதில பொருளே
பொருளாற் குறைவும் புகலற் கிலதே!
* பணியே பணியாம் பரமனைத் துதிக்கும்
பணியே பணியாய்ப் பரிக்கவு மிசைந்தேன்
† ஆசைப் பட்டே யவனுடை யாதலால்
ஆசைப் பட்டே னவனடிக் காளாய்
வேறுசில பெண்களை வேட்டன னேனும்
தலைமிசை யிருந்தாள் தைய லொருத்தி
உடலிற் பாதி யுகந்தாள் மற்றவள்
எனக்கிடம் கொடுத்தன ரிவர்கள்எம் பெருமான்
சேவடி விடுத்தனர் சேர்கென எனக்கே!
எத்தனை கன்னியர் கற்பழித் தாலும்
என்கற் பும்அவற் கெஞ்சிநீங் கியபின்
அவனுட னல்லது அடையே னின்பம்
பற்பல வுருவப் பாங்க னாதலின்
எளியனேற் கின்பம் ஈவனோ ருருவால்
மாமன் மாமியார் வாஞ்சையெற் கில்லை
தாய்தந் தையிலாத் தலைவனை மணந்தேன்
ஆராய்ந் தேயவன் அன்புதலைப் பட்டேன்
என்னை நகுவோர் இரக்க மிலாரே
அவரையும் நகுவர் அறிவின்மேம் படுநரே

தோழி:— அன்னாய் நன்றுநின் § ஆகூழ் சிறந்ததே!
முதன்முத லவரைத் தலைப்பெய்த தெங்ஙனம்?

தலைவி:— வெள்கா துரைக்க விருப்ப மூட்டினை!
கன்னியாம் பருவத் தென்னோ டன்ன
சிறுமியர்க் கூட்டிச் சிற்றில் கோலியும்
மணற்சோ றாக்கி மற்றவர்க் கருத்தியும்

* பணியேபணி-பாம்பே நகைகள். † ஆசை-திக்கு. திக்குகளை ஆடை யாகவுடையவன் (திகம்பரன்). § ஆகூழ்—நல்லவிதி.

பந்தும் பாவையும் பயின்றுவிளை யாடியும்
கழங்கோ டம்மனை கைக்கொண் டெறிந்தும்
ஊசலி லாடியும் உவப்புற் றேனைத்
தனிமையிற் கரந்து தலைப்பட்டு நோக்கிப்
புல்லியேன் ஆடலிற் புகுவான் போல
வல்லிநீ யுன்னை மறந்தனை கொல்லோ
இழைத்த சிற்றில் எங்கே என்னா
அழித்தனன் காலால் ஆங்குப்பெய் தமைத்த
மணலைச் சோறென மதித்ததே தென்றான்
பக்குவ முற்றும்நீ பார்ப்போர் நகைக்கப்
பெண்களோ டாடல் பேதமை யாமே
ஆணா மென்னோ டாடிற் றோன்றும்
காணா வின்பங் கண்டுகொள் ளென்றான்
இப்பே ரின்பம் இதன்முன் அறிந்திலாய்
பிறந்தனை இந்தப் பேரின்பம் நுகரவே
மறந்தனை யென்றால் மாண்பிலை யென்றான்
அழித்தனன் சிற்றிலென் றாட்டெலாஞ் சிதைத்தனன்
என்னே இவன்யார் எனைவிட் டகலான்
பருகுவான் போலப் பல்கால் நோக்குவன்
என்றுநான் எண்ணிய எண்ணினும் வல்விரைந்து
கைதொட் டனனென் கற்புங் கழன்றது
ஆடன்மேற் சிந்தை யகன்றே நீத்தது
மெய்ம்மயிர் சிலிர்ப்ப விரகமீக் கூர்ந்தது
அமிழ்து சுவைத்தன்ன ஆர்வம் பூத்தது
தன்னையே கண்டேன் என்னையான் காணேன்
அச்சமும் நாணமும் அக்கணம் அகன்றன
மற்றொரு காலெனை மலர்க்கையாற் றொடுவனோ
இன்ப மெனுஞ்சொற் கீதோ பொருள்எனாக்
காதற் கேள்வனைக் கடைக்கணா னோக்கிக்
குறிப்புணர் பார்வை வெளிப்படுத் தேனால்
உள்ளம் புகுந்தென் னுணர்வறிந் தான்போற்
றானுமென் னாணம் தாக்குற் றழிய
நோக்கினன் நோக்கிய நோக்கிற் கென்னோ
கைம்மா றறியேன் கவலையற் றின்பம்
பொங்கிப் பொழியப் புதுச்சுவை நுகர்ந்தேன்.

பின்னர்ச் செய்தி பேசுதற் கில்லை
இவ்வுல கத்துமற் றெவ்வெவ் வுலகினும்
பெறவொணு வின்பம் பெறவெற் களித்தனன்
இன்பமே யுருவாம் இறைவனைக் கூடி
இன்பமே யானேன் என்னையும் மறந்தேன்
அந்நாண் முதலா யிந்நாள் காறும்
நான்விரும் பியவந் நாளில் வாரார்
தானே விரும்பித் தலைப்பெய்ய வருவார்
அப்போழ்து, ஐம்புலக் கதவம் அடைத்துச் சாத்தி
உள்ளுறை வோரில் உள்ளம் நீங்க
மற்றையோ ரெல்லாம் மறைவாய் அகல்வார்
அன்னவன் தாளில் அசைந்துகண் படுப்பேன்
தாயோ தந்தையோ தமரோ அறியார்
அவர்களெனக் காற்றிய அளப்பிலா நன்றிகள்
தலைவன் தாள்தரும் தனியின் பத்தின்
அணுப்பல கூறிட் டதுவும்நே ராகா
ஆதலா லெமரை ஆதரிக் கில்லேன்
உடலோ டுயிரும் உணர்வுமுற் றொளிப்ப
அவனே நானென் பதுவும் மறப்ப
அமிழ்தி னியன்ற யாக்கையே னாகித்
தெவிட்டா வின்பச் செழுங்கடன் மூழ்கிக்
கரைகா ணாது களிப்புற் றிடுவேன்
அவனே என்கண் அவனென் னின்னுயிர்
அவனே கொழுநன் அவனே யிறைவன்
அவனே தோழன் அவனே தாய்தமர்
எந்நா ளும்மெனை எய்துதற் கிடம்பார்த்
திருந்துபன் னாட்சென் றிப்போழ்து கிடைத்த
அருளை யல்லால் வியவேன் அளியேன்
கொன்னே கழிந்தநாள் குற்றமுடைத் தன்றே
மன்னு வென்னை மறவேல் நீங்கேல்
என்பெருங் குற்றம் எண்ணுது குறிக்கொள்
நீயே களைகண் நீத்தேன் பிறரை
உன்போ லின்பம் உதவுநர் இல்லைஎற்
கென்போற் பலருனக் கேக்கற் றிருப்பர்
ஆதலா லுன்பால வாகலிம் தவறுகள்

கன்னி நீக்கிக் கலந்தனை யதனால்
வேணீ ருண்ட குடையோ ரன்ன
என்னை யிகழா தென்றுகொள் ளென்றே
கொற்றவன் றாண்மலர் பற்றிநின் றேனைத்
தாங்கி நின்றுநீ தயங்கேல் வாழி
உன்னுளே நிற்பே னொருபோது மகலேன்
பிறவிக டொறுமுனைப் பின்பற்று கின்றேன்
செய்பிழை சிறிதும் தேரேன் நின்பால்
அன்பொன்றும் வேண்டில் அடிக்கடி தோன்றுவன்
நீயெனை மறப்பினும் நினைப்பூட்டி யணைவேன்
எனப்பல கூறி எனக்குமயல் பூட்டினன்
அன்பினி லின்பம் அவிழ்த்துக் காட்டினன்
துன்ப மெல்லாந் தொலைத்திடற் குரியோய்!
எனையக லாமே யிருப்பா யெனிலென்
பொல்லாங் குகளைப் போக்குவை யென்றேன்
எண்ணம் எழுமிடத் திருப்பே னாதலாற்
பொக்கவன் புடைமை பொள்ளென வறிவேண்
ஆயினு மோர்கால் அன்பனென் றென்னை
நாடுவை யென்றே நான்பொறுப் பேனெனச்
சொன்னான் சொல்லாற் சுட்டருஞ் சோதி
வேண்டுவ கேட்டி யீவே னென்றனன்
பிறவாமை வேண்டும் பிறர்போ லாது
பிறக்கவே வேண்டும் பெருமான் பிறவியில்
நின்றனை மறவா நேயம்வந் தமையக்
கண்கணீர் பெய்யச் கைம்மலர் குவிய
மயிர்ப்புள குதிப்ப வாய்ச்சொற் குழற
நாத்தழு தழுப்ப நடுங்கமெய்ம் முழுதும்
அரனே என்னை யாண்ட கோவே
பரனே எளியேன் பைதனோய் தீர்க்கும்
மருந்தே கைலை மலைகிழ வோனே
விருந்தே இன்ப விண்ணே என்று
பாடியும் ஆடியும் பல்காற் குதித்தும்
நெஞ்ச நெக்குருக நீயெனைப் பணிப்பின்
அஃதே சாலும் அடியனேற் கென்னக்
கேட்டன னாகக் கிளிமொழி! யவ்வா

ருகுக என்றென் னகத்தே புக்கனன்
அன்பர்பா லன்பு விளைந்தலை தருஉம்
என்பணி பூண்ட வெம்பெரு மானே.

தோழி :— பிறவான் இறவான் பிரான்நினக் காயின்
மறவா வன்பவற் குன்பான் மன்னின்
கிழவனும் கிழத்தியு மாவ தல்லது
குமரனுங் குமரியு மாகீர் கொல்லோ ?

தலைவி :— நாணுட் சிறக்கும்நல் லின்ப முதிராது
துய்க்குங் காலை நான்சிறு குமரியே
மூப்பா னல்லன் முழுமுத லென்றும்
இதனால் அவனு மென்றுங் குமரனே.

தோழி :— உலவா வொருவனை யுடைமை யதனால்
நீடு வாழ்கநின் நிறைமங் கலநாண்
பாடல் சான்ற பார்மிசை மாதோ!

(மற்றொருமுறை கூடி உரையாடுதும் எனத் தலைவியுந் தோழியும் செல்கின்றனர்.) (தொடரும்)

---

# இன்ப வாழ்க்கை

அல்லது

## வாழ்க்கையின் சிக்கறுக்கும் வழி.

---

திரு. ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

---

உலகத்து மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் விரும்புவது இன்பமாக வாழ்வதையே. அங்ஙனம் இன்பமாக வாழ்வதற்கு வாழ்க்கையிலே இடையூறுகள் உண்டாகாமல் இருத்தல் வேண்டும். இடையூறுகளாகிய சிக்கல்கள் அற்ற வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாம்.

இன்ப வாழ்க்கையினை உடையவர் இம்மையிலே பலராலும் நன்கு மதிக்கப்பெறுவர்; மறுமையிலே ஆண்டவனது திருவருளுக்கும் உரியவராவர். இந்த இரண்டும் மிகப் பெரும் பயன்களல்லவா? இத்தகைய மேலான நன்மைகளைத் தரக்கூடிய இன்பவாழ்க்கையை அடைவதற்கு ஒரு வழி இருந்தே ஆகவேண்டும். அந்தவழியே வாழ்க்கையின் சிக்கறுக்கும் வழியாகும்.

ஆக்ஸ்பர்ட் என்பது இங்கிலாந்திலுள்ள ஒரு நகரம். அங்கே ஒரு பல்கலைக்கழகம் (சர்வகலாசாலை) இருக்கின்றது. அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது பாலியல் என்னும் கல்லூரி (கலாசாலை). ஒரு காலத்தில் அந்தக் கலாசாலையின் தலைமைப் பேராசிரியராக சர். பெஞ்சமின் ஜோவெட் என்னும் துரைமகனுர் இருந்தார். அவர் பெரிதும் கற்றவர்; நல்லொழுக்கங்கள் நிறைந்தவர்; மாணுக்கர்களிடத்திலே பேரன்புடன் பழகும் இயல்பினர்; மாணுக்கர்களது கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியன வளரவேண்டி ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறப்பாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதை வழக்கமாகக் கொண்டவர்; பல அரிய பொருள்களைப்பற்றி வேண்டிய இடங்களில் விளக்கமாக விரித்தும் சுருக்கியும் கூறும் ஆற்றல் மிக்கவர். இவற்ருல் மாணுக்கர்கள் இவரிடத்திலே பெரிதும் மரியாதையுடன் நடந்துகொள்ளலாயினர். இவர் கூறும் ஒவ்வொரு சொல்லையும் பொன்னேபோற் போற்றி இன்புற்றவர் பலர்.

இங்ஙனமாக, இவர் கூறுவனவற்றைப் பேரன்புடனும், ஆர்வத்துடனும் கேட்டுவந்தான் ஒரு நன்மாணுக்கன். அவற்ருல் அவனுக்குப் பல ஐயப்பாடுகள் நீங்கலாயின. என்ருலும், சிற்சில ஐயப்பாடுகள் நீங்காமலிருந்தன. இங்கிலையிலே அவனது கலாசாலைப் படிப்பு முடிந்தது. தகுதிச்சீட்டைப் பெற்று வீட்டிற்கு வரவேண்டிய காலம்வந்தது. என்ன செய்வான்! தனக்குற்ற ஐயப்பாடுகளைப் போக்கிக்கொள்ளாமல் வீட்டிற்குப்போக அவன் விரும்பவில்லை. தனக்கு உண்டாகிய ஐயப்பாடுகளை நீக்கத்தக்கவர் தனது பேராசிரியரே என்பதுதான் அவனது கருத்து.

உடனே, அவன் தனது தலைமைப் பேராசிரியராகிய அப்பெரியாரிடம் சென்ருன்; வணங்கினன்; "மாண்புமிக்குடைய ஐயன்மீர், அடியேன் தங்களிடத்தில் பல ஆண்டுகளாகக் கற்றவன்; தங்களுடைய உபதேச மொழிகளைக் கவனமாய்க்கேட்டவன்; அவற்றை அங்ஙனமே கைக்கொள்ளவேண்டும் என்பதிலே பெரு விருப்பம் உள்ளவன்; அத்துறையிலே பழகியும் வருபவன்; பல ஐயப்பாடுகளைப் போக்கிக்கொண்டவன். என்ருலும், அவற்றை முற்றிலும் அப்படியே நினைப்பில் வைத்துக்

கொள்ளக்கூடவில்லை. சிற்சில ஐயப்பாடுகளும் நீங்காமலிருக்கின்றன. ஆதலின், தேவரீர் தயைசெய்து அடியேற்கு யாண்டும் நிலைத்து நின்று வாழ்க்கையின் சிக்கறுக்கும் வழியாகச் சிலவற்றைக் கூறியருளல்வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

வேண்டலும், அப்பேராசிரியர் "நன்மாணவ! என்னிடத்திலே பலர் கற்றிருக்கின்றனர். உன்னையொத்து அடக்கமும் அறிவும் வாய்ந்தவர் சிலரே. நீயோ விடயங்களை நன்றாய் அறிந்து கொண்டவன். ஆராய்ந்து பார்ப்பதிலும் திறமை வாய்ந்தவன். அப்படியிருந்தும் இன்னும் நீ அறிந்துகொள்ள விரும்புகின்றாய்! இந்த விருப்பமே மக்களுக்கு வேண்டுவது. 'கற்றது கைம்மண்ணளவு. கல்லாதது உலகளவு.' நான் என்னுடைய வாழ்க்கையிலே கைக்கொண்டு நடக்கவேண்டிச் சில முடிவுகளை வரையறுத்துக்கொண்டிருக்கிறேன். அம்முடிபுகள் உன்னுடைய ஐயப்பாடுகளையும் நீக்கக் கூடியன என்பது எனது கருத்து. பொதுவாக மக்களது வாழ்க்கைக்கு யாண்டும் நிலைத்து நின்று துணைசெய்யக் கூடியனவே அம்முடிபுகள் என்பதும் எனது உறுதியான கொள்கை. ஆதலின், உனது வினாவுக்கு விடையாக அந்த முடிபுகளையே உனக்குக் கைக்கொள்ளும் பொருட்டுக் கூறுவேன். "Never tell—சொல்லாதே. Never fear—அஞ்சாதே. Never fret—கன்றாதே. Never fail—தவறாதே. Never disappoint—மாற்றாதே. Never spare—தட்டாதே. Never quarrel—வெகுளாதே" என்பனவே அம்முடிபுகள். இந்த எழுமுடிபுகளையும் இனிது ஆராய்ச்சியுடன் கைக்கொள்பவர் தமது வாழ்க்கையின் சிக்கல்களை அறுத்து இன்புறுவர் என்பது எனது நம்பிக்கை. இவற்றைக் கருத்தோடு உணர்ந்து கைக்கொண்டு இன்புறுவாயாக" என்று கூறியருளினார்.

கேட்ட அம்மாணுக்கன் தனது பேராசிரியரை வணங்கினான்; பிரியாவிடைபெற்று வீட்டிற்குப் போனான்; ஆசிரியர்கூறிய அறவுரைகளை ஆழ்ந்து ஆராயலுற்றான்; பல அருமைப்பாடுகளைக் கண்டான்; ஐயப்பாடுகளினின்றும் நீங்கினான்; அவற்றையே தனது வாழ்க்கைக்குச் சிறந்த மேல்வரிச் சட்டமாக அமைத்துக் கொண்டான்; இன்புற்றான். அவன் கண்டன :—

## சொல்லாதே—Never tell.

மறைக்கத்தக்க செய்திகளையும், பிறர் அறிந்தால் நன்மை நீங்கித் தீமை விளையக்கூடிய செய்திகளையும் சொல்லாதே. அறிவுடையோர்

குழுமியிருக்கும் சபையிலே முதன் முதலிலே சொல்லாதே. பிறர் விரும்பாதபொழுது சொல்லாதே. ஆராயாமற் சொல்லாதே. பயனற்ற சொற்களைச் சொல்லாதே. பிறர்க்குத் துன்பத்தை விளைவிக்கும் சொற்களைச் சொல்லாதே. ஆனால், 'சனசமூகத்திற்கும் நாட்டிற்கும் தவறாது நன்மையைச் செய்யக்கூடியது' என உண்மையாக நம்பப்பட்ட செய்தியை ஒளிக்காமற் சொல்; உறுதியாகச் சொல்; பலர் முன்னிலையிலும் சொல். அயலார் எவ்வளவு அறிவற்றவராகக் காணப்பட்டாலும் அவர் கூறுவனவற்றைக்கேள்; இழிந்தனவாயிருப்பினுங் கேள்; பயனற்றனவாயிருப்பினும் கேள்; வெறுப்புக் கொள்ளாது கேள்; விருப்புடன் கேள்.

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

## அஞ்சாதே—Never fear.

உண்மைநெறி ஒழுகும் மாந்தர் எவரும் எதன் பொருட்டும் அஞ்ச வேண்டியதில்லை. எவரிடத்திலும் அஞ்ச வேண்டியதில்லை. எக்காலத்திலும் அஞ்ச வேண்டியதில்லை. அச்சம், தன்னை உடையவனைத் தனக்கும் பிறர்க்கும் பயன்படாதவனாகச் செய்துவிடும்; தாழ்வினை அடைவிக்கும். அது கோழைத் தனமுமாகும். கோழைத் தன்மை வாய்ந்தவன் எதனையும் தன்னலத்திற்கே பயன்படுத்திக் கொள்ள முயல்வான்; பிறரையும் தந் நலக்காரராகவே எண்ணுவான்; "பிறருக்கு உதவி செய்தல்" என்ற பேச்சைக்கேட்டாலும் அஞ்சி உடல் நடுங்குவான். அவன் இருக்கும் நாடும் இன்புறமாட்டாது. உண்மை இருக்கும் இடத்தில் அச்சம் உடன் இருக்க அஞ்சும். ஆதலின், ஒவ்வொருவரும் உண்மைநெறி ஒழுகி அச்சமின்றி நிமிர்ந்து வீர புருடராய் வாழவேண்டும். "அஞ்சவருவதும் இல்லை அஞ்சுவது யாதொன்றும் இல்லை." அன்றியும், உண்மைக்கு மாறாக நடப்பதில் அஞ்சு. தீச்செயல்களைப் புரிவதில் அஞ்சு. விதிவிலக்குகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் அஞ்சு. இந்த அச்சம் அஞ்சாமையே.

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்."

## கன்றதே—Never fret.

ஒவ்வொருவரும் உலக வாழ்க்கையில் நல்லனவாகவும் தீயனவாகவும் பலவற்றைச் சந்தித்தல் கூடும். ஆராய்ந்து பார்க்கத்தீயனவே பெரும் பான்மையனவாக இருக்கும். அங்ஙனமே பலவற்றைச் செய்யவும் வேண்டி வரும். அவற்றில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் இருப்பதே இன்ப முறுதற்கு உற்றவழியாவது. தவறி நடந்த ஒரு காரியத்தையே எண்ணி எண்ணி மனம் கரைதல் கூடாது. சென்றவற்றை உன்னிக் கன்றுவது நன்றன்று. அது, மனத்தைப் புண்படுத்தி இயற்கையான ஊக்கத்தினை யும் உயர்வினையும் கெடுத்துவிடும். ஆசைக்கு அடிமைப்பட்டவன் யாண் டும் மீளா அடிமையாகிவிடுவான். ஆசையை அடிமைப்படுத்திக் கொண் டவன் ஆண்டானாகித் திகழ்வான். 'போனது போகட்டும் மனமே, இனியாகிலும் புத்தியாய்ப் பிழைதினமே' என்பது மனத்தைத் திருத்த முயலுவோர் கைக்கொள்ளக்கூறிய பழமொழி. எங்கே ஊக்கம் இருக் கின்றதோ அங்கே கன்றுதல் என்னும் இழிகுணம் இருக்கமாட்டாது. உயர்வுற விழையவேண்டியதே மக்களாவார் குறிக்கோளாகும். மனம் உடைந்துபோமாறு கன்றுதல் மக்களாவார் செய்யத்தக்கதன்று.

“உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.”

“ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.”

“உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.”

## தவறதே—Never fail.

வெற்றி, தோல்விகளை எதிர்பார்ப்பது வினைசெய்வோர் கடமையன்று. உரியகாரியங்களைச் செய்யவேண்டியதே அவர்தம் கடமையாவது. பயன் பெறுவதும், பெறுமற்போவதும் மனிதச் செயல்களல்ல. செய்யவேண்டிய முறையிலே சிறிதும் தவறுதலின்றிச் செய்து நிறைவேற்ற வேண்டியதே மனிதச்செயல். ஒருவினை இனிது நிறைவேறவில்லை என்பதே குறை யாகக் கருதப்படும். பயன்பெறாதது குறையாகக் கருதப்படமாட்டாது; பழிப்புக்கிடமாகாது. முயற்சி யின்மையே பழிப்பைத் தருவது. தவறுதல் முயற்சியின் குறைவால் அல்லது இன்மையால் உண்டாவதே. 'முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்.' 'முயலுக மேலும் முயலுக முயலுக.'

என்பன தவரு தவர்கள் கூறும் மகாமந்திரங்கள். ஒவ்வொருவரும் தொடுத்த வினையை இனிது நிறைவேற்ற முயலுவதிலே தவறுதல் கூடாது.

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி."

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

"வினைவலியுந் தன்வலியும் மாற்ருன் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்."

## மாற்றதே--Never disappoint.

எவரும் தமது இயற்கை நிலைமையினின்றும் மாறுபடலாகாது. இயற்கை 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' வன்மை வாய்ந்தது. அங்ஙனமே, பிறர் தம்மை மதிக்குமாறு வைத்துக்கொண்டிருக்கும் அந்த நிலைமையையும் மாற்றிக்கொள்ளலாகாது. எக்காரணங் கொண்டும் தாம் கைக்கொண்டொழுகும் நற்குண நற்செய்கைகளிலிருந்தும், நற்பழக்க வழக்கங்களிலிருந்தும் தம்மை மாற்றிக் கொள்ளலாகாது. தமது நிலைமையினின்றும் மாறுவது உடனுறையும் ஐம்பெரும் பூதங்களால் நகுதற்பொருட்டாகி இகழப்படும்; மிகச்சிறந்த தோற்றத்தையும் அழித்துவிடும்; அறிந்து செய்யும் குற்றமாகவும் அஃது அறிவுடையோரால் கருதப்படும்.

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று"

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

## தட்டாதே—Never spare.

ஒருகாரியம் செய்து நிறைவேற்றக் கூடியதாக இருக்கலாம். அதைக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு பிறராலே கேட்டுக்கொள்ளப்படலாம். அஃது இன்றியமையாததாக இருந்தால், போதிய காலம் கொடுக்கப்படாமல் குறுகிய காலத்திலே நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டாலும் தட்டலாகாது. உடற்றுன்பம், மனத்துன்பங்களுக்கு உட்பட வேண்டியதா யிருந்தாலும் தட்டலாகாது. தாங்கொணு வேறுபல இடையூறுகளை உண்டுபண்ணுவதா யிருந்தாலும் தட்டலாகாது. அக்கேட்டுக் கொண்டவர் இன்புறும் பொருட்டும், ஆற்றலை வெளிப்படுத்தும் பொருட்டும் அச்

காரியத்திலே கண்ணுயிருந்து நிறைவேற்றவேண்டும். 'நாம் செய்யா விட்டால் என்ன? வேறு ஒருவர் செய்து விடுகிருர்' என்று அலட்சியம் பண்ணித் தட்டலாகாது. சுகத்தைவேண்டிப் பல சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டலாகாது. உடற்றுன்பம், பொருள் நஷ்டம் முதலிய வற்றைப் பின்னர்ச் சீர்திருத்திக் கொள்ளலாம்; காலம் போய் விடும்; காரியம் வாாது. ஆதலின், இயன்றதொரு காரியத்தை நிறைவேற்றுவதில் தடை சொல்லலாகாது.

> "செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
> செய்யாமை யானுங் கெடும்."

> "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
> ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்."

## வெகுளாதே—Never quarrel

பிறருடைய மனம், மொழி, செயல் ஆதியவற்றுல் ஒருவருடைய உடல், பொருள், ஆவிகளுக்குக் கஷ்டநஷ்டங்கள் உண்டாகலாம். அவற்றின் பொருட்டுத் துன்புற்றவர் துன்பிழைத்தோர்க்குத் திரும்பித் தீமைகளைச் செய்யலாகாது; கோபங் கொள்ளலாகாது. ஒருவரைப் பிறகு பார்த்துப்பேசுவதற்குக் கூசுமாறு எவரும் எத்தனைக் கோபச்செயல்களையும் செய்துவிடலாகாது. அது பாபங்களுக்கெல்லாம் தாய் தந்தையாவது; சேர்ந்தாரைக் கொல்வது. ஒருவரோடொருவர் உறவாடி இன்புறுவதே மாந்தர்கடன். அந்த இன்பம் கோபங்கொள்பவரிடம் உண்டாகமாட்டாது. ஆதலின், எவர்க்கும் எதன்பொருட்டும் தீங்கு செய்யலாது. நஷ்டத்தை உண்டுபண்ணலாகாது. அங்ஙனமே எவரிடத்தும் கோபங்கொள்ளலாகாது. "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்றன்னையே கொல்லும் சினம்."

இங்குக் கூறியன மாணவர்களின் மனத்திலே இனிது பதிவுற்று யாண்டும் நின்று பயன்படுவது மேலாகும்.

> சொல்லாதே அஞ்சாதே துன்பிலுளங் கன்ருதே
> தள்ளாதிஃ தென்று தவருதே—வல்லனபின்
> மாற்ருதே தட்டாதே மண்டி வெகுளாதே
> ஆற்றலிடை யூறில் லதர்.

உ

# ஏழைமக்களை எவ்வழி உயர்த்தலாம்?

திருவாளர், ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" — தாயுமானவர்.

இத்தலைத் தொடர் 'ஏழை மக்களாவார் யாவர்? உயர்த்துவது யாது? அங்ஙனம் உயர்த்துதற்கு உரியவர் யாவர்? ஏன் உயர்த்துதல் வேண்டும்? உயர்த்துவதற்கு உற்ற வழிகள் யாவை? உயர்த்தாவிடில் வரும் இழுக்கு என்னை? உயர்த்துவதால் வரும் பயன் என்னை? என்ற பல பிரிவுகளாக விரித்து உரைக்கப்படலாம். இதுவும் அம்முறையிலே இயன்ற அளவு சுருக்கிக் கூறப்படுகிறது.

உலகத்துள்ள மக்கட்பரப்பினரைப் பல பிரிவினராகப் பிரிக்கலாம். அப்பிரிவு குணம்பற்றியும் செயல்பற்றியும் பலதிறப்படும். ஆனால், இங்குக் கூறப்படும் பிரிவு நிலைமையைப் பற்றியதாம். இம்முறையில் உலக மாந்தர் மூன்றுவகையினராகப் பிரிக்கப்படுவர். ஒருவகையினர் ஒரு வேலையையும் செய்யாது தமக்கான வேலைகள் அனைத்தையும் பிறரைக் கொண்டு செய்வித்து அதன் பயனை உண்டு, உடுத்து, உயிர்வாழ்ந்திருப்பவர். பிறிதொரு வகையினர் தமது உயிர்வாழ்க்கைக் கெனத் தாமாகவே எதனையும் செய்துகொள்ள இயலாது, உறுப்பிழத்தல், நோய்வாய்ப்படல், முதுமை எய்தல் முதலிய வலியற்ற நிலைமையிலிருப்பவர். மற்றொரு வகையினர் இவ்விருவகுப்பினையும் சேராது அன்றாடம் தமது உயிர் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாமே பிறரிடம் வேலைசெய்து கூலி பெற்றோ, வேலைசெய்யாது இரந்துபெற்றோ உண்டு, உடுத்து, உயிர் வாழ்ந்துழலும் நிலைமையில் இருப்பவர். இங்கே கூறப்புகுந்த ஏழைமக்கள் இவ்வகையினரே. முன்னவர் எக்காரணங்கொண்டோ—பிறந்த காரணத்தால் செல்வராகி—ஒரு வேலையையும் செய்யாது உண்டு, உடுத்து, உறங்குவனவற்றையே செய்கையாகக்கொண்டு அயர்ந்திருந்து வாழ்ந்து வருகின்ற

இனி, ஏழைமக்களை உயர்த்தும் உரிமைபூண்டோர், அவர்களுடைய நன்மையின் பொருட்டு உயர்த்த விருப்பமில்லாவிட்டாலும் தங்களுடைய நன்மைகளின் பொருட்டேனும் அவர்களை உயர்த்த முன்வரல் வேண்டும். அறிவற்ற மூடர்களும் முரடர்களும் வறியர்களும் ஆகிய ஏழைமக்கள் செய்யும் தீச்செயல்களாலும் இழிசெயல்களாலும் துன்புற்ற பொருளாளர்களின் வரலாறுகளும், அரசாங்கத்தின் வரலாறுகளும் அவர்கள் சிந்தித்து உணரத்தக்கன.

ஒவ்வொரு பொருளாளரும் தத்தம் பக்கத்தில் இருக்கும் ஏழைமக்களுக்கு இயன்றவளவு இலவசமாகக் கல்வியைக் கற்பித்துவரல்வேண்டும். பல துறைகளிலும் அவர்களை அறிவுள்ளவர்களாக்கப் போதிய உபந்யாசங்கள் முதலிய வசதிகளையும், வாசகசாலை புத்தகசாலை முதலிய இடங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். யாண்டும் நற்குண நற்செய்கைகளும் நல்லொழுக்கங்களும் நிறைந்த அறிவுள்ள சான்றோர்கள் பலருடைய அறவுரைகளைக் கேட்குமாறு செய்வித்தல் வேண்டும். அவர்களது இல்வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாச் சாதனங்கள் பலவற்றையும் இயன்ற அளவு அவ்வப்பொழுது அமைத்து உதவுதல் வேண்டும். இவற்றோடு தாம் செய்துவரும் நற்காரியத்தால் தமக்குப் பின்னே துன்பம் வாராதிருக்கும் வண்ணம் இதுவரையில் இருந்தது போலிராமல்—தம்மிடத்திலுள்ள சோம்பற் றன்மையை நீக்கிக் கொண்டு சிறிது சிறிதாகத் தம்மைத் தொழின்முயற்சியிலே பழக்கியும் வருதல் வேண்டும். இங்ஙனம் செய்வதில் 'நமது நிலைமை குறைகின்றது' நம்மால் உதவப்பெறும் ஏழைமக்களின் நிலைமை உயர்கின்றது என்று எண்ணிக் கன்றுதல் கூடாது. அதுபற்றித் 'தமது கடமை இனிது நிறைவேற்றப்படுகின்றது' என்று பெருமைப்படுவதே நியாயமாகும். 'நம்மால் ஏழை மக்கள் பலர் உயர்த்தப்படுகிறார்கள்' என்ற புகழினைப் பெறுவதிலும் சிறந்த புகழ் மக்களாவார்க்கு வேறு எத்துறையாலும் உண்டாக மாட்டாது. அங்ஙனமின்றி அவர்கள் தங்களது உரிமையையும், கடமையையும் மறந்து வாளா இருக்க, காலசக்கரத்தின் வேகத்தால் ஏழைமக்கள் தாமாகவே முன்னேறிவிடுவார்களாயின் தங்களுக்குவருவது இழிவும், தாங்கொணாத் துன்பமுமே என்பதையும் அன்னோர் உணர்தல்வேண்டும். அரசாங்கமும் இம் முறையிலேதான் ஏழைமக்களை முன்னேற்ற முற்படல் வேண்டும். இவ்விருதிறத்தினரும் "சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந் தொருபாற்—கோடாமை சான்றோர்க் கணி" என்ற வாயுறைவாழ்த்தை

ஆராய்ந்து அறிந்து கோடல் சாலச் சிறந்ததாகும். "நன்னுடில்லான் செங்கோல் நடாத்துவது விழல்" என்ற பாட்டியார் பாட்டும் பாராட்டத் தக்கதாகும்.

இங்ஙனம் அந்த ஏழைமக்களை உயர்த்தாவிட்டால் வரும் தொல்லைகளுக்கோ அளவில்லை. உலகத்திலே பலரும் பிறந்திருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சிற்சில உரிமைகள் இருக்கின்றன. மக்களிலும் இழிந்த விலங்கு முதலியவைகளும் உண்டு, உலவ வுரிமை பெற்றிருக்கின்றன. அவற்றுள்ளும் மக்கட்பகுப்பினர்க்கெனச் சிறப்பாக மூன்று உரிமைகள் இருக்கின்றன. அறவுரிமை, பொருளுரிமை, நியாய உரிமை என்பன அவை. இவை பொருளாதார நூலிற் கண்டன. அறவுரிமை, அனைவர்க்கும் பிறப்பினாலே உண்டாவது. பொருளுரிமை, தொழில் முறையால் வேலைக்குத்தக்க கூலி என்ற வகையில் உண்டாவது. நியாய உரிமை அனுபவத்தால் உண்டாவது. நிற்க, பொருட் பெருக்கமோ 'நியாய உரிமை, நியாய உரிமை' என்று வாய்ப்பந்தர்ப்போட்டுக் கொண்டு அனைவரையும் அடக்கியாள விரும்புபவரிடமே நிறைந்திருக்கும். ஊன்றிநோக்கினால் உறுப்பற்றோர், நோயாளர், முதியோர், இரந்துண்போர் முதலிய அகதிகளாகிய பிறர் கைபார்க்கும் கூட்டத்தினரும்; வேலைசெய்து கூலிபெற்று உழலும் ஏழை மக்களும் ஒரு வேலையையும் செய்யாத அப்பொருளாளர் 'தமது' என்று கருதியுள்ள பொருளைக்கொண்டே உயிர் பிழைக்கின்றனர் என்பது புலனாகும். ஏழைமக்கள் உயர்த்தப்படாவிட்டால் அந்த ஏழை மக்களிலிருந்தும் அகதிகள் கூட்டம் பெருகிக் கொண்டேவரும் என்பதையும் கவனித்தல் வேண்டும். ஒருநாடு முற்கூறிய பல திறப்பட்ட அகதிகளையும் கூட்டங் கூட்டமாகப் பெற்றிருக்குமாயின் அதனை அறிவுடையோர் நல்ல நாடாகக் கருதமாட்டார் என்பது ஒருதலை. "பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்—அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" என்ற மாண்பொருள் இங்கே மனனம் பண்ணிக் கைக்கொண்டொழுகத்தக்கது. இது மாத்திரம் அல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தால் வீணாக அலையும் கூட்டத்தினரால் வேற்று நாட்டினர் எய்திவரும் வேறுவகைத் தொல்லைகளும் சோர்ஆராயற்பாலன. சின்னாட்களாக நமது நாட்டிலும் இந்த வாடை வீசிவருவதும் நோக்கவேண்டியதே. மேலும், ஒவ்வொருவரும் தத்தமக்குற்ற கடமைகளைச் சரிவரச்செய்யாவிட்டால் ஒரு காலத்திலே தகாத செயல்களும், நியாயமற்ற செயல்களும் தகுதியுள்ளனவாகவும், நியாயமானவையாகவும் கருதப்பட்டாலும் படலாம். இவற்றிற்கும் பல சான்றுகள் வரலாற்றில் இருந்தே தீரும். இவற்றின் மேம்பட்ட இழுக்குண்டோ?

இனி, உயர்த்துவதால் வரும்பயன் யாது என்பதைப்பற்றிக் கூறுவது பொருத்தமானது. ஆனால், அதற்கென அதிகம் கூறவேண்டியதில்லை. இத்துணையுங் கூறியனவே போதியவையாம். இங்கே ஒரு சிலர் தமது ஆராய்ச்சியின்மையால் இவற்றை நியாயமற்றவை என்றும், கைக்கொள்ள இயலாதன என்றும் கூறுதல்கூடும். அன்னார் "இன்னும் இருபது ஆண்டுகளுக்குள் இந்தியாவிலே பொதுவுடைமைக் கொள்கை பெரிதும் பரவி விடும்" என்று முற்கூட்டி அச்சுற்றுக்கூறும் அறிஞர்களது ஆராய்ச்சியுரையை ஆராய்ந்து அறியற்பாலர். அன்றியும் ஒருவர்க்கு ஒரு நோய்வரின், காணின், அதனை நீக்கப் பெரிதும் முயன்று நீக்கிவிடுவதுடன் பின்னும் வாரா வண்ணம் தடுக்கவும் வேண்டாவோ? வந்தபின்னர்க் காக்கமுயலுவதிலும் வருமுன்னர்க் காக்க முயலுதல் நல்லதன்றோ? "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்—வைத்தூறு போலக் கெடும்" என்ற முதுமொழி எவ்வளவு முன்னெச்சரிக்கையை வற்புறுத்துகின்றது பாருங்கள். நிற்க, மீட்டும் அச்சிலர் "போகட்டும் கூறியபடியே செய்வோம். அப்பொழுது அத்தீய இயக்கம் நமது நாட்டை அணுகமாட்டாது; அணுகினும் நிலைக்கவொட்டாமல் தடுத்துவிடலாம்' என்பது நிறைவேறக்கூடியதா?" என்று கேட்கலாம். அதற்கு "ஆம். நிச்சயமாகத் தடுக்க இயலும். அது கைவர இங்குக் கூறியபடி ஒவ்வொருவரும் உள்ளன்புடன் உண்மையாய் உறுதிபூண்டு உழைக்க முன்வரல் வேண்டும்" என்று கூறுவது தவறாகாது.

அவ்வழிதான் யாதோவெனின், அதுதான் 'தன் கையே தனக்குதவி'. 'தனக்கும் பிறர்க்கும் பயன்படவே தான் பிறந்திருப்பது'. 'கடவுட் படைப்பிலே அனைவரும் சமமாவர்' என்ற தத்துவங்களை மிகச் சாந்தமான அமைதி நிறைந்த முறையிலே எதும் தீமையின்றி, எவர்க்கும் வெறுப்பும் துன்பும் இன்றி எளிதாகத் தன்னைச் சேர்ந்தவர்களுடைய கல்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம், தொழில், முயற்சி முதலியவற்றை உயர்த்தத்தக்க மிக்கவல்லமையுள்ள கூட்டுறவு இயக்கமேயாகும். இக் கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்து பின்பற்றி இன்புற்ற நாட்டினரும் சமூகத்தினரும் பலராவர். இந்த உண்மை நமது நாட்டினரால் இனிது நன்றி யறியப்பட்டுக் கைக்கொள்ளப்படுமாயின் நாடு மிகவிரைவிலே தொல்லைகளின்றிச் சீர்பெறும். பலதுறைகளிலும் நாட்டினர்க்கு நன்மையுண்டாகும். இங்குக் கூறியன கைவருமாறு முயலுவதே ஏழைமக்களை உயர்த்துவதற்குற்ற வழியாகும்.

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே." — தாயுமானவர்.

# பதி பசு பாசம். *

திருவாளர், K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், B.A.,
சட்டகலாசாலை, சென்னை.

பவளநிறத் தானைமுகன் பாத நினைப்பாம்
பவளமறுப் பானவனன் பர்க்கு. (க)

சிவனை நிரஞ்சனனைச் சின்மயனைச் சீவன்
பவமுமறுப் பானைநினைப் பாம். (உ)

இரவிக் கொளிபோ லிறையொடுறை வாளைப்
பரவிப் பணிவாம் பதம். (௩)

நந்திபத நந்திமா காளரெழு வர்யாவர்
தந்திருத்தா ளும்பணிவாஞ் சார்ந்து. (௪)

பதிபசு பாசந் தொகுத்துப் பகர்வா
மெதுகதியென் பார்க்கெளிதி லே. (௫)

பல்லுயிர்க்கு மேக னமலன் சிவன்பதியப்
பல்லுயிர்க்கு மீசன் பதி. (௬)

உடலொலியின் மூல வொலியுறைதல் போலக்
கடவுளுயிர் தோறுமுறுங் காண். (எ)

ஆதாரம் வேர்மரத்துக் கீச னனைத்துயிர்க்கு
மாதாரம் வேர்க்குமர மன்று. (அ)

ஆகஞ் சடங்கா ணணுவறியா திவ்விரண்டின்
யோகஞ் சிவனுலென் றோர். (௯)

கருமஞ் சடம்பலத்தைக் காட்டாது காட்டு
நிருமல னென்றே நினை. (௰)

---

* ஏட்டுப் பிரதியினின்றும் எடுத்து எழுதப்பட்டது; நூலாசிரியர் பெயர் அறியப்படவில்லை.

சடமாயை தானே சமையா தணுவுங்
கடவுட்கு வான்வினையைக் கண்டு. (கக)

வருத்தியு நல்லன் மருந்துவனோ யார்க்கு
திருத்தனையிவ் வாறுநினை நீ (கஉ)

உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு. (கங)

## பதி

ஆகஞ் சடந்தா னியங்கா ததனையூர்
பாகன் பசுப்பலன்றுய்ப் பான். (கச)

பொறியு முயிரல்ல பொறையுடலு மல்ல
வறிவே யுயிரென் றறி. (கரு)

உறக்கத் துணரா வுடலும் பொறியு
முறக்கமு மோரு முயிர். (கசு)

புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபா வத்தாலு
நண்ணுமுயிர் மேல்கீழ் நடு. (கஎ)

---

## பசு

யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
முன்மலத் தாணு முயிர்க்கு. (கஅ)

செம்பிற் களிம்பென்னச் சிவனொடுற் றேதிமிர
நம்பனைக் காட்டாது நள். (ககூ)

## பாசம்

பரிபாக மாகவிருட் பாசமுடை யூனை
யருவருக்கு மாவிவிருப் பற்று. (உ0)

அப்பொழுது தேசிகனை-யாவேசித் தேயமல
னப்பழுதை நீக்குமரு ளால். (உக)

நீங்கவிரு ளீங்காதே நின்றசிவன் கண்டாவி
யோங்கியபே ரின்பத் துறும். (உஉ)

அனுக்கிரகம்

ஆக்கைசிறை யென்றமலத் தாதரவுற் றூர்க்கிந்த
வாக்கை யறைக மதித்து. (உங)

விடம்பர்க் குரைத்தார் விழுவர் கீழ்மேலா
யடைந்தார்நல் லார்க்கறிவித் தார். (உச)

பக்குவாபக்குவம் பார்த்துணர்தல்

இந்தவிய லைத்திரிவு மின்றியுணர்ந் தார்க்கிருண்ட
பந்தமறும் வாய்த்துறுமின் பம். (உரு)

(முற்றும்)

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

(முற்றொடர்ச்சி—160)

ருக. வேந்து மகலிகையும் வெஞ்சாபம் பெற்றொழியக்
காந்து கடுஞ்சினத்துக் கௌதமர்க்காப்—போந்து
மணக்கோலஞ் செய்தவனை மாய்த்தவனை நெஞ்சே!
மணக்கோலஞ் செய்தவனை வாழ்த்து.

வேந்து-இந்திரன், வெம்சாபம் பெற்று ஒழிய-கொடிய சாபத்தைப் பெற்றுச் சொரூபம் குலைந்துபோமாறு; அன்றி, வெஞ்சாபம் பெற்றுப் பின்பு அச்சாபம் ஒழிய எனலுமாம். சாபம் கொடுத்தவர்தாமே பின்பு அதற்கு நிவர்த்தியையும் செய்தனர் என்க. போந்து-எழுந்தருளி; மணக் கோலம் செய்தவனை—திருமணக்கோலம் செய்து கொண்டவனும்; மணம்

கோல் அஞ்சு எய்தவனை மாய்த்தவனை-(தன்மீது மணமுள புட்பபாணங்கள் ஐந்தனையும் விடுத்தவனான மன்மதனை எரித்தொழித்தவனுமான திருமேனிநாதனை. "ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலுங் கரி" என்று நாயனார் நவின்றபடி, இவரும் இந்திரிய நிக்கிரகஞ் செய்ய மாட்டாமல், மன்மதனது மலரம்புக்கு இலக்காகி மயங்குறும் மாந்தர்க்கு வரும் துன்பத்தினையும், அது செய்தவர்க்கு வரும் பெருமையையும், உவமை முகமாக நன்கு விளக்கித் தன் நெஞ்சுக்கு நல்லுபதேசம் செய்கின்றனர் என்க. பின்னிரண்டடி யமகம்.

௯0. வாழி வயலூர் மணிமிடற்றாய் மாதவனும்
ஆழி யரியுறங்கு மாதலினால்—ஆழிக்
கறைவிடமோ அன்றிக் கமலமலர்ப் போதை
உறைவிடமாக் கொண்டவளோ வோது.

மணிமிடற்றாய் வாழி-நீலகண்டனான நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய். ஆழி அரியுறங்கும்-இலக்குமி பதியான திருமால் உறங்குகின்றான். ஆதலினால், விடம், ஆழி கறையோ-ஆகையால் விடம் என்று சொல்லத்தக்கது திருப்பாற்கடலிலுண்டான அந்த விடமோ? அன்றிக் கமலமலர்ப்போதை உறைவிடமாக் கொண்டவளோ-தாமரையாகிய மலர்ச்சியையுடைய புட்பத்தை இருப்பிடமாகக் கொண்ட இலக்குமியோ?

விடமுண்டார் அஞ்சுவதும், திருவினைப்பெற்றார் வாழ்வதும் இயல்பு. அங்ஙனமிருக்க, விடமுண்ட நீ வாழ, திருவைப்பெற்ற திருமால் துஞ்சக் காரணமென்ன? திருமேனிநாதனே, நீ அக்காலத்து உண்ட விடமோ, திருமால்கொண்ட இலக்குமியோ இவற்றில் எது உண்மையான விடம் என்பதை எனக்குச் சொல்லாய் என்று வினவுகிறார். ஆழி அரி என்பதற்கு, கடல் வண்ணனான திருமால் என உரைத்து, விடவேகத்தால் மேனிகறுத்த திருமால் எனவும் கடலிற் கிடக்கின்ற அரி என உரைத்து, விடத்தினது வெம்மையை யாற்றகில்லாது கடலில் வீழ்ந்த திருமால் எனவும் விசேடங் கற்பித்துரைப்பாருமுளர்.

௯௧. ஓதக் கடலில் உயர்வெள்ளி மால்வரையிற்
சீதக் கமலத்தில் சேர்ந்திருக்கும்—சூதத்
தவநேசன் மால்போற் றனிவழங்குஞ் சீர்த்திப்
புவனேசன் என்னும் பொருள்.

சூதத் தவ நேசன்-தவத்தில் விருப்பமுள்ள சூதமாமுனிவர். மால் போல்-மேகத்தைப் போல. புவனேசன் என்னும் பொருள்-பூமிநாதன் என்னும் பரம்பொருள்.

பூமிநாதன், அரி, அரன், அயன் என்னும் மும்மூர்த்திகளின் வடிவ மாக முறையே பாற்கடலினும் கைலையங்கிரியினும் தாமரைமலரினும் எழுந்தருளியிருக்கின்றனன் என்பதாம். கைம்மாறு கருதாது பகவத் குணமிருதத்தைப் பெய்கின்றமைபற்றி 'மால்போல் வழங்கும்' என்றார். சிவபிரானது திருக்கலியாண குணக்கடலிலே படிந்து, அக்குணமிரு தத்தை, யாரும் உண்டு களிக்கும்படி பெய்கின்றமையான், "மால்போல் வழங்கும்" என்றார் என்றலும் பொருந்தும். "கடலைக் கலக்கி யமுதம ரர்க்களித் தான்களித்தார், குடலைக் கலக்குங் குளிர்சங்கினன்" யேர்ல வேதமாகிய கடலைக் கடைந்து, அதிலுண்டான சிவ்குணமிருதத்தைத் தபோதனர்க்கு வழங்குமவர் என்பார், 'மால்போல் வழங்கும்' என்றார் எனலும் ஒன்று.

## ஆற்றாமை கூறல்.

கஉ. பொருள்செய்யப் போதலுமென் பூமீசன் எந்தை
இருள்செய்யுங் கண்டத்தா ரென்றும்—அருள்செய்யும்
பண்ணின்ற செம்பவளப் பைம்பொற் கொடியொன்றின்
கண்ணின்று முத்துதிரக் கண்டு.

என்றும் அருள்செய்யும்-எப்போதும் தாம் கிருபைசெய்து காக்கின்ற தான, பண்நின்ற செம்பவளம்-பண்கள் தங்கிய செவ்விய பவளத்தைப் பொருந்தியுள்ள, பைம்பொன்கொடி ஒன்றின்கண்நின்று-பசியதோர் பொற் கொடியினிடத்திலிருந்து, முத்து உதிரக்கண்டு—முத்துக்கள் சிந்துதலைக் கண்டு வைத்தும், பொருள் செய்யப் போதலும் என்-பொருள் தேடு வதற்காகப் பிரிந்து போவது எதற்காக.

பொருள்வயிற் பிரியக்கருதிய தலைவன், தனது பிரிவைத் தானே தலைவிக்கு உரைக்க அஞ்சி, தோழியை நோக்கி 'நீ அவட்கு உணர்த்து மாற்றான் உணர்த்து' என்ன, அவள் அங்ஙனம் உணர்த்திய வளவிலே, அது கேட்ட தலைவி ஆற்றாது கண்ணுங் கண்ணீருமாய்ப் புலம்ப, அவ் வருத்தங் கண்டதோழி தலைவனிடம் வந்து, அத்தலைவியின் பிரிவாற்றா நிலைமைக் கூறுதல் இச்செய்யுளிற் போந்தபொருள். 'பொருள் செய் யப் போதலுமென்' என்பதற்குத் தலைவன் என்ற எழுவாயைத் தந்து,

பூமீசன் தொடக்கமானவற்றைப் பொற்கொடிக்கு விசேடண மாக்கலும் ஒன்று. 'பூமீசன் எந்தை', 'இருள் செய்யும் கண்டத்தார்' என்றன முன்னிலைப் படர்க்கை. இனி இவற்றை இயல்பாகிய அண்மைவிளி யெனினும் அமையும். திருக்கோவையாரில், 'தேனகத்தார்மன்னன் என்னே இனிச்சென்று தேர்பொருளே' என்றவிடத்து, பேராசிரியர் 'மன்னன் என்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்தது; இயல்பு விளியென் பாருமுளர்' என்றதுங்காண்க. பண்ணின்ற செம்பவளம் என்றது வாயை; கண்-விழி, முத்து-கண்ணீர். பவளத்தோடு கூடிய பொற்கொடி ஒன்று முத்தைச் சொரியாநிற்கக்கண்டும் இன்னும் பொருள் செய்யப்போதலு மென் எனவும், பைம்பொற் கொடிபோன்ற தலைவி கண்ணீர் சொரிந்து வருந்துதலைக்கண்டும் பொருள்செய்யப்போதலுமென் என்வும், பொருள் படக் கூறினளென்க. வேறு திக்கற்று, தம்மையே நம்பிச் சரண்புகுந்த ஓர் பெண்ணைக் காக்க இயலாத இவரோ முன்னம் விடத்தையுண்டு திருமால் முதலிய தேவர்களைக் காத்தவர் என்று பரிகசிப்பாள் 'இருள் செய்யும் கண்டத்தார்' என்றாள். விடகண்டருக்குக் கிருபையெங்ஙனம் உண்டாகும் என்ற குறிப்புமாம். புவனேசன் இருள் செய்யும் கண்டத்தார்-ஒருமை பன்மை மயக்கம். 'கொண்டவர் முனிவரன்' என்ற சிந்தாமணியிற் போல. "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" என்ற திருக்குறளின் உரையில் ஆசிரியர் பரிமேலழகர், "என்னீ ரறியாதீர் போல விவைகூறல், நின்னீரவல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல, இழித்தற்கண் பன்மை யொருமை மயங்கிற்று" என்றதும் காண்க. "அருந்தவன் யாவனீர்" என்பது கம்பராமாயணம்.

௯௩ கண்ணனார் கண்ணைக் கழல்வைத்தார் காமுற்ற
திண்ணனார் வைத்தார் திருமுகத்திற்—கண்ணனார்
கல்லடியாற் புண்பட்ட கண்ணுதலே! பூமீசா!
நல்லடியார் யாரே நமக்கு.

கண் அனார்-கண்ணையொத்த இனியவரான சாக்கிய நாயனார் எறிந்த கல் அடியால் புண்பட்ட கண்ணுதலே—கல்லடியினாலே புண்பட்ட பாலலோசனனே! கண்ணனார்-கண்ணனாகிய திருமால். நமக்கு-தேவரீருக்கு. இது இப்பொருளாதல் 21ம் செய்யுட் குறிப்புரையில் காட்டப்பட்டது.

கண்ணையிடந்து அருச்சித்த காரணத்தால் கண்ணன் என்வும், கண்ணப்பர் எனவும் காரணப்பெயர் பெற்றவர்களான திருமால், திண்ணன் என்னும் இவ்விருவரில் நமக்குச் சிறந்த நல்லடியார் யாவர்? எனவினவு

கின்றனர் என்க. சிறந்த அடியார்களில் ஒருவரானமையின் திருமாலைக் "கண்ணனார்" என்று உயர்வு குறிக்கும் ஆர்விகுதி கொடுத்துக்கூறினார். கண்ணன் கண்ணிடந்து கழலில் வைத்தது சக்கராயுதத்தையடைய வேண்டி. திண்ணன் கண்ணிடந்து திருமுகத்தில் வைத்தது, சிவபிரான் கண்ணுடைனாய்த் திகழவேண்டி. உனது நன்மையே தமது நன்மையாகக் கொள்ளும் திண்ணனார், பூசைமுறைக்கு ஏற்பக் கண்ணைக் கழலில் வைத்த கண்ணனினும் தாழ்ந்தவர் போலக் காணப்படினும், உள்ளன்பில் மிக்கவராதலின், தன் நன்மையை நாடிய அக்கண்ணனினும் சிறந்தவராவர் என்பதாக 'நல்லடியார் யாரே நமக்கு' என்ற வினாவிற்கு உத்தரத்தையும் உணர வைத்தார். சிறுத்தொண்டர் என்பதற்குச் சிறியதொண்டர் என்று பொருள் செய்துவிடாமலிருச்கும்படி 'பெருந்தொண்டராஞ் சிறுத் தொண்டர்' என்று கூறுவார்போல, இவரும், திண்ணனார் என்பதற்கு மெய்வலியுடையார் எனப்பொருள் கொள்ளாமலிருக்கும்படி, அன்பினது வலிமையைக் கொண்டவர் எனத் தாம்கொண்ட பொருளை வெளியிட்டுக் 'காமுற்ற திண்ணனார்' எனக்கூறினார்.

௯௨ நமக்குத் தலைமை நமக்கில்லை நெஞ்சே!
சுமக்கும் பிரான்சுழியற் றோன்றல்—நமக்குச்
சுதந்தரந்தான் தொண்டு சுவர்க்கமுத லாகும்
பதந்தரன்மற் றன்னோன் பரம்.

நமக்குத் தலைமை- நமக்குத் தலைவனாயிருக்குந்தன்மை; சுமக்கும்பிரான்- இத்தலைமையை வகிக்கும் பெருமான்; நமக்குச் சுதந்தரம்-நமக்கு உரிமையாயிருப்பது, தொண்டு-பணிவிடையொன்று மாத்திரந்தான்; பதம்-பதவிகள், அவன் பரம்-அவன் பொறுப்பு.

சொத்து அவனுடையது; சொத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் கவலையும் அவனுக்கே; நெஞ்சே! நம்முடையது என்று வீணாக எண்ணிக் கவலை கொள்ளாதே. எம்பெருமானுக்குத் தொண்டு செய்தலை மாத்திரம் மேற்கொள் என்று நெஞ்சுக்கு உண்மை விளக்கி அறிவுறுத்துகின்றனர் என்க. தோன்றல்-ஆண்பாற் சிறப்புப்பெயர்.